
வானதி
பதிப்பகம்

# கம்பன் கலைக்கோயிலுக்கு ஒரு கைவிளக்கு

பி.ஸ்ரீ ஆசாரியா
சரசுவதி ராமநாதன் எம்.ஏ.





# கம்பன் கலைக்கோயிலுக்கு ஒரு கைவிளக்கு



பி. ஸ்ரீ.
சரசுவதி இராமநாதன்

வானதி பதிப்பகம்
தி.நகர் · சென்னை-17

முதற்பதிப்பு : மே, 1980

9-5-80, புதுவைக் கம்பன் விழாவில் வெளியிடப் பெற்றது.

திருநாவுக்கரசு தயாரிப்பு

விலை ரூ. 7-00

நன்றி

நெல்லை மாவட்டக் கம்பன் கழகம்

பாளையங்கோட்டை

அச்சிட்டோர் : மூவேந்தர் அச்சகம், சென்னை-600014.

291



# வாசல் இது

கம்பராமாயணம் ஓர் அருங்கலைப் பொக்கிஷம். தமிழர்களாகிய நாம் பாக்கியசாலிகள். கம்பனைத் தமிழகத்தின் ஷேக்ஸ்பியர் என்று கூறி வந்ததுண்டு, அது பல்லாண்டுகளுக்கு முன்; இன்றோ ஷேக்ஸ்பியரைப் பயின்றிருக்கும் நாம் அந்த நாடக மாகவியை 'ஆங்கில நாட்டுக் கம்பன்' என்று சொல்லுவதில் பெருமையடைகின்றோம்.

கம்பன் தன் இராமாவதாரத்திற்கு வான்மீகத்தை ஆதாரமாகக் கொண்டுள்ளான். ஆனால் தமிழர் பண்பாட்டிற்கு இசைந்தவாறு சில இடங்களில் அடிப்படையையே மாற்றி அமைத்திருக்கிறான். வான்மீகியை மறுத்தும் கூறியுள்ளான்.

ஓர் உதாரணம், சீதையை இராவணன் தொட்டுக் கவர்ந்து கொண்டு போனதாக வான்மீகி கூறியுள்ளான். கம்பனோ பர்ணசாலையோடு பெயர்த்துக் கொண்டு போனதாகக் கூறுகிறான் அவன் பிராட்டியைத் தொட்டிருந்தால் அண்டமே பிளந்து போயிருக்கும், அது நேராததால் சீதையை அவன் தொடவில்லை என்பது சத்தியம். இத்தகைய மாறுதல்கள், கம்பராமாயணத்தை ஒரு தழுவல் நூல் என்ற நிலையை அறவே மாற்றிப் புத்தம் புதிய காவியமாகச் செய்துள்ளன.

''இப்படியெல்லாம் மாறுதல் செய்திருக்கிறுயே, ஆதாரம்?'' என்று அந்த நாளிலும் அறிஞர்கள் கேட்டிருக்கக் கூடும். இதற்குப் பதிலாக ''நானும் அறியேன், அவளும் பொய் சொல்லாள்'' என்றுனும். தனக்குக் கலைமகள் வழி காட்டினுள் என்பது கம்பனின் நம்பிக்கை.

கம்பன் தாய் மொழியை நன்கு பயின்றதோடு வட மொழியிலும் தக்க பயிற்சி பெற்றிருந்தான் என்பதற்குக் கம்பராமாயணம் முழுவதும் சான்று. கம்பன் வாழ்க்கைச் சரிதம் இல்லையே என்று கவலைப்படுவோர்க்கு அது கம்பன் காவியத்திலேயே ஊடுருவிக் கிடக்கிறது என்று பதில் சொல்லிவிடலாம். கம்பன் தன் காவியத்தை ஓர் இதிகாஸ மாக ஆக்கியுள்ளான்.

''வாங்கரும்பாதம் நான்கும் வகுத்த வான்மீகி என்பான்
தீம்கவி, செவிகள் ஆரத் தேவரும் பருகச் செய்தான்''

என்று கூறுவதிலிருந்து வான்மீகியினுடைய இசைப்பண்பு கம்பனை எப்படி வசீகரித்திருக்கிறது என்பதை நன்கு உணர்ந்து கொள்ளலாம். அந்தக் கவியின் இசைக்குத் தன் உள்ளத்தைத் திரை கொடுத்தான் எனலாம்.

தமிழில் விருத்தப்பாக்கள் வான்மீகியின் சுலோகத்தைத் தழுவிப் பிறந்தவை. ஆனல் கம்பன் எத்தனை வகையான விருத்தங்களை இயற்றியுள்ளான்?

''வண்ணமும் தொண்ணூற்றுறே'' என்று பின்னே வந்த புலவர் கூறியிருப்பினும், அதற்கு மேல் பல்வேறு வண்ணங்களை அமைத்துள்ளான் என்று தெரிய வருகிறது.

கம்பனது இசைச் செல்வத்தைத் நாளது வரை யாரேனும் முழுவதும் கண்டுவிட்டதாகச் சொல்லமுடியுமா?

இசைக்கு அடுத்தபடியாக மனோபாவந்தான் கவிஞனுக்கு மூலதனம். அந்த மூலதனம் இல்லாமல்—கவிக்கடை போடுவ தெல்லாம் வீண் முயற்சியே.

கம்பனது மனோபாவம் [Imagination] பல்வேறு வடிவங்களைக் கொண்டு ஒரு அற்புத சித்திரசாலையைப் படைத்திருக்கிறது. எனவேதான் இதை 'கம்பசித்திரம்' என்கிறோம்.

இதற்கு மேலாக கம்பனிடம் நாம் காண்பது நாடகப் பண்பு. ''கம்ப நாடகம்'' என்று மணவாள மாமுனிகள் கூறுவது சிந்திக்கத்தக்கது. இவற்றையெல்லாம் உற்று நோக்கும்போதும், ஊடுருவிப் பார்க்கும்போதும் நமக்குத் தோன்றுவதுதான் என்ன?

இது மொழி பெயர்ப்புமன்று, சார்பு நூலுமன்று, ''முதல் நூல்'' என்றே முடிவு கட்டத்தக்க இலக்கிய படைப்புத்தான் கம்பராமாயணம்.

''நமக்குத் தொழில் கவிதை'' என்றான் பாரதி. இந்த உண்மை, கம்பனை நோக்கும்போது அதிக அளவில் தெரிகிறது. ''ஆசை பற்றி அறையலுற்றேன்'' என்று கம்பராமாயண முகப்பில் கூறப்படுவதிலிருந்து இவனது ''ஆசையின் கனி''தான் இராமாவதாரம் என்பது தெளிவாகும். அடுத்தபடியாகத்தான் சடையப்பவள்ளலின் தூண்டுதல் உதவியிருக்கவேண்டும்.

கம்பனுடைய கவிதையின் அபூர்வ எளிமைக்கும், இசைப்பண்புக்கும், நாடகத்திறனுக்கும் மனோபாவத்திற்கும் ஈடாக எந்தக் கவியைத்தான் சொல்ல முடியும்.

''Thou art simple as a song''

ஆண்டவனை நோக்கி, 'நீ ஒரு பாட்டைப் போல் அவ்வளவு எளிமையானவன்,' என்கிறார் கவி ரவிந்திரநாத்

தாகூர். ஆம், கம்பன் பாடலைப்போல் அவ்வளவு எளிமையானவன், காவிய நாயகனாகிய இராமன்.

எவ்வளவோ கஷ்டங்களுக்குப் பின் இலக்குவன் இந்திரசித்தை வதம் செய்கிறான். போர்க்களத்திலிருந்து திரும்பும் இலக்குவனை இராமன் அணைத்துக் கொள்கிறான். மகிழ்ச்சியால் பேசவே முடியவில்லை. பின்னர், தானே போர்க்கோலத்தைக் களைய உதவி செய்கிறான். இந்த ஒரு சந்தர்ப்பத்தில் மட்டும்தான் இராமன் தன் தம்பிக்குப் பணி செய்கிறான். மற்ற இடங்களிலெல்லாம் இலக்குவன்தான் பணி செய்வதாக வருகிறது.

பின் இலக்குவனைப் பாராட்ட, "ஆடவர் திலக" என்று தொடங்குகிறான். அதே சமயத்தில் விபீஷணன் அங்கு வருகிறான். உடனே தம்பிக்குப் பாராட்டுரை வழங்கலை விட்டு,

'ஆடவர்திலக! நின்னால் அன்று; இகல் அனுமன் என்னும்
சேடனால் அன்று; வேறு ஓர் தெய்வத்தின் சிறப்பும் அன்று;
வீடணன் தந்த வென்றி, ஈது' என விளம்பி மெய்ம்மை,
ஏடு அவிழ் அலங்கல் மார்பன் இருந்தனன், இனிதின்,
இப்பால்,

என்கிறான். இவ்வாறு ஒரு நாடகக் காட்சியையே ஒரு பாடலில் காட்டுவது கம்பனுக்குக் கைவந்த கலை.

ஆக்கியோன் பெயரைச் சொல்லுவது நெடுங்கால மரபு என்றாலும், கம்பனின் பெயர் இந்த இதிகாஸத்தின் முகப்பிலோ அல்லது உள்ளே வேறு இடங்களிலோ வரவில்லை. இருப்பினும் நன்றியுள்ள பிற்காலத் தமிழ் மக்கள் "இராமாவதாரம்" என்ற பெயரைக்கூட சொல்லாமல், கம்பன் என்ற பெயரோடு நூலின் பெயரையும் சேர்த்துக் 'கம்பராமாயணம்' என்றே வழங்குவாராயினர்.

சடையப்ப வள்ளலைப் பற்றிப் பாடப்பட்டுள்ள சதகச் செய்யுளை நோக்குவோம்; கம்பனுக்கும் அவனுக்குமுள்ள தொடர்பு புரியும்.

பெற்று' வளர்த்தும், வித்தைதனை;
பேணிக் கொடுத்தும், பொருள் கொடுத்தும்,
பற்ற அரும்பால் அமுதளித்தும்,
பகைத்த வறுமை பயம்தீர்த்தும்,
கற்றமுதல் நூல் திருவெழுந்தூர்
கம்பன் தழையக் கருணை செய்தார்;
மற்று பரவோரையும் வாழ
வைத்தார் சோழ மண்டலமே.

சடையப்ப வள்ளல் கம்பனைக் காட்டிலும் வயது முதிர்ந்தவர். கம்பனைக் குழந்தைப் பருவத்திலிருந்தே, வளர்த்து வந்தவர். கல்விப் பயற்சியளித்ததும் இந்த வள்ளல்தான். அது மட்டுமா! கம்பன் மெய்ம்மறந்து இராமாயண பாத்திரங்களைக் கண்ணாரக் கண்டு பாடிக் கொண்டிருக்கும்போது ஒரு கிண்ணத்தில் பாலோடு காத் திருப்பாராம் (கம்பன் பாடுவதற்கு இடையூறு விளைவிக் காமல்). கவிஞன் கண்களை மலர விழித்து நோக்கியதும், 'இந்த அருமையான திருமேனிக்குப் பலவீனம் ஏற்பட லாகாதே' என்று, 'இதோ பக்குவமாக, காய்ச்சிய பால், இதைக் கொஞ்சம் பருகலாமே' என்று உபசரிப்பாராம். வறுமைப் பயம் ஏற்பட்டால் கவிதை ஊற்றுக்கண் நின்று போகக்கூடுமே என்று, வேண்டிய பொருளுதவி காலம் பார்த்துச் செய்து வந்தார். சடையப்ப வள்ளல் வாழ்ந்தது வெண்ணெய்—நல்லூரில். கம்பன் வாழ்ந்ததோ திருவெழுந் தூரில். "கம்பன் தழைய" என்ற சொற்றொடர் கவனத்துக் குரியது. அபூர்வமான மூலிகை போன்றவன் கவிஞன். அதிக வெயிலும் கூடாது; அதிக நிழலும் கூடாது. எவ்வளவு ஜாக்கிரதையாக வள்ளல் இம்மகாகவியை ஆதரித்து

வந்திருக்கிருர் பாருங்கள்! அந்த மேதையை ஆதரித்ததுடன் வேறு புலவர்களையும் வாழ வைத்தார் அவ்வள்ளல் என்பர்!

சடையப்பர் கொடை வள்ளலாக இருந்ததோடு பரம ரசிகஞகவும் இருந்தார். தன்னை வள்ளல் என்று காட்டிக் கொள்ளாமல் கம்பனே தன்னைவிட மேலான வள்ளல் என மதித்து வந்தார். இத்தகைய வள்ளலை இன்று வேறு வடிவில் நாங்கள் காணும் பாக்கியம் பெற்றிருக்கின்ரேம். அவர்தாம் பாளை ஈன்ற நன்முத்தாம் சுந்தரம் பிள்ளை அவர்கள். இவரது தூண்டுதல் இல்லாவிட்டால் இந்நூல் வெளி வந்திருக்க முடியாது. இதயமாளிகையில் சிறப்பான இடமளித்துள்ளவருக்கு இந்நூலை அர்ப்பணம் செய்கிரேம்.

வாசல் இது, வாசல் இது. வளர்ந்தோங்கும் வாசல் இது.

பி. ஸ்ரீ.

சரசுவதி இராமநாதன்

# எங்களுக்கு வழிகாட்டியவர்கள்

"கல்வி சிறந்த தமிழ்நாடு—புகழ்க்
கம்பன் பிறந்த தமிழ்நாடு—"

என்ருன் மகாகவிபாரதி. பாரதியின் இந்த அடிகள் கம்ப னில் யாருக்கும் ஒரு ஈடுபாட்டைத் தோற்றுவிக்கும். எனக்கும் அவ்வாறே. பாரதியாரும், நானும் நெருங்கிய நண்பர்கள்.

அடுத்தபடியாகக் கம்பனைக் காண எனக்கு வழிகாட்டியவர் ஆராய்ச்சிப் பேரறிஞர் வையாபுரிப்பிள்ளை. கம்பராமாயணத்திற்கு அந்தக் காலத்தில் புத்தக வடிவம் கிடையாது. ஏட்டினைப் பார்த்துத்தான் படிப்பர். பிறகு, கல்லூரி வகுப்புகளுக்குப் பாடமாகச் சில படலங்களையோ, பாடல்களையோ தொகுத்து வெளியிட்டனர். முதன்முதலில் இராமாவதாரத்தை அச்சிட்டு வெளியிட்டவர்கள் வை. மு. சடகோப ராமானுஜாச்சாரியாரும், சே. கிருஷ்ணமாச்சாரி யாரும் ஆவர். அப்பால், வை. மு. கோபாலகிருஷ்ணமாச் சாரியார் ஆறு காண்டங்களையும் வெளியிட்டார். சுமார் முப்பதினுயிரம் ரூபாய் செலவில் வையாபுரிப்பிள்ளை சிறந்த பதிப்பு ஒன்றை வெளியிட முயன்ருர். அந்த நோக்கம் நிறைவேறவில்லை. அவரைப் பின்பற்றியே கம்பனை இலக் கிய ஆராய்ச்சி முறையில் அணுகவும் கற்கவும் முனைந்தேன்.

ஆனந்த விகடன் பத்திரிகையின் அதிபரும், எனது நண் பருமான S. S. வாசனின் வற்புறுத்தலுக்கு இணங்கி நான்

கம்பனை விளக்கமாகவும், திறனாய்வு முறையிலும் ஆராய்ந்து கட்டுரைகள் பல எழுதினேன். அவை ஆனந்த விகடனில் பல ஆண்டுகள் தொடர்கட்டுரைகளாக வெளிவந்துள்ளன. இப்போதும் கம்பனைக் கற்பதிலும், ரசிப்பதிலும் என்னுடைய நாட்கள் பயனுள்ள விதத்தில் கழிகின்றன என்றால் அதற்கு மேற்குறித்தவர்களின் தூண்டுகோல் காரணம். எனது இந்த 95 வயதில் என்னை ஆதரிக்கும் M. S. சுந்தரம்பிள்ளை அவர்களின் ஆர்வமும் செயல்திறனும் இந்த நூல் உருவாகக் காரணம். அனைவருக்கும் என் உள்ளம் உவகையுடன் நன்றி பாராட்டுகிறது.

பி. ஸ்ரீ.

1. அறியாத பருவத்திலேயே கம்பன் கவிதைகளை இசைப் பாடல்களாக என் நாவில் பயில விட்ட தேவகோட்டைத் தமிழிசைப்பள்ளி இசையாசிரியப் பெருந்தகைகளை நன்றியுடன் நினைவு கூர்ந்து வணங்குகிறேன்.

2. எங்கோ கிடந்த என்னை ஏற்றம்பெற வைத்துக்
கம்பன்பணிக்கு ஆளாய்க் கனிவோடு ஏற்றிட்ட
கம்பன் அடிப்பொடியார் பாதமலர் பணிகின்றேன்.

3. கம்பன் மேடையிலே கற்றுக்குட்டியாக வந்தஎனை
அன்பு மகளாய் ஏற்று, ஆசானாய் அமைந்து, பல்லோர்
அவையத்துப் பாங்குடனே முன்னிருத்தி
என் வளர்ச்சி தனைக்கண்டு இதயம் பூரித்த
அமரர் தமிழ்க்கடல் ராய. சொ. வுக்குத் தலையலால்
கைமாறிலனே.

4. இலக்கிய ரசிகர்களுக்கும், கம்பன் கழகத்தார்
அனைவருக்கு

5. நல்லறிஞர் பலரது கருத்துக்களை அச்சாக்கி நாடெல்லாம் பரப்பிவரும், நற்றொண்டு புரிந்துவரும், எங்களூர்

(தேவகோட்டை) 'வானதி' திரு. திருநாவுக்கரசு அவர்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும். அவருக்கு நன்றியும், வணக்கமும்.

6. சித்திர ராமாயணத்தால் என்னை இலக்கியத்துறைக்கு ஈடுபடுத்தி, தன்னுடைய அரு முயற்சியுடன் என் எளிய முயற்சியும் சேர வாய்ப்பளித்த மூதறிஞர் பி.ஸ்ரீ. அவர்கட்கு நன்றி நிறை நல்வணக்கம்.

7. "செம்பொன் எனவே சீர்கவி தந்தவன்
செந்தமிழ் மாக் கவிஞன்
அம்புவி போற்றிட ஆரா வமுதனின்
அருட்கதை ஆக்கி யவன்,
பம்பிய சொற்குழு பாதம்இ றைஞ்சிடப்
பண்புடன் ஏற்றருள் சீர்க்
கம்பன் அடிப்பொடி சென்னியில் சூடிடும்
உங்கள் கடைப்பொடி நான்"

சரசுவதி இராமநாதன்

# நமக்குள்ளே...

கம்பன் புகழைப் பாரறியப் பரப்புவதே தம் வாழ்வின் குறிக்கோள் எனக் கொண்ட (காரைக்குடி வாழ் கணேசனுராம்) கம்பன் அடிப்பொடியாரை அறியாதார் அறியாதார்தாம். பட்டி தொட்டியெங்கும் கம்பநாடர் கவிதைகள், இராமகாதை இவை பரவ வழி செய்தவர் அவரே. இக்கால இலக்கிய வளர்ச்சி ஒருபுறம் நிறைவையும் மகிழ்வையும் தந்து நிற்கிறது. ஆயிரக்கணக்கானோர் மதம், வயது, கல்வி, பதவி வேறுபாடின்றிக் கம்பனை ரசிப்பதில் எம்மனோருக்குப் பெரு மகிழ்ச்சிதான். ஆனால் சில இடங்களில் சில பேச்சாளர்களாலும், ரசிகப் பெருமக்களாலும் கம்பன் கவித்திறமும், பாத்திரங்களும் மாசுபடுத்தப்படுவது பலரது மனத்துயருக்குக் காரணமாகிறது.

பட்டி மண்டபங்கள், வழக்காடு மன்றங்கள் இலக்கியத் திறனாய்வாக மக்களுக்கு இன்பமும் அறிவும் மிகுதியாக்கப் பயன்படுவதுண்மைதான். ஆனால்,

'ஆண்டு பன்னிரண்டு காவியம் பயில்வார்
ஆழ்ந்திருக்கும் கவியுள்ளம் காண்கிலார்''

என்று கவியரசர் பாரதி சொல்லுமாப்போலே, கவிஞரின் உள்ளம் புரியாமல் பேசுவது தவறு. கம்பன் இராமகாதையை எந்த நோக்கத்தில் எழுதினான்? எந்தெந்தப் பாத்திரம், குணத்தில் குறையுடையதாகப் படைக்கப் பெற்றிருக்கிறது —என்பதெல்லாம் உணராமல் பேசலாமா?

'பன்னருங்கலை தெரி பட்டிமண்டபமாக' மலர்வதை விட்டு வெட்டி அரட்டை மண்டபங்கள் ஆக்குவது அறிஞர்க்கு அழகா? அவரவர் வாக்குவன்மையால் கம்பனை முட்டாளாக்கிவிட்டுக் கைதட்டும், பாராட்டும் பெறுவதா? வாதம் விதண்டா வாதமானுல்—வேகம் விவேகமற்றதாகி விட்டால் காப்பியம் என்ன ஆகும்? சில 'அறிவு'ப் பாசறைப் பேச்சாளர்கள்—"ஷேக்ஸ்பியருக்கு இன்றுவரை எத்தனை திறனுய்வு நூல்கள் வந்துவிட்டன! கம்பனுடைய பாத்திரங் களை அப்படி ஆராய்ந்தால் என்ன? பத்தாம் பசலிகள் வெறுக்கிறுர்களே!" என்று அங்கலாய்த்து முழங்குகின்றனர். ஹேம்லெட்டை, ஒதெல்லோவை வைக்கிற இடத்தில் இராமனை வைத்து எடை பார்க்கலாமா? கூனி, சகுனி, குடிலன் என்ற பாத்திரங்களைத் திறனுய்வு செய்வது போல பரம்பொருள் இராமனைத் திறனுய்வு செய்ய முடியுமா? செய்யலாமா? அவனை வழிபடு கடவுளாகக் கொண்டு எழுந்த காப்பியம் கம்பனது இராமாவதாரம். அவனை வழிபடும் பக்தர் பல்லாயிரவர் உளர். இராமா யணத்தைப் பாராயணம் செய்து பலன் பெறுபவர் பலர். அப்படியிருக்கையில் இராமன் குற்றவாளி! இராமன் செய்தது குற்றமே—என்று பேசலாமா? பிற சமயத்தவரின் அவதார புருஷர்களைப்பற்றி இவ்வாறு திறனுய்வு செய்வார் களா? செய்ய முடியுமா? யோசித்துப் பாருங்கள்.

'நடையில் நின்றுயர் நாயகன்' இராமன் என்றும், 'அவன் குணப் பெருங்கடல்' என்றும், 'காசில் கொற்றம் அவனுடைய வீரம் என்றும் கம்பன் பேசிய ஒருவனை, மானுடம் வெல்ல மானுடவடிவம் தாங்கி வந்த அண்ணலைக் குற்றவாளியாக்க நாம் யார்? இதுதான் வளர்ச்சிக்கு வழியா? சுவைக்கும் முறையா?

2 91



இதையெல்லாம் யோசித்த நெல்லை மாவட்டத்துக் கம்பன் கழகம் கம்பனைக் கற்போருக்கு ஒருசில செய்திகளைச் சொல்ல நினைத்தது. அதை நூலாக்கித் தந்துள்ளது. எழுத்துத் துறையில் ஜாம்பவான் திரு. பி.ஸ்ரீ. பழுத்த மன முடையவர். பேச்சுத் துறையில் (வயதால் இளைய தலைமுறை யினராயினும்) அனைத்திந்தியப் புகழ் பெற்ற சரசுவதி இராம நாதன் பட்டி மண்டபங்களில்—வழிக்காடு மன்றங்களில் பாங்கறிந்து ஏறுபவர். இருவரையும் இந்த நூலை ஆக்கித்தர வேண்டினோம்! இது உங்கள் கையில் தவழ்கிறது.........

நெல்லை மாவட்டக் கம்பன் கழகம்,
பாளையங்கோட்டை.

# பதிப்புரை

கம்பன் கவிநயச் செல்வர் உயர்திரு பி. ஸ்ரீ. அவர்களும், செந்தமிழ்ச் செல்வி திருமதி சுரசுவதி இராமநாதன் அவர்களும் எழுதிய 'கம்பன் கலைக் கோயிலுக்கு ஒரு கை விளக்கு' என்னும் அற்புத மான நூலை பாளையங்கோட்டை நெல்லைக் கம்பன் கழகத்தார் எழுதச் செய்து அதனை வானதி பதிப் பகத்தில் பதிப்பிக்கும் பணியினை, பாக்கியத்தை அருளியிருக்கிறார்கள். இது இலக்கிய ரசிகர்களின் உள்ளொளியைப் பெருக்கும் என்ற நம்பிக்கையில் இந்தக் கைவிளக்கை வானதி பதிப்பகத்தில் பதிப் பித்துள்ளோம்.

இதனை உருவாக்கிய கம்பன் கலைத் தந்தை பி. ஸ்ரீ. அவர்களுக்கும், செந்தமிழ்த் திருவாட்டி திருமதி சுரசுவதி இராமநாதன் அவர்களுக்கும் இதனைத் தேர்ந்தெடுத்துக் கொடுத்த பாளையங் கோட்டை நெல்லை கம்பன் கழகத்தாருக்கும் நெஞ்சார்ந்த நன்றி.

இந்த நூலைத் தமிழ் மக்கள் பெரிதும் வரவேற் பார்கள் என்ற நம்பிக்கை எனக்குப் பெரிதும் உண்டு.

வானதி ஏ. திருநாவுக்கரசு

## பொருளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| | வாசல் இது | ... | 3 |
| | எங்களுக்கு வழி காட்டியவர்கள் | ... | 9 |
| | நமக்குள்ளே | ... | 12 |
| | பதிப்புரை | ... | 15 |
| 1. | கால் வண்ணம் இங்குக் கண்டேன் | ... | 17 |
| 2. | நல்லருள் துறந்த நாடகம் | ... | 21 |
| 3. | வஞ்ச மகளிடம் கொஞ்சலா? | ... | 29 |
| 4. | மான் பிடிக்கச் சொன்ன மயில் | ... | 39 |
| 5. | வீரன் வில்லறம் துறந்தானா? | ... | 43 |
| 6. | வீடணன் துரோகியா? தியாகியா? | ... | 55 |
| 7. | கும்பகர்ணன்—முரண்மயமா? | ... | 74 |
| 8. | இறுதிவரை சீதையின் நினைவா! | ... | 101 |
| 9. | அவதார மூர்த்தியின் நாடகம் | ... | 105 |
| 10. | "இன்னல்செய் இராவணன் இழைத்த தீமை" | ... | 119 |
| 11. | எல்லாம் அறுபதினாயிரம் | ... | 148 |
| 12. | ஓங்கி உலகளந்த உத்தமன் | ... | 150 |

# 1. கால் வண்ணம் இங்குக் கண்டேன்

கம்பனின் இராமாவதாரக் காப்பியம் வெறும் வரலாற்றுச் செய்தித் தொகுப்பு அன்று. அதன் தலைவன் ஸ்ரீ இராமனும் நம்மைப் போன்ற சராசரி மானுடன் அல்லன். காகுத்த வேடம் கட்டி வந்து மானுடனாகக் காட்சி தந்தாலும் அவன் "பாற்கடலில் பையத் துயின்ற" பரம் பொருள் என்பதை மறக்கக்கூடாது. அணிமாட அயோத்தி என்னும் அணிநகரில் வெங்கதிரோன் குலத்துக் கோர் விளக்காகத் தோன்றிய இராமனின் அமானுஷ சக்தியைக் காட்டும் அற்புதமான முதல் இடம் அகலிகைப் படலம். மைவண்ணத்து அரக்கியாம் தாடகையுடன் போரிட்டு இந்த மழை வண்ணத்து அண்ணல் தன் கை வண்ணம் காட்டியது மிகப்பெரிய வீரம்தான். ஆனால் இராமன் பரம்பொருள் என்பதை மறவாமல் காட்டிச் செல்ல நினைக்கும் கவிச்சக்கரவர்த்தி அகலிகைப் படலத்தை வைக்கிறான்.

## அறிமுகம்

அகலிகையை அறிமுகப்படுத்தும் கம்பன், "மனையின் மாட்சியை அழித்து இழி மாதவன் பன்னி" என்கிறான். (மனை யறத்தின் மாட்சியை அழித்தவள்.) அவள் கருங்கல்லாகக் கிடக்கும் இடத்திற்கு விசுவாமித்திர முனிவனும் இராம, இலக்குவரும் வருகின்றனர்.

"கண்ட கல்மிசைக் காகுத்தன் கழல் துகள் கதுவ
உண்ட பேதைமை மயக்கற வேறுபட் டுருவம்
கொண்டு, மெய் உணர்பவன் கழல் கூடியது ஒப்ப—
பண்டை வண்ணமாய் நின்றனள்—மாமுனிபணிப்பான்."

(அகலிகைப் படலம்-பாடல் 14)

மெய்யுணரும் ஞானி, இறைவனது திருவடிகளைப் பற்றிக் கொள்ள, பேதைமையால் ஏற்படும் மயக்கம் நீங்குவது போல—அகலிகையும் பாவம், சாபம் நீங்கிட பண்டை வண்ணம் (பாவமில்லாத—பரிசுத்த நிலையை) அடைந்தாள். மின் என ஒதுங்கி நின்ற அவள்தான் தேவர் கோவாம் இந்திரனுக்கு ஆயிரம் செங்கண் அளித்த கௌதமன் மனைவி—அகலிகை என்று கௌசிகன் கூறுகிறான்.

'அன்னையே அனையாட்கு இவ்வாறு அடுத்தவாறு அருளுக'—என்று பரிவோடு புகலுகிறான் கோசலை குமாரன். தாய் அனைய அகலிகை என்பது நோக்கத்தக்கது. தன் தாய் கோசலை நிலையில் அகலிகையைப் பார்க்கிறான் இராமன். இராமனுடைய பாததூளி படுமுன் சாபத்தில் கிடந்த பாப உரு அகலிகை—மனையின் மாட்சியை அழித்து இழிந்தவள். தேடிய அகலிகை சாபம் தீர்க்கவந்த அண்ண லின் சேவடி பட்டதும் அன்னை அவள் பண்டை வண்ணத் தளாகிப் பரிசுத்தமாகிறாள். துளசிதாசர் அகலிகைப் படலத்தில் இதே கருத்தைத்தான் வலியுறுத்துகிறார். ''ஸ்ரீராமச்சந்திரனுடைய சரண கமலங்கள் மிகப் பாவன மானவை. சோகத்தை பாவத்தை எல்லாம் நாசம் செய்யக் கூடியவை.'' துளசியில் அகலிகை பேசுகிறாள், ''நான் பரிசுத்தமில்லாத நாரி. நீரோ பதினான்கு உலகங் களையும் பவித்திரமாக்குபவர். சாபமும் எனக்கு அனுக் கிரகம் ஆயிற்று. உம்மைக் கண்களால் காணும் பாக்யமும் உம் திருவடியால் திருவருளும் பெற்றேனே!''

தன்னை இந்திரன் வந்து கூடியபோது, 'தக்கது அன்று' என்று 'ஓராது கிடந்த' அவளை—முனிவர் கௌதமர் 'உணர்ச்சி வசப்பட்டுப் பிழை செய்த நீ உணர்ச்சியற்ற கல்லாய்க்கிட' என்று சாபம் தந்தார். சரியான தண்டனை தான்! வேண்டுமென்றே தவறு செய்யவில்லை அவள். ஒரு கண நேர உணர்ச்சி வெள்ளம் தன்னை இழக்க வைத்தது. எனவே உடல் உணர்ச்சியால் பிழை செய்தவளை உணர்ச்சி யற்ற கல் உருக்கொள்ளச் சாபம் தந்தார். சாப விமோசன

மும் தந்தார். 'தசரதராமனின் பாத துகள் பட்டதும் இக்கல் உருத்தவிர்தி' என்ருர். அதிலேயே அகலிகைக்கு அருள் கிடைத்துவிட்டது. "பாத தூளி படுதலால் உலகம் பாக்கியம் செய்ததே" என்ருர் ஆழ்வார். அதுபோல அகலிகை பாக்யமே அது! பரமனின் பாததூளி அவளைப் புனிதப்படுத்திவிட்டது.

சந்தர்ப்ப சூழலால் தவறு செய்தால் கழுவாய் உண்டு. வேண்டுமென்றே எண்ணித் திட்டமிட்டுத் தவறு செய்தால் மன்னிப்பு இல்லை. தேவேந்திரனின் சூழ்ச்சி பற்றி முற்றும், முக்காலமும் உணர்ந்த கௌதம முனியாலேயே அறிந்து கொள்ள முடியவில்லை எனும்போது, எளிய பெண் அகலிகை என் செய்வாள்! இன்ப உணர்ச்சியில் இருந்த பிழைக்குத் தண்டனையைச் சில காலம் அனுபவித்துவிட்டாளே! பாவம்! அவள் மனமறிந்து பிழை செய்ய முற்படவில்லை. அந்த உடற்குற்றமும் ஸ்ரீராமனின் பாததூளி பட்டதும் நீங்கி முன்னையப் பரிசுத்த அகலிகை ஆகிவிட்டாள். இதையே விசுவாமித்திரன், கௌதம முனிவரிடம் கூறு கிருன்,

"அஞ்சன வண்ணத்தான் தன் அடித்துகள் கதுவா முன்னம்
வஞ்சிபோல் இடையாள் முன்னை வண்ணத்தள் ஆகிநின்ருள்
நெஞ்சினுல் பிழைப்பிலாளை நீ அழைத்திடுக என்ன
கஞ்சமா மலரோன் அன்ன முனிவனும் கருத்துள்
கொண்டான்"

(அக. படலம் 27)

அதன்பின் ஸ்ரீராமன் மாசற்ற கற்புடை அகலிகையை முனிவன் கையில் ஈந்து புதிய பாணிக்கிரகணம் செய்து தருவதுபோல் செய்கிருன். மனையின் மாட்சியை அழித்து இழிந்தவள், விலைமகள் அனையவள் என்று பேசப்பட்ட அகலிகை, முன்னை வண்ணத்தளாக, மாசறு கற்பின் மடந்தையாக ஆனது இராம பெருமானின் பாதத் துகள்

பட்ட மேன்மையால்தான்! இதைத்தான் கம்பன் கூற நினைக்கிருன். இராம காதை சரணுகதி சாஸ்திரம் ஆயிற்றே.

"குணங்களால் உயர்ந்த வள்ளல், கோதமன் கமலத் தாள்கள்
வணங்கினன், வலங்கொண் டேத்தி மாசறு கற்பின் மிக்க
அணங்கினை அவன்கை ஈந்து ஆண்டு அருந்தவனேடும் ஏகி
மணங்கிளர் சோலை நீங்கி, மணிமதில் கிடக்கை
கண்டார்"

(அக. படலம். பாடல். 28)

நெஞ்சறிந்து பிழை செய்தால் அகலிகைக்கு அருள் கிடைத்திருக்காது. அவள் நெஞ்சினுல் பிழையற்றவள். உடலால் மாசுபட்டமைக்கு அவளுக்கு முனிவன் சாபம் தந்து விட்டான். பரமனின் பாதத்தால் சாப நீக்கமும் பெற்று விட்டாள். கைவண்ணம் தாடகையை அழித்தது—கால் வண்ணம் அகலிகைக்கு அருள் அளித்தது.

"இவ்வண்ணம் நிகழ்ந்த வண்ணம் இனியிந்த உலகுக்
கெல்லாம்
உய்வண்ண மன்றி மற்றோர் துயர்வண்ண முறுவ துண்டோ?
மைவண்ணத் தரக்கி போரில் மழைவண்ணத் தண்ணலே!
உன்
கைவண்ணம் அங்குக் கண்டேன்; கால்வண்ண மிங்குக்
கண்டேன்"

(அக. படலம். 24)

# 2. நல்லருள் துறந்த நாடகம்

இராம காதையின் முதல் திருப்புமையம் கூனியின் வருகையே. ''கொடுந் தொழுத்தை'' தீயமந்தரை, உள்ளமும் கோடிய கொடியவள் என்றெல்லாம் கூறப்படும் மந்தரை வான்மீகி, துளசி, கம்பன் மூவருடைய படைப்பிலும் ஒரே மாதிரிதான் காட்சி தருகிருள். கைகேயியின் அன்புக்குரிய வேலைக்காரி யதேச்சையாக (எதிர்பாரா விதமாக) தெய்வ சங்கல்பத்தால் வந்து தோன்றி, 'இராமனுக்கு முடிசூட்டு விழா' என்று பறையறிவிப்பதைக் கேட்கிருள். மூன்றுலகி னுக்கும் இறுதி மூட்டும் தீய மந்தரை, துளசியின் வாக்குப் படி சரஸ்வதி தேவியால், (இராமாவதார ரஹஸ்யம் நிறை வேற என்றே) தூண்டப்பட்டுக் கைகேயி மனத்தை மாற்று கிருள். வான்மீகத்தில் இப்படித் தெளிவுபடச் சொல்ல வில்லை. கம்பனே—''இன்னல் செய் இராவணன் இழைத்த தீமை போல் துன்னரும் கொடுமனக் கூனி தோன்றினுள்'' என்று, (இராவணனின் தீமை முதிர்ந்து, அழிவு காலம் நெருங்கியதால்) கூனி வந்து கைகேயி மனத்தை மாற்றினுள் என்கிருர். இராமாவதாரம் என்பது கோசல அரசுப்பட்டம் சூட்டிக்கொண்டு அரியணையில் இருப்பதற்கு வந்ததன்று. 'கொலைத் தொழில் அரக்கர் தம் கொடுமை தீர்ப்பன்' என்று உலைவுறும் அமரர்க்கு உரைத்த வாய்மை காக்க வந்ததே! முதல் நாள் அரசன் தசரதன் மந்திரிகளைக் கூட்டி முடிவெடுத்து, மறுநாள் இராமனின் முடிசூட்டு விழா என்று பறையறையச் சொல்கிருன். மாநகர் எங்கணும் மங்கல ஒலி மகிழ்ச்சி ஆரவாரம். இதைக் கேட்ட கூனியின் நெஞ்சு துடிக்கிறது. ஏன்?

> ''பண்டைநாள் இராகவன் பாணி வில்உமிழ் உண்டை
> உண்டதனைத் தன் உள்ளத்து உன்னிய''

கொடுமையால்தான். இது ஒரு பெரிய காரணமாகுமா? 'அறியாப் பருவத்தே அடித்ததுதானே!' என்போம். அதுகூட அவள் கூனலை நிமிர்த்தச் செய்த முயற்சிதானும். 'கூனி கூனிபோக உண்டை தெரித்த நாளி' என்று இராவணனே கூறுகிறான். அது ஒரு காரணம் கூனிக்கு ஆத்திரம் வந்ததற்கு. நேராகக்—கேகயன் தனயை—கைகேயியின் அந்தப்புரம் நோக்கிச் செல்கிறாள்.

## தெய்வக் கற்பினள்

பாத்திரங்களின் குணாதிசயங்களை முதல்வரியிலேயே காட்டும் அற்புதச் சித்திரம் கம்பனின் கவி! கைகேயி படுத்துறங்கும் காட்சியிலேயே அவள் எவ்வளவு நல்லவள் என்பதைச் சுட்டிக் காட்டிவிடுகிறான்.

''நாற்கடல் படுமணி நளினம் பூத்ததோர்
பாற்கடல் படுதிரைப் பவள வல்லியே
போற் கடைக் கண்ணளி பொழியப் பொங்கணை
மேற்கிடந் தாள்தனை விரைவில் எய்தினள்''

(மந்தரை சூழ்ச்சிப்படலம். 50)

மந்தரை எனும் காலக்கோள் தீண்டலும் தெய்வக் கற்பினள் கைகேயி உணர்ந்து எழுகிறாள்.

'பேரிடர் பிணிக்க வரும்நேரம் நீ இப்படி உறங்குகிறாயே!'

என்கிறாள் மந்தரைக் கூற்றம்.

''நல்ல பிள்ளைகளைப் பெற்ற யாருக்குமே துன்பமில்லை
வேத மனைய இராமனைப் பயந்த எனக்கு ஏது இடர்?''

இது கைகேயியின் பாசம் கலந்த பெருமிதம்.

'ஆழ்ந்த பேரன்பினள்'-என்கிறார் கம்பன். இராமனிடம் எவ்வளவு அன்புடையவள் என்ற ஆழம் காண முடியாது!

'ஆடவர் நகையுற ஆண்மை மாசுறத்
தாடகை எனும்பெயர்த் தையலாள்படக்
கோடிய வரிசிலை இராமன் கோமுடி
சூடுவன் நாளை'

என்பது கூனி தரும் செய்தி. வேற்றுமை பாராட்டாத தூய தாய் இவள் சுடர்க்கெலாம் நாயகம் அனையதோர் மாலை தருகிறாள். அதை வீசி எறிந்துவிட்டு அழுது கொண்டு பேசத் தொடங்குகிறாள் கூனி:—

"பேதை நீ! பித்தி; உன் பிள்ளையும் நீயும் துயர்ப்படுக" என்று தொடங்கும் கூனியின் சொற்களிலேயே நஞ்சிருக்கிறது. அப்படியே பலித்து விடுகிறதே! மேலும் புலம்பல் தொடர்கிறது: "இராமனும் சீதையும் ஆசனத்திருந்து அரசு செய்ய உன் மகன் பரதன் வெறுந்தரையில் அமர்ந்திருக்கவா? உன் வயிற்றில் பிறந்ததற்குப் பரதன் பிறவாதிருக்கலாம்! தம்பியோடு அவன் காடு சென்று தவம் செய்யலாம். மன்னர் வரிசையில் பரதனுக்கு இடமில்லை! பாக்கியமில்லாதவன் பரதன்! அவனை மன்னன் கேகய நாட்டுக்கனுப்பிய மர்மம் இன்றுதான் புரிகிறது. தந்தையும் உனக்குக் கொடியவன்! பரதா—உன் தாயும் தீயவள். என்ன செய்யப் போகிறாய்!" கைகேயி கனன்று பேசி அவளை மறுத்துரைக்கிறாள். 'அறிவிலி; அடங்குதி. உன் நாவைச் சிதைக்காது விட்டதே பெரிது' என்று விரட்டியும் போகவில்லை கூனி; போவாளா?

## மாற்றமும் தோற்றமும்

மேலும் பேசுகிறாள் கூனி:

"அருந்தவர்கூட அருந்திருப்பெற்றால் சிந்தனை மாறுவர்; கோசலையும் தன் மகன் அரசு பெற்றால் மாறத்தான் செய்வாள். உனக்கும் உன் மகனுக்கும் எந்தச் செல்வம் உரிமையுடையது? அவளிடம் இரந்துதானே பெறவேண்டும்? அது

போகட்டும், உன்னை நாடி வந்து யாசிப்பவருக்கு நீ என்ன தரமுடியும், அவனை இரந்து தருவாயா? ஈதல் இயலாமை யால் வெட்கி நிற்பாயா? மாண்டு போவாயா?

(அவளுடைய ஈகைப்பண்பு கெடும் என்று குறிப் புணர்த்துகிறாள்.)

உன் உறவினர் வந்து உன் மாற்றாளின் செல்வப் பெருக்கையா காண்பது?

இது நாள் வரை உன் தந்தையைச் சீதையின் தகப்பன் சனகன் ஒறுக்காதிருப்பது உன் கணவனுக்கு அஞ்சியே. உன் கணவன் பதவியை விட்டுப் போய் இராமன் பதவிக்கு வந்தால் அவனும் மாமனாருடன் சேர்ந்துகொண்டு உன் தந்தையை வாழவிடாமல் செய்யலாம். இராமனுக்கு இன்று வரும் அரசு வழிவழியாக அவன் பிள்ளைகளுக்குச் சேரும். அவனை அடுத்திருக்கும் தம்பி இலக்குவனுக்குப் போகும்! உன் மகனுக்கு என்ன கிடைக்கும்?''

இந்த வார்த்தைகளால் மட்டும் கைகேயி மனம் மாறினாள் என்று சொல்ல முடியுமா?

தேவி தூய சிந்தை திரிந்தது—''சூழ்ச்சியின் இமையோர் மாயையும் அவர் பெற்ற நல்வரம் உண்மையாலும், ஆய அந்தணர் இயற்றிய அருந்தவத்தாலும்!'' அரக்கர் பாவமும் அல்லவர் இயற்றிய அற அருந்தவமும் துரக்க நல்லருள் துறந்தனள் தூமொழி மடமான்.

'என் மகனுக்கும் எனக்கும் நல்லை அல்லை'என்று விரட்டிய கைகேயி 'இனியை என் மகனுக்கு'— என்று பாராட்டுகிறாள். கூனியே அவளை இரு வரங்கள் கேட்கச் சொல்லி, ஒன்றால் அரசு கொண்டு, இராமனை மற்ற ஒரு வரத்தால் வனத்தில் செலுத்து என்றும் தூண்டுகிறாள்? மலர்களைச் சிதைத்து, நகைகளைக் கழற்றி வீசி. கூந்தலை விரித்து திலகம் அழித்து மூதேவி எனக்கிடந்தாள் கைகேயி. (செங்கமலத் தன்னை

சீதை வனம் செல்கிறுளே; அதனுல் அவளது அக்காளே வந்து அயோத்தியில் கிடந்தமாதிரி.)

இந்த நாடகத்தைப் பின்னணியிலிருந்து இயக்கியது தேவர்களின் சூழ்ச்சியே! தேவகாரியம், இராவணவதம் நடக்க வேண்டுமே! பத்துப்பாடலில் அன்புக்கடல் மாறுமா? தூமொழி மடமான் தீயவளாகிவிட முடியுமா? இல்லே! அதிலும் கம்பன் கருத்தை இருபாடலில் வைத்துள்ள அழகை நோக்க வேண்டும்!

உளவியல்படி கூனி, தன் பிறந்த வீட்டைப் பற்றிச் சொன்னதும் கைகேயி பயந்து போய் மனம் மாறினுள் என்ருே, பிள்ளேப் பாசத்தால் மாறினுள் என்ருே கவிஞன், உலகியல் காரணம் காட்டவில்லேயே!

இமையோர்மாயை, அவர் பெற்ற நல்வரம், அந்தணரியற்றிய அருந்தவம், அரக்கர் பாவம், அல்லவர் இயற்றிய அறம் இவைதாம் கைகேயி என்கின்ற அன்புறுசிந்தையினுளே அன்பெனும் அளக்கரை—தூமொழி மடமானே மனம் மாற்றியது. கைகேயி கொடியவள் என்று நாம் திட்டலாகாது என்பதற்காகவே, அவளது 'இரக்கமின்மை அன்ருே இன்று இவ்வுலகங்கள் இராமன் பரக்கும் தொல்புகழ் அமுதினேப் பருகுகின்றதுவே!' என்று முத்தாய்ப்பு வைத்தான் கவிஞன்.

கணவன் தன் காலில் விழுந்து கெஞ்சியும், உயிர் போய் விடும் என்று பதறிப் புலம்பியும், 'உன் கழுத்தின் நாண் நின் மகற்குக் காப்பின் நாணும்'என்று திட்டியும் 'மாய்ந்தேன் மாய்ந்தேன்' என்று சாய்ந்த போதும் மனமிரங்காதவளேக் கொடியவள் என்று திட்டத்தான் தோன்றும். ஆனுல் கைகேயி நல்லருள் துறந்தது ஒரு நாடகமே.அவதார நோக்கம் நிறைவேற என்று நடத்தப்பட்ட நாடகமே.

'மண்ணேகொள்; நீ மற்றையது ஒன்றும் மற' என்று கேட்டானே தசரதன். தன் பிள்ளேமீது பாசத்தால்,பேராசையால், நாடு கேட்க முன் வந்திருப்பாளேயானுல் இருவரம்

தா என்று அடம்பிடித்திருக்கத் தேவையில்லை. இராமன் கிளர்ச்சி செய்யக்கூடும் என்று நாட்டைவிட்டு விரட்ட நினைத்தாள் என்பது பொருத்தமான யூகம் அன்று. தான் வளர்த்த பிள்ளை இராமனைக் கைகேயி அவ்வளவு கேவலமாக மதிப்பிட்டிருக்க முடியாது. இராமன் தன் அவதார நோக்கம் நிறைவேறக் காடு செல்ல வேண்டியது இன்றியமையாதது. இந்தப் பழி யாராவது சுமந்துதானே ஆகவேண்டும். ஆயிரம் பொருளை இழக்க ஒரு மங்கை தயங்காமலிருப்பாள்; ஆனால் அரையணு மஞ்சள் கயிற்றை இழக்க மனம் ஒப்புவாளா? அதற்கும் துணிந்தாள் கைகேயி என்றால் அவதார லட்சியத் திற்காக அவள் செய்த தியாகம்! இதையெல்லாம் காப்பிய ஆசிரியன் வெளிப்படையாக ஒவ்வொன்றாகச் சொல்ல முடியாது; சொல்லமாட்டான். காவிய அமைப்பு அழகுற இருக்க ஒருமைப்பாடு இருக்க அவனை மற்றப் பாத்திரங்கள் திட்டு வதாகக் காட்டுவான். அதுவும் ஒரு காப்பிய உத்தியே!

கொடுந்தொழுத்தை சிதகு உரைப்பைக் கலக்கிய மனத் தினளான கைகேயி எனவும், கூற்றுத்தாய் எனவும் கூடக் கைகேயி பிற பெரியோர்களால் பேசப்படுவாள். ஈரம்நீங்கிய சிற்றவை என்பான் கம்பன். ஓரிடத்தில் குகனிடம் தாய் மார்களை அறிமுகம் செய்கிறான் பரதன்! இங்கே ஒரு பாடல் சிந்தனைக்குரியது.

சுடு மயானத்திடை தன் துணை ஏக,
தோன்றல் துயர்க்கடலின் ஏக
கடுமையள் கானகத்துக் கருணையார்கலி
ஏகக் கழற்கால் மாயன்
நெடுமையால் அன்றளந்த உலகெலாம்
தன் மனத்தே நினைந்து செய்யும்
கொடுமையால் அளந்தாளை 'ஆர் இவர்
என்றுரை' என்னக் குரிசில் கூறும்

(கங்கை காண் படலம். 68)

கழல்கால் மாயன் உலகத்தை நெடுமையால் அளந்தான்.

கைகேயி கொடுமையால் அளந்தாள். அதுவும் தன் மனத்தே நினைந்து செய்யும் கொடுமை என்றார். பின்னால் வருவது நினைந்தே செய்த கொடுமை. கழல்கால் மாயன் வாமனனுக்குள்ளப் பிரானாக வந்து மூவடிமண் கேட்டான். அளக்கும் போதே நெடுமையான திரிவிக்ரம வடிவம் எடுத்தான். இது மற்றவர் கண்ணுக்கு வஞ்சனையாகும்; கொடுமையாகும்! ஆனால் தான் வடிவைச் சுருக்கிக் கொண்டாவது, ஏமாற்றியாவது, கொடுமை செய்தாவது, பழி சுமந்தாவது தேவர் துயர் தீர்க்கவே திருமால் இவ்வாறு செய்ததால் அவனை "ஓங்கி உலகளந்த உத்தமன்" என்றார் நாச்சியார். அது போல் தான்பழி பெற்றாவது இராமாவதார லட்சியம் நிறைவேறத் துணை செய்த கைகேயியின் கொடுமை போற்றத் தக்கதாக மாறியது. அதனால் அவள் சிறந்த தியாள் என்றார் கம்பர். (நற்பயக்கும் தீமை செய்தாளாதலின்!)

அவளைக் குகன் 'தாய்என' நற்கையால் தொழுதான். கோசலை ஈன்று தந்திருந்தால் மட்டுமே இராமன் இவனுக்கு அண்ணனாகிவிட மாட்டான். கைகேயித் தாய் காட்டுக்கு அனுப்பியதால்தானே குகனுக்கு அண்ணன் கிடைத்தான். எனவே அவள்தானே உண்மையில் 'தாய்'!

## தெய்வம்

தசரதன் பிதுர் உலகத்திலிருந்து தோன்றி, வெற்றி வீரனாகத் திரும்பும் இராமனைக் கண்டு மகிழ்கிறான். அவனிடம் இராமன் 'கைகேயி என்னை ஈன்ற எம்பிராட்டி' என்கிறான். வரம் கேட்கச் சொன்ன தசரதனிடம், காகுத்தன் வரம் கேட்கும் அழகிய பாடல்—

"ஆயினும் உனக்கு அமைந்ததொன் றுரைஎன அழகன்
தீயள் என்றுநீ துறந்தஎன் தெய்வமும் மகனும்
தாயும் தம்பியும் ஆம்வரம் தருகெனத் தாழ்ந்தான்
வாய்திறந்து எழுந்து ஆர்த்தன உயிரெலாம் வழுத்தி"

(மீட்சிப் படலம். 128)

இதில் கைகேயியைத் தெய்வம் என்ற ஸ்ரீராமன் வாக்கு ஆராயத் தக்கது. தகப்பன் 'தனக்கு மனைவி இல்லை' என்று ஒதுக்கியவளைத் தாய் என்று சொல்ல முடியாதாகையால் 'தெய்வம்' என்றான் என்பர் சிலர். அப்படியன்று; தெய்வம் நல்லதும் செய்யும்; கெட்டதும் செய்யும். ஏன் என்று ஆராயத் தகுதியும் திறமையும் நமக்கில்லை. அது செய்யும் செயல்களின் விளைவு நன்மையே! கைகேயித் தெய்வம் செய்த செயலும் சிறந்த தீமையே—நன்மை பயத்த தீமையே!

ஆதலால் அவதார நோக்கம் நிறைவேற, தான் பழி சுமந்த தியாகி அவள். அவள் தூயவளே!

# 3. வஞ்ச மகளிடம் கொஞ்சலா?

'நீலமா மணிநிற நிருதர் வேந்தனை மூல நாசம் பெற முடிக்கும்மொய்ம்பினள்' ஆகிய சூர்ப்பணகை ஆரணிய காண்டத்தில் அறிமுகமாகிறாள். முதல் திருப்புமையமாகக் கூனியின் சூழ்ச்சி இராமகாதையில் வருகிறதென்றால், அடுத்த இன்றியமையாத் திருப்புமுனை சூர்ப்பணகையின் சூழ்ச்சி! கூனியைக் குறிப்பிடுகையில் 'மூன்றுலகினுக்குமோர் இறுதி மூட்டுவாள்' என்றது போலவே, சூர்ப்பணகையையும்,

> 'உம்பர் ஆனவர்க்கும், ஒண்தவர்க்கும், ஓதநீர்
> இம்பர் ஆனவர்க்கும் ஓர் இறுதி ஈட்டுவாள்'

என்றான் கவி.

வெய்யது ஓர் காரணம் உண்மையேயினள்—இராவணன் வேரோடு அழியும்படியான கொடியதோர் ஊழ்வினையால் அக்கானத்தில் உறைந்தாள். பெண்மை ஆற்றல் உடையது தான். அதே ஆற்றல்சால் பெண்மை இங்கே அழிப்புக்கு அடிகோலுவதைக் காண்கிறோம்.

'பொருள் காத்தவன் புகழ் தேய்வது போலத் தேயும் கற்பினளாம்' சூர்ப்பணகை இராமனைக் காண்கிறாள். கண்டு காமம் கொள்கிறாள். அனங்கன், மன்மதன் தவம் செய்து இவ்வுருக் கொண்டானோ என ஐயம் கொள்கிறாள். அழியா அழகனும் இராமனின் மார்பகம் ஒன்ற வேண்டுமென்ற தீராத் தாகம் ஏற்படுகிறது.

காமத்தள் அரக்கி காமரு பூங்கொடிபோல வருகிறாள். கம்பசித்திரமான இந்த அழகிய பாடல் பலருக்கும் தெரிந்ததே:

''பஞ்சி ஒளிர் விஞ்சுகுளிர் பல்லவம் அனுங்க
செஞ் செவிய கஞ்சம் நிமிர் சீறடியள் ஆகி
அஞ்சொல்இள மஞ்ஞை என அன்னமெனமின்னும்
வஞ்சியென நஞ்சமென வஞ்சமகள் வந்தாள்''

(சூர்ப்பணகைப்படலம் 31)

வஞ்ச மகள் வரும் அழகை வியந்து நோக்குகிருன் இராமன்.

''எண்அருளி ஏழைமை துடைத்து எழு மெய்ஞானக்
கண் அருள் செய் கண்ணன் இரு கண்ணின் எதிர்
கண்டான்''

(சூர். படலம். 35)

கம்பனுடைய நுண்மாண் நுழைபுலம் இத்தகைய சில தொடர்களில் உள்ளுறையாகக் கிடக்கும். புரிந்து கொண்டால்தான் ஆழ்ந்திருக்கும் கவியுள்ளம் புலனுகும். மெய்ஞானக்கண் அளிக்கும் வள்ளல் அவன். அவனுக்கு சூர்ப்பணகையின் அழகு காமத்தை ஏற்படுத்திவிடுமா? அவன் சபலம் கொண்டு விடுவானு? இதையெல்லாம் சிந்திக்க வேண்டும். காரணமின்றிச் சொல்லாடுவானு இராமன்? பயனில் சொல் பாராட்டும் பதடியா, குணக்குன்ருன இராமன்?

தன்னை வணங்கி, நாணி அயல் நின்ற மங்கையை நோக்கித் ''தீதில் வரவாக, திரு! நின்வரவு!'' என்ருன். (உன் வரவு தீ தில்லாமல் இருக்கட்டும்.) ஏதோ தீமை வரப் போவதை உணர்ந்தது போல் இவ்வாறு கூறினுன்.

'ஏது பதி? ஏது பெயர்? யாவர் உறவு?' என்ருன்.

நேரடியான பதில் சொல்லாமல், பிரம்மாவின் கொள்ளுப் பேத்தி, குபேரனின் தங்கை என்றபின் இராவணேசுவரன் தங்கை என்றும் காமவல்லியாம் கன்னி என்றும் தன்னை அறிமுகப் படுத்திக் கொண்டாள், அந்த வஞ்சமகள். இராமனுக்கு ஐயம் ஏற்பட்டுவிட்டது என்கிருன் கம்பன்.

"செய்கை செவ்விது அன்று அறிதல் ஆகும் சிறிதின்" என்றுதான் பேச்சுக் கொடுத்தான். "இராவணன் தங்கை யாம் உனக்கு இப்படி (அழகிய மானுட) உரு எப்படி அமைந்தது?"

சூ : 'அரக்க வாழ்வை நான் மதிப்பதில்லை அறவழி நடந்து தவத்தால், இவ்வழகுருப் பெற்றேன்!'

இரா: 'மூவுலகும் ஆளும் இராவணன் தங்கை; அதற்குரிய அந்தஸ்தோடு வரவில்லை! தன்னந் தனியாக வந்த காரணம் என்ன ?'

சூ: 'ஈண்டு ஒரு காரியம் உள்ளது; அதனால் உன்னைக் காண வந்தேன்—ஐயனும், இவள் சிந்தை நல்லவள் அல்லள் என்று புரிந்து' 'என்பால் என்ன காரியம்? இயலுமானால் செய்கிறேன்' என்றான் தோழமையுடன்.

"தாமுறு காமத் தன்மை தாங்களே உரைப்பது என்பது
ஆம்எனல் ஆவது அன்றால் அருங்குல மகளிர்க் கம்மா!
ஏமுறும் உயிர்க்கு நோவேன் என்செய்கேன் யாரும்
இல்லேன்!
(சூர்ப்பனகைப் படலம். 45)

இவ்வாறு வாயால் கூறி, கண்களாலும் சாடை காட்டினாள். உடனே இவள் "நாணிலள், நொய்யள்; நல்லளும் அல்லள்" என உணர்ந்து ஒன்றும் பேசாது மௌனம் சாதித்தான் வள்ளல். அம்மௌனத்தைக் கண்ட பொய் மகவின் உள்ளமோ,

"இவன் என்மீது ஆசை கண்டு அருளிற்றோ? அன்றோ?" என ஊசலாடியது.

'எழுதரிய அழகுத் திருமேனியனே.! நீ இங்கு வந்திருப்பது நான் அறிந்திலேன்; அறிந்திருந்தால் என் பெண்மையும் இளமையும் பயனின்றிப்போக, முனிவர்

களுக்குக் குற்றேவல் செய்திருக்கமாட்டேன்' என்ற அவளது வாசகம் கேட்ட சக்கரவர்த்தி திருக்குமாரன், 'நிந்தனை அரக்கி இவள்; நீதி நிலையில்லாள்; ஏதோ தீவினை கருதி வந்துளாள்' என்று அழுத்தமாகப் புரிந்து கொண்டான். "அழகியே! உன் எண்ணம் மரபை ஒட்டி வந்துள்ள பண்பாட்டிற்குப் பொருத்தமில்லாதது; நான் அரசகுலத்தவன். நீயோ அந்தணர் பாவை" என்று எச்சரித்தான்.

"என்னை ஏற்காது மறுக்க இதுவா காரணம்? என் தந்தைதான் மறையவன். என் தாய் அரக்க அரச மரபினள்" என்றாள் அவ்வரக்கி.

"அகத்துறு நகையின் வெள்ளைக் குருத்து எழ"—கேலிச் சிரிப்புடன், 'அரக்கர் பெண்ணை மானிடம் மணக்கலாமா? பொருத்தமில்லையே' என்றான்.

இராவணனின் தங்கை என்று அறிமுகப் படுத்திக் கொண்டது தவறுயிற்றே என்று எண்ணியவள் 'தேவர்களின் அருளால் அரக்கப் பிறவியின் இயல்பு நீங்கினேன் என்று சொன்னேனே; மறந்துவிட்டாயா!' என்று பசப்புகிறாள். (இராவணனை அழிக்க வந்துள்ள இராமன் இராவணன் தங்கை வந்து வலியக் காதல் மொழி பேசும்போது அவளிடம் பேசுகிறான் என்றால் அதன் விளைபொருள் துணியாமலா இருப்பான்!)

'உன் அண்ணன்மார் இருவரில் ஒருவன் மூவுலகாள் இராவணன்! மற்றவன் குபேரன்! அவர்கள் உன்னை எனக்குத் தந்தால் கொள்ளலாம். ஏனெனில் அவரை அஞ்சுவேன்!' என்று பரிகாசமாய்க் கூறினான்.

காந்தர்வ மணம் புரிந்து கொள்ளுமாறு அவள் வற்புறுத்துகிறாள். தன்னை மணந்தால் இராவணன் அதன் பின் இராமனுடன் பகைமை கொள்ள மாட்டான் எனவும், விண்ணும் மண்ணும் வசமாகும் எனவும் பேசுகிறாள்.

'அரக்கர் அருளும் கிடைத்தது; உன்துணையும் கிடைத்தது. காட்டிற்கு வந்ததன் பயன் கிடைத்தது'— என்று பெரிதாகச் சிரித்தான். (இங்கு கம்பனின் ஹாஸ்ய ரசம் நன்கு புலனாகிறது) இதுகூடப் புரிந்து கொள்ள முடியாமல் காமத்தால் மதியிழந்திருந்தாள் அவள்.

"காந்தர்வ மணத்தால் இணையும்போது வேறுபாடுகள் குறுக்கிடா! என்னை நீ மணந்தால் விண்ணும் மண்ணும் ஒருங்கே வசமாகும்" என்றெல்லாம் பிதற்றும் ஒருத்தியைப் பார்த்து நகைப்பு வராமல் என்ன செய்யும்? இவள் உள்ளத்துள்ள கருத்து ஒவ்வொன்றாக வெளி வரட்டும் என்றே இராமன் பேச்சுக் கொடுத்திருக்கிறான். இராவணனின் தங்கை இவள் காமம் நிறைவேறாது கோபம் கொண்டு அதன் பின் விளைவாகப் போர் வந்தாலும் அவதார நோக்கத்திற்கு அது துணையாகத்தானே செய்யும். எனவே அறிந்தே பேச்சுக் கொடுக்கிறான் கோசலை குமாரன் எனலாம். தன் மறுப்புரைகள் அவளைத் திருத்திவிடினும் நலமே என்றும் நினைத்திருக்கலாம்.

இதே சமயம், பர்ணசாலைக் குள்ளிருந்து பிராட்டி வெளியே வருகிறாள். சீதை மிதிலைச் செல்வியாக இருந்து அயோத்திச் செல்வியாகும்போது அவளது சௌந்தரியம் குண சௌந்தரியமாகிறது. கானுறை செல்வியாகும்போது அது தியாக சௌந்தரியமாகிறது. பின்னால், அசோக வனத்தில் அது தவசௌந்தரியமாகிப் பரிணமிக்கிறது.

இப்போது சூர்ப்பணகை முதன் முதலில் சீதாப் பிராட்டியைப் பார்க்கிறாள். அவளது பாழ்பட்ட நெஞ்சு பிராட்டியைக் கண்டாவது பண்படக் கூடாதோ!

" ஊன்சுட உணங்கு பேழ்வாய் உணர்விலா உருவின் நாறும்
வான்சுடர்ச் சோதி வெள்ளம் வந்திடை வயங்க, நோக்கி
மீன்சுடர் விண்ணும் மண்ணும் விரிந்தபோர் அரக்கர் என்னும்
கான்சுட முளைத்த கற்பின் கனலியைக் கண்ணில் கண்டாள்"

(சூர். படலம் 58)

தன் வயிற்றை, ஊன்சுடுவதற்கு மயானமாக்கிக் கொண் டாளாம். அந்த மயானத்திற்கு வாய்தான் வாசலாம். பெருந் தீனி கொள்பவர், சாதாரணமாகச் சிறந்த மெய்யுணர்வு பெற்றவர்களாய் இருக்க முடியாது. இந்த நிலையிலுள்ள சூர்ப்பணகை, "வான் சுடர் சோதி வெள்ளமாய்" விளங்கும் பிராட்டியைக் கண்டு பிரமிக்கிறாள். பிராட்டியின் கற்புக் கனல் விண்ணும் மண்ணும் வியாபித்துள்ள அரக்கர் என்னும் காட்டைச் சுட்டெரிக்கவல்லது என்பதை இந்த உணர்விலி எப்படி உணர்ந்து கொள்வாள்!

'கண்பிற பொருளில் செல்லா, கருத்தெனின் அஃதே, கண்ட
பெண் பிறந்தேனுக்கு என்றால், என்படும் பிறருக்கு?'

பெண்ணாகப் பிறந்த எனக்கே இப்படி என்றால் ஆடவருக்கு எப்படியோ—என்று சொல்ல வந்தவள், ஆடவர் என்று வெளிப்படையாகச் சொல்லாமல் 'பிறர்' என்கிறாள்.

இந்தப் பேரழகியும் தன்னைப்போல் இடையே வந்த வளாய்த்தான் இருக்கவேண்டும் என நினைக்கிறாள். இவள் புத்தி துஷ்டபுத்திதானே. இவ்வாறு எண்ணமிடும் அரக்கி, சீதையைப் பார்த்து, "இவளை இகழச் செய்வேன்—" என்று தீர்மானிக்கிறாள்.

இராமனை நோக்கி "இவள் நரமாமிசபட்சணி, வஞ்சனை அரக்கி, இவளைக் கண்டு நான் அஞ்சுகிறேன், வீரனே இவளை விலக்கி என்னைக்காப்பாற்றுவாய்!' என, கூசாமல்பேசுகிறாள்.

இது கேட்ட இராமனுக்கு சிரிப்பு அடக்கமுடியாமல் வந்துவிட்டது. சூர்ப்பணகை சீதையை நீ எங்கேடீ வந்தாய் எனக் கோபிக்கிறாள். சீதை அரக்கியைக் கண்டு அஞ்சி ஓடிச்சென்று இராமனுடைய தோளைத் தழுவிக்கொள்கிறாள்.

"அரக்கியோடு, விளையாட்டு என்றாலும், விளைவன தீமைகளே.'

அரக்கியோடு விளையாடுவதும் தீமைதான் விளைக்கும் என இராமன் தீர்மானித்து உன் எண்ணம் இளையவனுக்குத் தெரிந்தால் கோபிப்பான் என எச்சரித்துவிட்டு சீதையோடும் பர்ணசாலைக்குள் போய்விடுகிறுன்.

அஸ்தமனம் ஆகிறது. சூர்ப்பணகைக்கு பிராணுவஸ்தை தான். தாடகையின் மார்பிலே இராமபாணம் பாய்ந்ததும் அவள் என்ன அவஸ்தைப் பட்டாளோ, அந்த அவஸ்தையை சூர்ப்பணகையும் மாரன் அம்பால் இப்போது அனுபவிக் கிறுள். மகாலட்சுமிபோல் அழகு வாய்ந்தவள் தேவி. அவள் இராமனுடன் உள்ள வரையில் இவன் என்னைக் கண்ணெடுத் துப் பார்த்தல் கூடுமோ என்றெல்லாம் புலம்புகிறுள்.

பாவ புண்ணியங்களில் நம்பிக்கை இல்லாதவள்தான்; எனினும் இராமன் தன்னைப் பார்க்க மறுக்கிறுனே என்ற நினைப்பில் தன்னைப் 'பாவி' என்று சொல்லிக் கொள்கிறுள்.

''காவியோ, கயலோ, எனும் கண் இணைத்
தேவியோ திருமங்கையின் செவ்வியாள்;
பாவி யேனையும் பார்க்கும் கொலோ? எனும்—
ஆவி ஓயினும், ஆசையின் ஓய்வு இலாள்.''

(சூர். படலம்—87)

(ஆவி போனுலும் இவளது ஆசைபோகாதாம்.)

சூரியோதயம் ஆகிறது. அதற்கு உவமானந்தான் எத் தகைய உயர்ந்த பொருள் உடையது பாருங்கள்.

'மூன்று உலோகமும் மூடும் அரக்கர் ஆம்
ஏன்ற கார் இருள் நீங்க இராகவன்
தோன்றினுன் என, வெய்யவன் தோன்றினுன்.'

அரக்கர்கள் இருளின் சக்திகள் எனக் கருதப்படுவர். இருள் போய் கதிரவன் உதயம் செய்வது; அரக்கர்களாகிய இருட்டை ஒழித்து உலகத்திற்கு புதிய ஒளி காட்ட இராம பிரான் தோன்றியது போலிருந்ததாம்.

காதல் என்பது இந்த அழகியையோ, எந்த அழகனையோ நோக்கி எழுவது அன்று; ஒருவன் காதலைத் தூண்டும் அழகு வேறொருவனுக்கு காதல் விளைவிப்பதில்லை என்பதைப் பலரும் அனுபவத்தால் தெரிந்திருப்பார்கள். இதை யுணர்ந்த சூர்ப்பணகை, "இராமனின் காதலைத் தூண்டுவதென்றால் நிரம்பிய அழகு மட்டும் போதாது, அது இராமனை வசீகரிக்கும் அழகாய் இருக்க வேண்டும்," என முடிவுக்கு வந்தாள். இராமனுக்குரிய கவர்ச்சியான "காதல் வடிவினள்" சீதைதான்! அத்தகைய காதல் வடிவம் தரித்துக் கொண்டு நான் வந்தால்தான் இராமனை வசீகரிக்க முடியும்; அதற்காகச் சீதையை மறைத்து வைக்க வேண்டும்; அவள் வடிவிலே நாம் செல்ல வேண்டும் என்று தீர்மானிக்கிறாள்.

சீதையைக் கொல்லவேண்டுமென்ற நோக்கம் இவளுக்கு இல்லை. ஏனென்றால் சீதையைக் கொன்று விட்டால் இராமனுக்கு ஆற்றவொண்ணாத துக்கமும், தன்மீது மன்னிக்க முடியாத கடுஞ்சினமும் ஏற்படுவது நிச்சயம் 'என்பதை அவள் உணர்ந்திருக்கிறாள். ஆனால் இது எப்படி இளையபெருமாளுக்குத் தெரியும்!

மறுநாள், அதிகாலையில் இராமன் நீராடி சந்தியா வந்தனம் செய்து கொண்டிருந்தான். இதைத் தெரிந்து கொண்ட சூர்ப்பணகை சீதையைக் கவர்ந்து செல்ல முயன்றாள்; தம்பி இருந்ததை அவள் கவனிக்கவில்லை. அவனே இவளைப் பார்த்துவிட்டான்.

"நில் அடி இ" என உரத்த குரலில் அதட்டுகிறான்.

அவளுடைய கூந்தலைப் பற்றியிழுத்து உதைத்து உருட்டி வாளை உருவி அங்கபங்கம் செய்துவிடுகிறான். சூர்ப்பணகை வந்து இராமனிடம் காதல் பிச்சை கேட்டாள்; இளையவன் அவளை முகத்தொடு மூக்கு வேருக்கினான்—என்று முடித்தால் நிகழ்ச்சியில் சுவையிருக்குமா? நிகழ்ச்சிகளை மட்டுமே அடுக்குவது காப்பியமாகுமா? இவ்விடத்தில் சிந்தனைச் செல்வர் ராஜாஜியின் சொற்களை நினைவு கொள்ளலாம்:—

"வான்மீகி இந்த நிகழ்ச்சியை வெகு சுருக்கமாகச் சிக்கல் ஒன்றுமின்றி எழுதிவிட்டார். கம்பர் இந்தச் சங்கதியை அவ்வளவு சுலபமாக முடித்து விடவில்லை. சூர்ப்பணகை பட்டபாட்டை ஒரு தனி நாடகமாக்கி, அதில் எல்லாவித ரசங்களையும் தீட்டி விட்டிருக்கிறார். சூர்ப்பணகைப்படலம் கம்பராமாயணத்துக்குள் ஒரு தலை சிறந்த படலம்'' — என்று கம்பன் புகழை அழகுபடக் காட்டுவார்.

துளசியிலும் வான்மீகத்திலும் இராமனை—நேரடியாகவே—''என்னை மணந்துகொள், நான் இராவணன் தங்கை'' என்று சூர்ப்பணகை கேட்கிறாள். அவனோ 'என் தம்பிதான் மனைவியை விட்டுவிட்டு வந்திருக்கிறான்—எனக்குச் சீதை இங்கே யிருக்கிறாள்' என்று தம்பியிடம் அனுப்ப, அவன் மூக்கும், மார்பகங்களும் அரிந்து அனுப்புவதாக, ரசமற்று நிகழ்ச்சி முடிவுறுகிறது.

ஆசை நிராசையானதும், எண்ணம் பலிக்காமல் போனதும், சூர்ப்பணகையின் கோபத்தை, ஏன் வெறியை அதிகமாக்க அவள் கரதூடணன் முதலிய பல அரக்கரை ஏவிப் போர் புரியத் தூண்டுகிறாள். அதன்பின் அவர்களும் மீளாது போரில் உயிர் விடவே,

'ஆக்கினேன், மனத்து ஆசை, அவ்வாசை என்
மூக்கினோடு முடிய, முடித்திலேன்
வாக்கினால் உங்கள் வாழ்வையும் நாளையும்
போக்கினேன் கொடியேன்' என்று போயினாள்.

(கரன்வதைப்படலம். 191)

அதன்பின் இலங்கை சென்று இராவணன் மனத்தில் சீதை பற்றிய நினைப்பால் காமம் எழுமாறு செய்வதில் வெற்றி பெறுகிறாள்

அதில் இரட்டைப் பலன் அடைய வழி நினைக்கிறாள் போலும். அண்ணன் தசமுகனைப் பழிவாங்கும் படலத்தைத்

தொடங்குதல் ஒன்று. மற்றது தேன் கொண்டுடாடும் கூந்தல் சிற்றிடைச் சீதையை அண்ணன் பெற்ருல், தான் கொண்டாடும் வண்ணம் இராமனைச் சேரலாம் என்ற நப்பாசை மற்ருென்று.

இத்தனை செயல்கள் நடைபெற அஸ்திவாரம் வேண்டாமா? அதுவும் பலமாக இருக்கவேண்டாமா? அதையெல்லாம் கருதியே சூர்ப்பணகையின் காமப் பிதற்றலை கவிச்சுவைபட அதிகமாகக் காட்டுகிருன் கம்பன். அவளைப் பரிகசித்து, அவளது வாயைக் கிளறி வார்த்தைகளை வர வழைக்கவும் பின் விளைவுகள் இப்படி விசுவரூபம் எடுக்க வேண்டும் என்றும்தான் இராமனைச் சூர்ப்பணகையிடம் இவ்வளவு பேசவைத்தான் கவிச்சக்கரவர்த்தி.

# 4. மான் பிடிக்கச் சொன்ன மயில்

சாமத்தால் அரக்கி சூர்ப்பணகை, இராமன்மீது தீராக் காமம் கொண்டு பிதற்றினள். சீதை இருப்பதால்தான் தன்னை இராமன் தேடவில்லை என்று தவருக எண்ணிச் சீதையைத் தூக்கப்போய் அங்கங்கள் இழந்தாள். அண்ணன் இராவணனிடம் சீதையின் அழகை வருணித்தாள்.

மயிலுடைச் சாயலாளை வஞ்சியா முன்னம் நீண்ட, எயிலுடை இலங்கைநாதன் இதயமாம் சிறையில் வைத்து விட்டான். "பூமான் குழலாளை வவ்வுதி" என்று விரட்டினுள் சூர்ப்பணகை. இராவணனே, தவவலிமையுடைய மாரீச னிடம் சென்றான். சீதையை அபகரிக்க அவன் துணையை, உதவியை வேண்டினன். மாரீசன் இவனுக்கு எவ்வளவோ விதமாகப் புத்திமதி கூறினன். கேட்காமல் அவனை அச்சுறுத் தினன் தசமுகன். இவன் கையால் சாவதைவிட இராமன் கையால் சாதலே மேல் என்று துணிந்த மாரீசன், 'என்ன மாயம் யான் இயற்ற வேண்டும்?' என்ருன்.

"பொன்னின் மானுகிப் புக்கு, பொன்னை மால்புணர்த் துக என்று" தசகண்டன் வழி கூறினன். சுற்றத்தினரைக் காண்பது இன்ருேடு அற்றது என்று துயரால் நைந்துருகிய வாறே புறப்பட்டான் மாரீசன். இராமன் கையால் மாய (மாய) மான் ஆனன்.

## துளசி காட்டுவது

துளசிதாசர் இந்த இடத்தில் மாரீசனை இராவணன் வற்புறுத்தி மானுகப் போகச் சொன்னதை எல்லாம் அப்படியே வைத்துள்ளார். ஆனல் இராமனிடம் இலக்கு வன், 'அண்ணா—இது மாரீசனுடைய மாய வேஷம்' என்று

சொல்கிருன். உடனே இராமன், "தம்பி, இவன் அரக்கன் மாரீசன் என்ருல் கொல்ல வேண்டியதுதான்-உண்மை மாளுக இருந்தால் பிடித்துத் தருகிறேன், சீதைக்கு" என்று கூறிவிட்டு மேலும்,

"நாம் செய்யவேண்டிய காரியங்கள் இவனேயே பொறுத் திருக்கின்றன அல்லவா?" என்றும் பேசுகிருன். அவதார ரஹஸ்யம் சீதை அபகரித்துச் செல்லப்பட்டபின்தான் நிறை வேறும் என்பது குறிப்பு.

மாரீசன் இராமனின் அம்பால் விழும்போது ராமன் குரல் போலக் குரல் எழுப்ப, சீதை இலக்குவனே ஏசி அனுப்பு கிருள். பரமனுக்கு அடியவன், (பாகவதன்) இலக்குவனே ஏசிய அபசாரம் பகவத் சான்னியத்தை இழக்க வைத்தது. சிறையில் வாடவைத்தது. அங்கு ராமநாமம் சீதையைப் புனிதப் படுத்தியது என்கிருர் துளசிதாசர்.

இவையனைத்தும் நடத்தியது உண்மையான சீதையன்று, மாய சீதை என்றும் கூறுவார் துளசி.

## பொன் மான் கண்ட பெண் மான்

சீதை பர்ணசாலேயின் முகப்பில் பூஞ்சோலேயில் 'தன் வால்வனே மென்கை' என்னும் கொய்யா மலரால் மலர் கொய்து கொண்டிருந்தாள்.

'பண்டு யாரும் உரு இடர் பாடுறுவாள்' பொன் மானேக் கண்டாள் என்று பிராட்டி அவதார நோக்கத்திற்காக நாட்டில் யாரும் படாதன படப்போகும் (சிறையிருக்கும்) மேன்மையைக் குறிப்பிட்டார். துளசிதாசரும் இந்த இடத்தில் இவ்வாறே அழகுறக் காட்டுவார்.

'ரகுவீரா, இந்த அழகான மானேப் பாருங்கள்! அதைக் கொன்று எனக்குச் சர்மத்தையாவது தரவேண்டும்' என்று பிராட்டி வேண்டிக்கொண்டாள். ரகுபதிக்கு இந்த மானேப் பற்றியும், அதன் காரணமான உடலேப்பற்றியும் நன்கு

தெரிந்தும் தேவகாரியத்துக்காக (இராவண வதம் நடத்த வாக்குத் தேவர்கட்குத் தந்தது) பிரபு எழுந்து சென்ருர்.

துளசி இவ்வாறு காட்டியதுபோலவே கம்பரும் அற்புதமாய்ச் சொல்லிவிட்டார்.

"காணு இது கைதவம் என்று உணராள்
பேணுத நலம்கொடு பேணினளால்
வாழ்நாள் அவ் விராவணன் மாளுதலால்
வீழ்நாளில் அறம் புவி மேவுதலால்"

(இராவணன் வாணுள் இறுதி பெறுதலாலும், நல்லறம் புவியில் நிலைபெற வேண்டியிருப்பதாலும் தான் பொன் மானின் அழகில் ஆசை கொண்டாள்.)

விதி தூண்டியதால்தான் சீதை இராமனிடம் பலமுறை வற்புறுத்தி மான் பிடித்துத் தரச் சொல்கிருள். அதே விதிதான் இளையபெருமாள் 'அரக்கர் மாயை' என்று ஐயுற்ற போதும் "இல்லாதனஇல்லை இளங்குமரா!"என்று இராமனை மறுத்துப் பேச வைக்கிறது. வேத முதல்வனுக்கும் பிராட்டிக்கும் விதியா என்று வியக்கிறீர்களா? அமரரின் நல்வினையும், அரக்கரின் தீவினையையும்தான் 'விதி' என்று குறிப்பிடுகிருேம். இளையபெருமாளை அனுப்பியிருக்கலாமே என்பர்! சாதாரண மானுடக் காதலன் நிலையில் நடிக்கும் சீதாராமரின் அவதார நடிப்பு இது. காதல் விழிவழி பேசி உதயமானதுபோல், விழியை மூடவைத்து விடுவதும் இயல்பே!

'கைதவ மான் என்று தடுக்கிருயே, தம்பி! அப்படி இது மாயமான் என்ருல் என் வாளியால் மடியட்டும். தூயதானுல் பிடித்து வருவேன். இது இறந்தால் அரக்கரில் ஒருவனைக் கொன்ற நன்மை தானே விளையும்! இரண்டில் ஒன்றுதானே நடக்கும்!' என்ருன். தேவரை இடுக்கண் தீர்ப்பான் என்கிருர் கவிஞர்.

"பகையுடைஅரக்கர் என்றும், பலர் என்றும் பயிலும் மாயம்
மிகையுடைத் தென்றும் பூண்ட விரதத்தை விடுதும் என்றல்
நகையுடைத் தாகும் அன்றே! ஆதலின் நன்றிது என்ன
தகையுடைத் தம்பிக்கு அந்நாள் சதுமுகன் தாதை சொன்னான்!"
(மாரீசன் வதைப்படலம். 65)

இந்தப் பாடல் தெளிவாக இராமன் திருமால், (சதுமுகன் தந்தை) அவதார ரஹஸ்யத்திற்காக மானுடனாக நடித்து அதேசமயம் தேவருக்குத் தந்த வாக்கையும் காத்தான் என்கிறார் கம்பர். இராவண வதத்திற்கு முன்னோடியான இந்தச் செயலை, மான் வேட்டையை இராமன் நடத்தவில்லை எனில் சீதையைப் பிரிவது எங்கே?

நெட்டிலைச் சரத்தால் மாரீசன் விழுந்தபோது குரல் கொடுக்க, பிராட்டி துடித்துப் புலம்புகிறாள். இளையபெருமாள் இராமனுடைய வீரதீரபராக்கிரமங்களைச் சொல்லி அவருக்கு ஆபத்து நேராது என்று எடுத்துரைத்தும் 'கள் எனக் கரிய அக் கமலக் கண்ணனை யார் எனக் கருதி இடரில் ஆழ்கின்றீர்?' என்று தேற்றியும் நம்பாது கடிந்து பேசுவதும் சீதைக்குத் தகுமா என்று சிலரை வேதனை வசப்பட்டுப் பேச வைக்கிறது.

ஆனால் ஒரு கற்புடைய நங்கை கணவனுக்கு ஆபத்தோ என்று அஞ்சித் துடிப்பதும், அப்படி நேர்ந்திருக்கும் என்று அஞ்சும்போது எதிரே நிற்பவரை இவ்வாறு பேசுவதும் தானே இயல்பு! அதுதானே பாசம். பாசத்தால் அறிவுமடம் படுவது தானே பெண்மைக்கு அழகு!

அப்படிப் பிராட்டி பேசாவிட்டால் இளைய பெருமாள் விட்டுச் செல்வாரா? இளைய பெருமாள் பிராட்டியைத் தனியே விட்டுச் செல்லவில்லையானால் தசமுகன் பிராட்டியை எடுத்தேக முடியுமா? எடுத்தேகாவிட்டால் இராமாவதார நோக்கம் நடக்குமா? இதையெல்லாம் கருதுக!

# 5. வீரன், வில்லறம் துறந்தானு?

இராம காதை இந்த நாட்டில் பயின்றுவரத் தொடங்கிய நாள் முதலாக மிகப்பெரிய கேள்விக் குறியாக இருப்பது வாலி வதை அல்லது வாலி மோட்சம் எனப்படும் பகுதி. வாதிடும் அறிஞர்கள் கேள்விக் கணைகளால் ஆராய்ச்சிக் கூர் வாளால், துளைத்தும், அரிந்தும் முடிவு காணுத ஒரு சிக்கலாக இப்பகுதி திகழ்கிறது. காப்பிய ஒருமைப்பாடு என்று ஒன்று உண்டு. நிகழ்ச்சியின் முன்பின் தொடர்ச்சிகளை இணைத்துப் பார்த்தால்தான் அது புரியும். கிட்கிந்தா காண்டத்தில்தான் இந் நிகழ்ச்சி இடம் பெறுகிறது. கிட்கிந்தா காண்டத்தின் தொடக்கத்தில் இராம இலக்குவரை அனுமன் சந்திக்கிருன். இவர்களே தரும மூர்த்திகள் என்று அறிஞன் அனுமனைக் கொண்டு கம்பன் கூற வைக்கிருன்.

"காய்எரி கனலும் கற்கள் கள்ளுடை மலர்களே போல்
தூயசெங் கமல பாதம் தோய்தொறும் குழைந்து தோன்றும்
போயின திசைகள் தோறும் மரனெடு புல்லும் எல்லாம்
சாய்வுறும், தாழ்வ போலிங் கிவர்களோ தருமம் ஆவார்!"
(அனுமப்படலம்—12)

அதன்பின் அனுமனின் அறிமுகம் இராமனுக்கும், இராமனின் புகழுரை அனுமனுக்கும் கிடைக்கின்றன. சுக்ரீவனிடம் இவர்களைப்பற்றிக் கூறி நட்புக் கொள்ளச் செய்ய ஆவலாக ஓடுகிருன் அனுமன். 'வாலியின் வலி தெறக் காலர் வந்தார். இனி நாம் இடர்க்கடல் கடந்தோம்' என்று வருவதுணரும் நுண்ணறிவுடன் பேசுகிருன் அனுமன். கதிரவன் சிறுவனும் சுக்ரீவனும் இராமபிரானை வந்து காண்கிருன்.

"கண்டனன் என்ப மன்னோ கதிரவன் சிறுவன், காமர்
குண்டலம் துறந்த கோல வதனமும் குளிர்க்கும் கண்ணும்
புண்டரிகங்கள் பூத்துப் புயல்தழீஇப் பொலிந்த திங்கள்
மண்டலம் உதயம் செய்த மரகதக் கிரியன் னானை—"
(நட்புக்கோட் படலம்—17)

பின், நோக்கினன். எதை? அன்று தொட்டு இன்று காறும் உலகெல்லாம் புரிந்த பாக்கியம் ஒன்று சேர்ந்து குவிந்து இருபடிவம் ஆகி வீரர் வடிவுடன் தோன்றியதை நோக்கினன்.

பின் தேறினன்—மானிடர் ஆகிவந்த தேவர் இவர் களால் மானுடம் வென்ற தன்மையை!

'சரண் உனைப் புகுந்தேன்; என்னைத் தாங்குதல் தருமம்' என்று காலில் விழுந்தான். சுக்ரீவசரணாகதி அரக்கர்களை அழிக்கத் தனிப்பெரும் சாதனமாயிற்று. சுக்ரீவனை நோக்கிக் கருணையின் மலர்ந்த கண்களோடு, இராகவன் கூறினன்.

"வானிலும், மண்ணிலும் உன் பகைவர் எனக்கும் பகைவர். தீயவராயினும் உனக்கு உற்றார் எனக்கும் உற்றாரே! உன் சுற்றம் எனது. என் காதல் சுற்றம் உனது! நீ என் உயிர்த் துணைவன்."

பின், சுக்ரீவனின் அழைப்பினை ஏற்று அவன் வாழிடம் சென்றான் இராமன். அங்கு கனி, கிழங்கு முதலியவற்றைச் சுக்ரீவனே பரிமாறக் கண்டு, ஐயுற்ற தசரத குமாரன், 'பொருந்து நன்மனைக்குரிய பூவையைப் பிரிந்துளாய் சொல்லோ, நீயும்?' என்று அனுதாபத்துடன் கேட்டான். அனுமனும் அறிவுடை அமைச்சன் சமயம் பார்த்து—'வாலி என்றுளான் வரம்பில் ஆற்றலான். இவன் முன்னோன். இவனது அரசினையும், அருமருந்தனைய தாரத்தையும் வவ் வினன்' என்று எடுத்துரைத்து வாலியின் இரக்கமற்ற, பண் பற்ற செயல்களை விரித்துரைத்தான். 'வையம் நுங்கிய வாய் இதழ் துடித்தது. சீற்றமில்லாத சிதை மணாளனுக்குச்

சீற்றம் வந்தது. தம்பியர் அல்லது தனக்கு வேறுயிர் இல்லை என்றிருக்கும் இராமசந்திரமூர்த்தி, தம்பியை வெறுத்து அவன் மனைவியைக் கவர்ந்த வாலியின் செயலைப் பொறுக்குமோ? எதிரே வந்து போரிடுவாரின் நல்வலம் பாகம் எய்தும் வரம் பெற்றவன் வாலி எனவும், இவனுடைய வால் செல்லாத வாய் அல்லது இராவணனின் கோல் செல்லாது; குடையும் செல்லாது எனவும் குறிப்பிட்டான் அஞ்சனை சிறுவன். "மாயாவி என்ற அவுணனுடன் போரிட்டவாறு பிலத்துள் புக்க வாலி பலமாதம் கடந்தும் வாராமையால்—அவன் இறந்தான் என்று வருந்தியிருந்தான் சுக்ரீவன். பிற வானரங்கள் தலைமை ஏற்று ஆளுமாறு சுக்ரீவனை வற்புறுத்திய பின்தான் அரசேற்றான். மாயாவி மீண்டும் வரக்கூடும் என்றஞ்சி பிலத்துவாரம் பாறையால் மூடப்பட்டது. ஒரு நாள் கோபத்துடன் பாறையைத் தள்ளிவிட்டு மீண்டு வந்த வாலியைக் கண்டு மகிழ்ந்தான் சுக்ரீவன். வாலியோ சீறிச் சினந்தான். தம்பியோ அவனடி வணங்கி மன்னிப்பு வேண்டிப் பணிந்தான். புரிந்து கொள்ள மறுத்த வாலி, முன்கடல் கடைந்த கரதலங்களால் உடல் கலக்கினான். சுக்ரீவன் ஓடி ஒளிந்தான். ஒரு முனிவரின் சாபத்தால் இம்மலைக்கு வாலி வரமாட்டான் என்பதால் சுக்ரீவன் இங்கிருக்கிறான். அரசுடன், இவன் மனைவி ருமையையும் அவன் அபகரித்தாள்கிறான்—'' என்று விரிவாகச் சொல்லி—சுக்ரீவன் குற்றமற்றவன் என்றான் அனுமன். 'வாலியைக் கொன்று தலைமையும் தாரமும்' தர நிச்சயித்துச் சொல்லுகிறான் இராமன்.

சுக்ரீவன் வாலியைப் போருக்கு அழைக்கிறான். தாரை, 'அரச! ஆயவர்க்கு இன்னுயிர்த் துணைவனாய், உன் உயிர் கோடற்கு இராமன் என்பவன் துணை வந்தான் என்று நெருங்கிய அன்பினர் சொல்லக் கேட்டேன்' என்று தடுக்கிறாள். 'தம்பியர் அன்றித் தனக்கு வேறு உயிர் இல்லை என்று வாழும் இராமன் எங்கள் சண்டையில் தலையிடமாட்டான். அவன் அறநெறி காட்ட வந்தவன். அவனுக்குப் பொருந்

தாதவற்றைச் சொல்லாதே! பாவி! பிழைத்தனை உன் பெண்மையால்! (நீ பெண்ணாயிருப்பதால் பிழை செய்தாய்; பெண் புத்தி பின்புத்திதானே என்று ஒரு பொருள். நீ பெண் ஆதலால் பிழைத்தாய். இல்லையென்றால் கொன்றிருப்பேன் என்பது குறிப்பு.)

சுக்ரீவனை வாலி நையப் புடைக்கின்றான். நிலை குலைந்து ஓடி வருகிறான் சுக்ரீவன். கொடிப்பூ மாலையணிவித்து அனுப்புகிறான் இராமன். போர் மீண்டும் நடக்கிறது. சுக்ரீவனைத் தூக்கி எடுத்துத் தரையில் அடித்துக் கொல்ல வாலி முயலும்போது இராமபாணம் வாலி மார்பில் பாய்ந்து அவனைக் கீழே தள்ளுகிறது. இந்தக் கொலை முயற்சி வாலியின் மூர்க்க குணத்தைக் காட்டுகிறது. கீழே விழுந்த வாலியைக் கண்ட சுக்ரீவன் நேசத்தாரைகள் சொரிய நிலத்தில் மூர்ச்சையுற்று விழுகிறான். இதிலிருந்து சுக்ரீவன் கள்ளமற்றவன்; அன்புடையவன்; இராச்சியத்தை அடைவதற்காகப் பேராசையால் வாலியைக் கொல்லச் சொல்லவில்லை. தற்காப்புக்காக இராமனைச் சரணடைந்தான் என்பதே உண்மை!

இராமன் எனும் செம்மை சேர் நாமம் தன்னைக் கண்களில் தெரியக் கண்ட வாலி அதிர்ச்சியடைந்து, அடுசரம் தொடுத்தவனைச் சுடுசரமாய்க் கேள்வி கேட்கிறான்.

1. இல்லறம் துறந்த நம்பி, வில்லறமும் துறந்தாயா? சொல்லறம் துறவாத சூரிய மரபும் நல்லறம் துறந்து விட்டதே.

2. வாய்மை மரபும் காத்து மன்னுயிர் துறந்த •வள்ளல் தசரதன் மகன் நீ, பரதன் என்கிற அறத்தின் தேவுக்கு அண்ணன் நீ! இது செய்தது அழகா?

3. ஆவியை, சனகன் பெற்ற அன்னத்தை, அமிழ்தின் வந்த தேவியைப் பிரிந்தபின் திகைத்தனை போலும் செய்கை?

4. அரக்கன் செய் பிழைக்கு, இரக்கமற்றுக் குரக்கினத்து என்னை நீ கொல்லலாமா?

5. தம்பிக்கு அரசு நாட்டில் தந்து விட்டு, இங்கு அதே புரட்சியைக் காட்டிலும் செய்கிறாயா?

6. இருவர் போரிடுகையில், ஒளித்து நின்று அம்பெய்தது ஏன்?

7. இது வீரமா? விதியா? மெய்மையின் வாரமா? நின் மண்ணுக்கு என் உடல் பாரமா? பகையா? ஈரமன்றிப் பண்பிழிந்து இது செய்தாயே!

8. சந்திரனில் மட்டுமே மறு இருந்தது. உன் செய்கை உன் மரபின் சூரியனிலும் மறு ஏற்படுத்திவிட்டதே!

9. வாலியையா கொன்றாய்? மன்அற வேலியை அன்றோ பிரித்தாய்?

என்ற வினாக்கள் வாலியின் புத்திக் கூர்மை, சான்றாண்மை எல்லாவற்றையும் காட்டுகின்றன.

இரு குற்றங்களைக் கருதி வாலியை அடித்ததாக இராமன் கூற்று.

1. குற்றமற்ற தம்பியைக் கொல்ல முயன்றது.

2. அவன் தம்பி மனையாளைத் தன் தாரமாக்கிக் கொண்டது.

ஈரமும், இற்பிறப்பும், வீரமும், கல்வியின் மெய்நெறி வாரமும், மற்றொருவன் புணர் தாரத்தை வவ்வுவதா?— வாலியின் சொற்களை அவனிடமே அற்புதமாய்த் திருப்பும் இராமனின் சொற்கள் இவை!

குரக்கினத்தில் அபேதப்புணர்ச்சி அறம் என்பது வாலியின் சமாதானம். இராமன் சட்டென்று வெட்டிப் பேசுகிறான்—அறநெறி உணர்ந்த நீ விலங்கா? முதலை பற்றிய

போது ஆதிமூலத்தை அழைத்து வீடு பெற்ற யானை விலங்கா? சீதையைக் காக்கத் தன் உயிர் புகழுக்கு விற்ற சடாயு பறவையா? ஆதலால் விலங்கு என்ற போர்வையில் நீ தவறு செய்வதை மன்னிக்க முடியாது!

அப்படியானால் வேடன் போல மறைந்து நின்று அம் பெய்த மர்மம் என்ன?—என்ற வினாவுக்கு விடை சொல்ல இளவல் வருகிறான்.

'முன்புநின் தம்பி வந்து சரண்புக முறையி லோயைத்
தென்புலத்து உய்ப்பன் என்று செப்பினன்; செருவில் நீயும்
அன்பினை உயிருக் காகி அடைக்கலம் யானும் என்று
என்பது கருதி அண்ணல் மறைந்துநின் றெய்த தென்றான்.'
(வாலிவதை--125)

அறத்திறன் அழியச் செய்யமாட்டான் புவியுடை அண்ணல் என்று புரிந்துகொண்ட, சிறியன சிந்தியாதான் துதித்துப் போற்றுகிறான்.

பின் மன்னிப்பு வேண்டுகிறான். தம்பிக்கு அடைக்கலம் கேட்கிறான். இராமனிடம் மகனை ஒப்படைக்கிறான். தம்பிக்கு அறிவுரை கூறுகிறான். நிம்மதியாக வானுக்கு அப்புறத்தனாகிறான்.

## வினாவும் விடையும்

1. கம்பனது வாலி மிக அற்புதமான பாத்திரம். வழியலா வழிமேல் சென்றவன் அல்லன். பழிபடும் செயல் செயும் இழிகுணத்தவன் அல்லன்.சிறியன சிந்தியாதான் அவன்! சடாயுவைத் தந்தையாக ஏற்ற இராமன், குகனைத் தம்பி என்று தழுவிய நேயன், தன் மனைவி சீதையைப் பிரித்த பாவி தசமுகனின் தம்பிக்கும் அருள் செய்த தண்ணளியான், கபடறியாமல் தன்னைப் புகழ்ந்துபேசி மதிப்புக்கொண்டிருந்த வாலிக்குக் காலனாகிவிட்டானே! நியாயமா?

விடை : கூட்டு ஒருவரையும் வேண்டாக் கொற்றவன் தசரதன் மகன். (அசகாய சூரன்.) இருப்பினும் அவதாரம் மானுட வடிவு கொண்ட அவதாரம் என்பதால் தேவர்களே வானரர்களாக வந்து துணை செய்ய ஏற்பாடு. சரண் என்று வந்தவரை, தூய நல்லன்பு கொண்டவரைத் துணைஎன ஏற்ருன். அவர்கள் எல்லோரும் களங்கமற்றவர்கள். யாருக்கும் தீமை செய்யாதவர்கள். ஆனல், வாலியோ குற்றம் உடையவன்! அதனல் குற்றம் செய்தவனுக்குக் கூற்றம் (எமன்) ஆயினன் இராமன்.

2. சுக்ரீவன் எப்படிப்பட்டவன், அவனது பகைவன் யார், என்பது ஆராயாமால் தீ நட்பு, அவசர நட்புக் கொண்டதால் பழி பெற்ருன். உன் துணைவர் தீயராயினும் அவர் என் துணைவர். உன்பகை எனது—என்பது உணர்ச்சி வேகப்பட்ட ஒருதலைத் தீர்ப்பல்லவா?

விடை : இல்லை; உணர்ச்சி வசப்பட்டுத் தீர்ப்பளிக்கவில்லை இராமன். கவந்தனும் சபரியும் வாலி என்ற வரம்பில் ஆற்றலாளைத் துணைக் கொள்ளுமாறு இராமனிடம் சொல்லவில்லை. குற்றமற்ற எளிய சுக்ரீவனையே சேரச் சொல்லி அனுப்பினர். அனுமனே ஞானி; சொல்லின் செல்வன்; நல்லறிவாளன். அவனும் வாலியை விட்டு அரசிழந்த சுக்ரீவனிடமே இருக்கிருன். ஆகவே சுக்ரீவன் நல்லன். குற்றமற்றவன் என்றே அவனை ஏற்றுக் கொள்கிருன் இராமன். எளிமையோடு வந்து 'சரண் உனைப் புகுந்தேன், எனைத் தாங்குதல் தர்மம்' என்று காலில் வணங்குபவனுக்குச் சரண் தருவதே சான்ருண்மை. அதுவும் இராமன் சரணுகத வத்ஸலன். இராம காதை சரணுகதி சாஸ்திரம். எனவே சுக்ரீவனை நட்புக் கொண்டது சரியே? ''மற்றினி உரைப்ப தென்னே வானிடை மண்ணில் நின்னைச் செற்றவர் என்னைச்

செற்ருர்; தீயரே எனினும் உன்னேடுற்றவர் எனக்கும் உற்ருர்''—என்பது தெரிந்து சொல்லிய மாற்றமே!

3. சுக்ரீவனிடம் வாலியைக் கொன்று உனக்குத் தலைமையும் தாரமும் தருவேன் என்று இராமன் எப்படிக் கூறலாம்? தாரத்தை மீட்டுத்தருவது வேண்டுமானல் செய்யலாம்; வாலியின் மணி முடியைப் பறிப்பது அவசியமா?

விடை: தாரத்தை வலிந்து பற்றிவர வலிமையின்றித் துணையின்றி இருந்த சுக்ரீவனுக்கு இராமன் உதவினன்! அவனல் அறிவுக் குறையுள்ளவர்களை மன்னிக்க முடியும். ஒழுக்கக் குறைபாட்டை மன்னிக்க முடியாது. மனமறிந்து அறநெறி தெரிந்தும் தவறுசெய்பவன் நாட்டின் தலைமையில் இருக்கலாகாது என்றுதான் வாலியைக் கொன்று அவ்வரசைச் சுக்ரீவனுக்கும், இராவணனின் அரசை வீடணனுக்கும் தந்தான்.

4. இராவணனுக்குக்கூடச் சந்தர்ப்பம் தந்த இராமன் வாலிக்கு ஏன் எடுத்த எடுப்பிலேயே கொலைத் தண்டனை தரவேண்டும்? விசாரித்தானு?

விடை: இராவணன் ,சீதையிடத்து ஆசை கொண்டது உண்மை; ஆனல் தவறு ஏதும் செய்யவில்லை. செய்ய முடியாது. தேவியைத் தீண்ட முடியாது. விருப்பமில்லாத பெண்ணைத் தீண்டினல் தலை பத்தும் வெடித்து விடும். ஆனல் வாலி, அப்படியில்லையே! தவறு செய்து விட்டானே! ருமையை அனுபவித்துவிட்டானே. இனித் திருந்த சந்தர்ப்பம் எங்கே கொடுப்பது? தவறு நடந்த பின் தண்டனைதானே தரவேண்டும்.

5. குரங்கினத்துக்கு ஒழுக்க முறை யாரும் யாருடனும் வாழ்வது—என்று வாலி சொல்கிருனே!

விடை: அது செய்த தவற்றுக்குச் சப்பைக் கட்டு. எல்லாக் குரங்கும் வாலியும் ஒன்ரு? எந்தக் குரங்கு முப்போதும் கண்ணுதலைப் பணிந்தது? எந்தக் குரங்கு நாலுவேதமும்

கற்றது? சடாயு கஜேந்திரன் இவர்களைப்பற்றிச் சொல்லி இராமன் 'அறநெறி அறியாத மனிதர் விலங்குக்குச் சமம். அறநெறி உணர்ந்த விலங்கு தேவனாகும்' என்றானே!

6. தீய புரிந்த தாடகையைப் பெண் என்பதால் கொல்ல மறுத்த தூய வீரன், இருவர் போர் எதிர்த்தபோது, மறைந்து நின்று ஒருவனைக் கொன்றது அறமா?

விடை : வாலியே மனச் சமாதானம் அடைந்து இராமனைப் புகழ்ந்து துதிக்கிறான் என்பதும் கருதத் தக்கது. இலக்குவன் வெளிப்படையாக ஒரு சமாதானம் கூறினானே அதுவும் குறிப்பிடத்தக்கது. "முன்பு நின் தம்பி வந்து சரண் புகுந்தான். உன்னைக் கொன்று தலைமையும் தாரமும் தருவதாக வாக்குறுதி தந்துவிட்டான் அண்ணன். நீயும் உயிருக்கஞ்சி அபயம் என்று வந்தால் உனக்கும் அருள் செய்ய வேண்டும். தம்பி சுக்ரீவனுக்குத் தந்த வாக்கை நிறைவேற்ற முடியாதே. அதனால்தான் வேறிடத்து நின்று அம்பெய்தான்'' என்பதுதான் இளவல் கூறும் சமாதானம். (இராமன் சொன்ன சொல்லை, வாய்மையைக் காப்பாற்றுபவன்.)

இதை இராமனே சொல்லாது, இளைய பெருமாள் ஏன் சொல்ல வேண்டும் எனில் இராம காதையில் எங்குமே இராமன் தன் புகழைச் சொன்னதில்லை. கூனி கைகேயி யாரையும் குறை சொன்னதுமில்லை. ஆகவே இளைய பெருமாள்தான் அவன் பெருமையைச் சொல்ல வேண்டும். அதுதான் அழகு.

இதுமட்டும்தான் காரணமா? வேறு சில காரணங்களும் ஊகித்துணரற்பாலன. துளசிதாசர் சொல்லும் அழகிய விடை ஒன்றைக் காணலாம்.

வாலி வதம் ஏற்பட்டால்தான் இராவணனுக்கு இராமன் சாதாரண மனிதன் இல்லை என்று விளங்கும்.

(தசமுகனை வாலில் கட்டி இழுத்த வலியுடை வாலியை, ஒரு வாளியால் வானுக்கு அப்புறத்தனுக்கினன் இராமன் என்று புரிந்துகொண்டால்தான் இராமனின் வலிமை தெரியும்! இராமபெருமான் தன்னை மானிடனாகவே எண்ணி நடந்தாலும் பரத்வத்தை முக்கிய கதாபாத்திரங்கள் உணர்ந்தார்கள்.) வாலியின் ஆட்சேபனைகள் நிஜமாக எழுப்பப்பட்டவை அல்ல. பரப்பிரம்மத்துடன் போட்டி போட முடியுமா என்பார் துளசி.

சடாயு, கஜேந்திரன் போன்றவர் நற்குண நற்செயல்களால் அடைந்த உயர்பதத்தைத் தவறு செய்த வாலிக்குத் தண்டனை மூலம் தந்து உயர்த்திவிட்டான் ஸ்ரீராமன். வாலி மோட்சம் அடைந்தான்.

வாலி எதிர்ப்பவர் உரமும் வரமும் பாதிதனக்குவேண்டுமெனக் கேட்டது முதல்தவறு. அந்த வரபலத்தின் செருக்கால் தம்பியையும் கொல்ல முயன்றது மன்னிக்க முடியாத குற்றம்.உலகியல் உதாரணம் ஒன்று காண்போம்—திருடுவது குற்றம். ஒரு இடத்தில் ஒருவன் திருடிவிடுகிறான். அந்தப் பிரதான வீதியில் 25 கிலோமீட்டர் வேகத்திற்குமேல் போவது தண்டனைக்குரியகுற்றம் என்றிருந்தும், இவன் 40 கிலோ மீட்டர் வேகத்தில் போகிறான் என்றால்—அவனைப் பிடிக்க வரும் காவல்துறையினர் அவனுக்குமேல் 60 கிலோ மீட்டர் வேகத்திலாவது சென்று அவனை மறித்துப்பிடித்துத் தண்டனை தரத்தான் வேண்டியிருக்கும். வரம் பெற்றதும் தவறு, அதன் துணையால் இரக்கமற்று நடந்ததும் குற்றம். அதற்கு மாறான வழியில் சென்றுவது அவனைத் தண்டித்தால் தான் அறம் காக்க முடியும் என்ற நிலை இராமனுக்கு. அதன்படி செய்தான். இராமனுக்கும் இந்த வரத்தால் பலம் குறைந்து வாலிக்குப் பாதி சென்றுவிடுமா என்பர். அப்படியன்று; சிவன் தந்த வரத்தை மதித்தான் என்றே பொருள் கொள்ள வேண்டும்.வாலியின் இந்த வரம் எல்லோரிடத்தும் பலிக்குமென்றால் அவன் மாயாவியுடன் பிலத்தில் பலமாதம் சண்டையிட்டிருக்க வேண்டாமே!

வாலி இராவண வதத்துக்காக வானரவடிவம் கொண்ட தேவன்! இந்திரனின் அம்சம் அவன்! அப்படி வந்தவன் இராவணனையே நட்புக்கொண்டது இராணுவ உடன்படிக்கை மீறல் போன்ற குற்றமல்லவா? அவனைக் கொல்லல் தானே சரி! வந்தகாரியத்தை மறந்து அழிக்க வேண்டியவனை அன்புக் கரம்நீட்டி அரவணைத்தவன் தண்டனைக் குரியவனே! அவனைப் புறப்பட்ட இடத்துக்கே அனுப்பி வைத்தான் இராமன். இராம நாடகத்தில் இராமனிடம் 'நான் உன் உயிர்த்தோழன்' என்று பேச வேண்டிய வசனத்தை நிலை மறந்து இராவணன் எனும் பாத்திரத்திடம் பேசிவிட்டான். நாடகத்தில் வசனத்தை இடம் மாற்றிப் பேசும் நடிகன் திரைக்குள் இழுக்கப்பட வேண்டியவன். அதுபோல் திரை மறைவிலிருந்து வாலி என்ற பாத்திரத்தை இழுத்துத் தள்ளி அவன் மேலும் தவறு செய்யாமல் காத்தான் இராமன். அவனுடைய துணை இராமனுக்குத் தேவையில்லை. ஆனால் அவன் மேலும் மேலும் குற்றவாளியாகக் கூடாதே! இராம ராவண யுத்தம் என்று வரும்போது வாலி இராவணனுக்குத் துணைநின்றால் பெரும் குற்றமாகுமே! இதையெல்லாம் அவதார புருஷன் ஒவ்வொன்றாகச் சொல்லி விளக்கம் தர இயலாதல்லவா? அதனால்தான் விளக்கம் கேட்க இடமின்றி மறைந்தே நின்று அம்பெய்தான். இது ஒருவகை அதிர்ச்சி வைத்தியமாகத் தசமுகனுக்கு இருக்கட்டும் என்றும் இருக்கலாம்.

வாலிமீது அதிகமான சினத்திற்குக் காரணம்—அவனது ஒழுக்கக் கேடுதான். தம்பி மனைவியைத் தன் மகள், அல்லது மருமகள் என்று கருத வேண்டியவன் தவறாக அனுபவிக்கலாமா? இராமாவதாரத்தில் முதன்முதலில் அகலிகைக்கு அருள் செய்த போது அவளை வஞ்சித்துக் கெடுத்தவன் இந்திரன் என்று கேட்டறிந்தான். இந்திரன் (வாலி) இப்போதும் ருமையைத் தவறான முறையில் அனுபவித்தது அவன் சினத்தை மிகுவித்தது. கொலையாளி ஒருவனுக்கு, குற்றவாளி ஒருவனுக்கு நீதிபதி கொலைத்தண்டனை தந்தால்

நீதிபதியும் கொலை செய்தவர் என்பதல்ல பொருள். அறத்தை நிலைநாட்ட அறமற்றதையும் செய்ய வேண்டியிருக்கிறது. இராமனும் அறம் காக்க இம் மறச் செயல் செய்தான்! அதனால் அறம் காத்த அவன் வீரம் புகழுக்குரியதுதான்.

"ஏவுகூர் வாளியால் எய்து நாய் அடியனேன்
ஆவி போம் வேலைவாய் அறிவு தந்தருளினாய்!"

என்ற வாலியின் கூற்று ஞானம் பெற்றவனின் பேச்சு. நெடிது நோக்கு நோன்மையுடைய இராமனின் செயலை அடிபட்ட வாலி உணர்ந்து கொண்டான். மன்னிப்பு வேண்டினான். தம்பியைக் காக்க வேண்டினான். தன் மகனைக் கையடையாகத் தந்தான். இராவணனைப் பற்றிவந்து இராமன் தேவியை மீட்டுத்தர இயலாமற் போன நிலைக்கு வருந்தினான். வானுக்கு அப்புறத்தனானான். மோட்சம் பெற்றான். இதற்கு மேலும் என்ன வழக்கு?

# 6. வீடணன் துரோகியா? தியாகியா?

விபிஷண சரணாகதி குறித்து, அது இராச்சிய ஆசையினால் ஏற்பட்டதா அல்லது களங்கமற்ற தூய உள்ளம், அறத்திற்குப் புறம்பாகநடக்க இசையாததால் ஏற்பட்டதா? இது ஒரு முக்கியமான கேள்வி. ஆராய்ந்து விடை காண்போம்.

விபிஷணன் குற்றமற்றவன் என்பதற்குரிய சான்றுகள் பல பாடல்களிலும் உள்ளன. அவை அவன் தருமத்திற்குப் புறம்பாகச் சிறிதும் நடக்கவில்லை என்றே ஆணித்தரமாக உறுதி கூறுகின்றன. இவனுடைய குற்றமில்லாத தூயமனமே இவனை சரணாகதி அடையத் தூண்டிற்று. இராச்சிய ஆசை கொண்டு இவன் சரணாகதி அடையவில்லை. கம்பனின் உட்கருத்து இதுவே.

இராவணன் மந்திராலோசனை நடத்துகிறான். பலரும் அதில் பல்வேறு கருத்துகளை வெளியிடுகிறார்கள். பெரும்பாலோரும் இராவணனுடைய கருத்தினை ஏற்றுக்கொண்டே ஆலோசனைகள் கூறுகிறார்கள்.

"சுட்டது குரங்கு, எரி சூறையாடிடக் கெட்டது, கொடி நகர்" என்று இராவணன் மனம் கொதிக்கிறது. ப்டைத் தலைவர் முதலானோர் கோபத்தை அதிகப் படுத்துகிறார்கள்.

கும்பகருணன், "உன் செயல் வீர தருமத்திற்கு இழுக்கு ஆகும், ஆனாலும் இனிச் சீதையை விடுவது சரியன்று. போரிட்டு வானரர்களை அழிப்பதுதான் நாம் உடனே செய்ய வேண்டிய செயல்," என்கிறான்.

இராவணன் அவனை உற்சாகப் படுத்துகிறான். பிறகு இந்திரசித்து, தான் ஒருவனே போய் எதிரிகளை அழித்து விடுவதாகச் சொல்லுகிறான்.

இந்திரசித்தைக் கண்டித்து விபிஷணன் இராவணனுக்கு அறிவுரை கூறுகிறான். 'இலங்கை நகரைச் சுட்டது வானர மன்று சீதையின் கற்புக் கனலே.

கோநகர் முழுவதும், நினது கொற்றமும்,
சானகி எனும்பெயர் உலகினை தம்மனை
ஆனவள் கற்பினால், வெந்தது அல்லது, 'ஓர்
வானரம் சுட்டது' என்று உணர்தல் மாட்சியோ

(இராவணன் மந்திரப்படலம். 75)

என இவ்வாறு கூறுகிறான்.

மீனுடை நெடுங்கடல் இலங்கை வேந்தன் முன்
தானுடை நெடுந்தவம் தளர்ந்து சாய்வது ஓர்
மானுட மடந்தையால் என்னும் வாய்மொழி
தேனுடை அலங்கலாய்! இன்று தீர்ந்ததோ?

(இரா. மந். 77)

(இந்தப் பாட்டில் வேதவதி இராவணனுக்குக் கொடுத்த சாபம் குறிக்கப் படுகிறது.) இலங்கை வேந்தன் முன்னொரு நாள், "அவன் தவத்தால் பெற்ற வரங்களெல்லாம் தளர்ந்து அழிவது ஒரு மானிட மங்கையின் பொருட்டு" என்ற அந்தச் சாபம் பலிக்கும் காலம் வந்து விட்டதோ என்கிறான்.

'தீயிடைக் குளித்த அத் தெய்வக் கற்பினாள்
வாயிடை மொழிந்த சொல் மறுக்க வல்லமோ
'நோய் உனக்கு யான்' என நுவன்றுளாள் அவள்:
ஆயவள் சீதை, பண்டு அமுதின் தோன்றினாள்'

(இரா. மந். 81)

அந்த வேதவதியின் சாபம் பலிக்காமல் போகுமா? அவள் கற்பினைக் காக்க தீயினுள் குதித்த கற்புத்தெய்வ மல்லவா? அவளே சீதை என்கிறான்.

மேலும் இராமனின் சூரியகுலப் பெருமைகளை விவரித்து விட்டு நம் தீவினையின் விளைவாக இறைவனே மனிதனுய் தோன்றியுள்ளான் என்று கூறுகிறுன்.

'இசையும் செல்வமும் உயர் குலத்து இயற்கையும் எஞ்ச,
வசையும் கீழ்மையும் மீக்கொளக்கிளையொடும் மடியாது,
அசைவு இல்கற்பின் அவ்வணங்கை விட்டருளுதி;
இதன்மேல்
விசையம் இல், எனச் சொல்லினன்—அறிஞரின் மிக்கான்'
(இரா. மந். 99)

உனக்கு வெற்றி என்பது சீதையைவிட்டு விடுவதுதான். உயர்குலத்து இயல்பும், செல்வமும் மங்கிப் போக வசையும் கீழ்மையும் அதிகரிக்க, நீ சுற்றத்தோடு மடியாது இருக்க வேண்டும் என்ருல் அசைக்க முடியாத கற்புத் தெய்வமான சீதையை விட்டு விடுதல் வேண்டும் என்கிருன் மிகுந்த பேரறிவாளனுன விபிஷணன்.

இது கேட்ட இராவணன் மார்பும் தோளும் குலுங்கும் படியாகச் சிரிக்கின்ருன். வாலியின் வரத்தினுக்குப் பயந்து மறைந்திருந்து அவனைக் கொன்ற மானிடனு என்னைக் கொல்ல முடியும் என்கிருன்.

ஊனவில் இறுத்து, ஓட்டை மாமரத்துள் அம்பு ஓட்டி,
கூனி சூழ்ச்சியால் அரசு இழந்து, உயர்வளம் குறுகி,
யான் இழைத்திட இல்இழந்து, இன்உயிர் சுமக்கும்
மானுடன் வலி நீ அலால், யார் உளர் மதித்தார்?

'சிவதனுசை முறித்ததை பிரமாதப் படுத்துகிருர்களே அது ஏற்கனவே முறிந்திருக்க வேண்டும். மராமரங்களை ஏழினையும் துளைத்தான் என்கிருர்களே: அந்த மரங்கள் ஏற்கனவே வண்டுகளால் துளைக்கப்பட்டிருக்கவேண்டும். கூனி சூழ்ச்சியினை முறியடிக்க முடியாமல் தோற்று வனத் திற்குப் புகுந்தான். இவ்வளவு நடந்தும் உயிரே இனிதெனச்

சுமக்கின்ருனே, இந்த மானுடன் வலிமையை உன்னேத் தவிர வேறு யாராவது மதிப்பார்களா?' என்கிருர்.

இந்தச் சூழ்நிலேயில் விபிஷணன் மனம்மிக நொந்தவனுய் இராவணனுக்கு மீண்டும் அறிவுரை செய்கிருன். எப்படியாவது அண்ணனேக் காப்பாற்ற வேண்டும் என்பதே விபிஷணன் எண்ணம். இங்கு இராச்சிய ஆசை சிறிதும் இல்லே என்பதை நன்கு அறியலாம்.

விபிஷணன் அடிதொழுது பிரார்த்தித்தும் இராவணன் மனம் இளகவில்லே.

'நீ மகாவிஷ்ணு என்கிருயே, அந்தத் திருமாலே நான் போர்க்களத்தில் ஒன்றிலும் பார்த்ததில்லே. நான் இதுவரை என் இச்சைக்கு ஏற்றவாறு செய்து வந்தேன்; இத்தனேக் காலமும் மூச்சற்ற பிணம் போலக் கிடந்தாஞ அப் பள்ளி கொண்ட பெருமான்?'

"இச்சைக்கு ஏற்றன, யான்செய்த இத்தனேகாலம்
முச்சு அற்ருன்கொல், அம்முழு முதலோன்!''

என கோபிக்கிருன்.

'நீ என்னுடன் போருக்கு வரவேண்டாம். ஒளிந்து கொள்ள இந்த நகரில் எவ்வளவோ இடம் உள்ளது. அஞ்சாதே, அஞ்சாதே!' என்று கைகொட்டிச் சிரிக்கிருன்.

பின்னர் இரணியன் கதையைச் சொல்லி, அவனே திருமாலின் கோபத்திற்கு இரையாகிவிட்டான் என்று இராவணனே எச்சரிக்கின்ருன். விபிஷணனுக்கு இராச்சியம் ஆளவேண்டும் என்ற ஆசை துளியாவதுயிருந்தால் இவ்வாறு அறிவுரைகள் சொல்லித் திருத்தவேண்டும் என்ற எண்ணமே இருந்திருக்காது. இராமனேப்பற்றிக் கேள்விப்பட்டவுடனேயே அவனிடம் சரணடைந்திருக்கலாமல்லவா?

இரண்யனின் முடிவைச் சொல்லி பிரகலாதன் முடி சூட்டிக்கொள்கிருன் என்று கூறி இரண்யவதத்தினைப் பற்றிய கதை முடிக்கிருன்.

உடனே இராவணன், "அப்படியாஞல் நான் இராமனிடம் தோற்றபின், அறிவில்லாதவனே நீ பிரகலாதன் போல் முடிசூட்டிக் கொள்ளலாம் என்று நினைக்கிருயா" என்று கர்ஜிக்கிருன்.

"இனி என் விழிக்கு எதிர்ப்பட்டால் நீ ஒழிந்தாய்!" என்கிருன். இவ்வளவும் நடந்த பிறகு விபிஷணன் வான வீதியில் எழுந்து கடைசியாக எச்சரிக்கின்ருன்.

பின் இராமனிடம் சரணுகதி செய்ய வருகிருன். அங்குள்ளவர்கள் இவனைச் சந்தேகிக்கிருர்கள். அனுமன் மட்டும் மாறுபட்டுத் தன் கருத்தைப் பணிவுடன் வெளியிடுகிருன்.

அனுமன் ஊர்தேடும் படலத்திலேயே விபிஷணன் மாளிகையைப் பார்க்கிருன். அப்பொழுதே இவனைப்பற்றி நன்கு உணர்ந்து கொள்கிருன்.

"பளிக்கு வேதிகைப் பவளத்தின் கூடத்து, பசுந்தேன்
துளிக்கும் கற்பகப்பந்தரில், கருநிறத்தோரை
வெளித்து வைகுதல் அரிது" என, அவர் உருமேவி,
ஒளித்து வாழ்கின்ற தர்மம் அன்னுன்தனை உற்ருன்.

(ஊர்தேடுபடலம். 136)

விபிஷணன் மாளிகைத் தோற்றம் இவ்வாறு இருந்ததாம். தரும தேவதை தூய வெண்மை நிறமுள்ளவள் அல்லவா? அந்த நிறத்தோடு அரக்கர்களிடையே தங்க முடியாது என்று நினைத்து அவர்களைப்போல் "கரும் நிறம் மேவி ஒளித்து வாழ்வது போல் ஒருவன் படுத்திருக்கிருனே" என்று தனக்குள் சொல்லிக்கொண்டு, அவன் முகத்தை உற்றுப் பார்த்து அவன் உணர்வைத் தன் உணர்விஞல்

உணர்ந்து கொண்டான். குற்றம் இல்லாததோர் குணத்தினை உடையவன் இவன் எனக் கொள்ளுகிறான்.

"கொல்லுமின், இவனை" என்று அரக்கன் கூறிய
எல்லையில், தூதரை எறிதல் என்பது
புல்லிது; பழியொடும் புணரும்; போர்த்தொழில்
வெல்லலாம், பின்னர் என்று இடை விலக்கினான்.

அனுமன் தான் தூதுவனாகச் சென்றபொழுது 'கொல்லுங்கள்' இவனை என்று இராவணன் கட்டளையிட்டதும் விபிஷணன் உடனே, நில்லுங்கள் தூதுவனாக வந்தவரைக் கொல்லுதல் அற்பச் செயலாகும். மிகுந்த பழியைத் தேடிக் கொடுக்கும். போரில் பார்த்துக் கொள்ளலாம் என்று விலக்குகின்றான்.

தூதுவரைக் கொல்லுவது சரியன்று என்ற தர்மத்தினைக் கடைப்பிடிக்கும் இவனைத் தீயவன் என்று விலக்குதல் சரியன்று.

நிந்தனைநறவமும், நெறி இல் ஊன்களும்
தந்தன கண்டிலேன்; தரும தானமும்,
வந்தனை நீதியும், பிறவும் மாண்பு அமைந்தது,
அந்தணர் மனைஎனப் பொலிந்ததாம் அரோ

இவனுடைய இல்லத்தில் நிந்தனைக்குரிய கள்ளையும், நெறியில்லாத மாமிசத்தையும் காணவில்லை. அதற்கு மாறாகத் தான தருமங்களும், வந்தனை செய்யத் தக்க தருமமும், மற்ற உயர்ந்த செயல்களைக் குறிக்கும் சாதனங்களும்; மாட்சியுடன் அமைந்து அந்தணர் மனைக்குரிய அழகுடன் காட்சியளித்தது.

மேலும் இவனுடைய மகள் திரிசடை சீதாபிராட்டிக்கு ஆறுதல் கூறித் தேற்றியதையும், "உன்னைத் துஷ்ட புத்தியாளனான இராவணன் தீண்டினால் உடனே அவனுக்கு முடிவு நேரும் எனக்கூறிப் பிராட்டியின் துன்பத்தைக் குறைத்ததை

யும் கண்டேன்'' என்கிறான். இதையெல்லாம் எடுத்துக் கூறி விபிஷணன் தருமத்தினைக் கடைப்பிடித்து வாழ்ந்து வருபவன், என அவனுக்கு அபயம் அளிப்பதே முறை என்று பரிந்து பேசுகிறான்.

இராமனும் விபிஷணனைப் பற்றி அநுமன் வாயிலாக அறிந்ததும் அவனுக்கு அடைக்கலம் கொடுக்க இசைந்து அவன் சரணாகதியை ஏற்றுக்கொள்கிறான்.

இலங்கைக்கு அரசனாக இனி உனக்கு முடிசூட்டுவேன் என்று இராமன் கூறுகிறானே தவிர, விபிஷணன் அந்த ஆசையை உள்ளத்தினால் கொண்டிருக்கவில்லை. இறைவனை நம்பி சரணாகதி செய்வோர் பயன் ஒன்றையும் கனவிலும் கருதுவதில்லை. எனினும் இறைவன் சகல செல்வங்களையும் அருளி முக்தியும் கொடுக்கின்றான். இதுவே சரணாகதியின் தத்துவம்.

போர்க்களத்தில் இராமனுக்குக் கும்பகருணனை விபிஷணன் அறிமுகப் படுத்தும்போது இவன்,

''நன்று இது அன்று'' நமக்கு எனா,
ஒன்று நீதி உணர்த்தினான்;
இன்று காலன் முன் எய்தினான்,
என்று சொல்லி, இறைஞ்சினான்

(கும்ப-வதை. 126)

என்று கும்பகருணன் நல்மனத்தினை எடுத்துரைக்கிறான்.

உடனே இராமன் அப்படியானால் இவனைக் கொல்லு வதினால் ஒரு பயனும் இல்லை; கூடுமானால் இவனை நம்வசப் படுத்திக்கொள்ளுவோம் என விபிஷணனையே தூது அனுப்பு கின்றான்.

விபிஷணனைக் கண்ட கும்பகருணன் ''நீ ஒருவனாவது உய்ந்து போனாய் என்று நினைத்திருந்தேனே, நீ ஏன் மீண்டும் வந்தாய்''என்கிறான். எள்ளும் நீரும் இறைப்பதற்கு

நீ ஒருவனுவது மிஞ்சியிருப்பாய் என்ருல்லவா நினேத்திருந் தேன்; நீ இராமனிடம் திரும்பிப்போ என்கிருன்.

"இராமன் உன்னேக் கொல்ல விரும்பவில்லே. நீ அவனிடம் வந்தால்

எனக்கு அவன் தந்த செல்வத்து இலங்கையும்
அரசும் எல்லாம்
நினக்கு நான் தருவேன்; தந்து உன்ஏவலின் நெடிது
நிற்பேன்."

என்கிருன். இப்பாடல் விபிஷணனின் நல்ல மனத்தினே அழகாகக் கண்ணுடிபோலக் காட்டுகிறது.

இராமபிரான் எனக்கு முடிசூட்டப் போவதாக வாக் களித்துள்ள அந்தச்செல்வத்தையும், இராச்சியத்தையும் உனக்களித்துவிட்டு உன்னிடம் ஏவல் செய்துகொண்டிருப் பேன் என்கிருன்.

இப்படிச் சொல்லுபவன் இராச்சிய ஆசை உள்ளவனுக இருக்க முடியுமா? தருமத்தினேயே பற்றிக் கொண்டிருக்கும் இராமனிடந்தான் சரணுகதி அடைய முடியுமா?

போர்க்களத்திலே இந்திரஜித்து தன் தேசபக்தி குறித்து வெளியிட்டு, விபிஷணனேத் துரோகி என்று ஏசுகிருன். அதற்கு விபிஷணன், நான்

" அறம்துணே ஆவது அல்லால், அருநரகு அமைய நல்கும்
மறம்துணே ஆக, மாயாப் பழியொடும் வாழமாட்டேன்"

என்கிருன்.

தருமத்திற்குத் துணேயாகத்தான் நான் வாழ்வேனே தவிர, பாவத்திற்குத் துணேயாக வாழமாட்டேன். மெய்ம்மையைப் பற்றிக்கொண்டு பொய்ம்மையை என்று

துறந்தேனே அன்றே அவன் எனக்கு அரசனுமில்லை, அண்ண னுமில்லை என்கிறான்.

நான் கள் அருந்தியது இல்லை. பொய் சொன்னதில்லை. வலிமையால் ஒன்றும் அபகரித்துக் கொண்டதேயில்லை. மாய வஞ்சனைகள் புரிந்ததில்லை. யாராவது என்மேல் குற்றம் கண்டவர்கள் உண்டா? ஏதாவது இருந்தால் நீயே சொல்லு, பார்க்கலாம். காமவெறி கொண்டு திரிவோரைப் பிரிந்ததில் என்ன பிழையிருக்கிறது என்கிறான்.

தேவதேவனது கற்பில் சிறந்த தேவியை மனம் புண் படும்படி செய்வது பாவம் என்று உரைத்தேன். உன் தந்தை கோபம் கொண்டு என்னை வெருட்டிப் போகச் செய்தான். இன்று நரகத்திற்குப் பொருந்துவேனோ, அறத்தினை பாவம் வெல்லாது என்பது என் தேர்ந்த கொள்கை என்கிறான்.

இக்கூற்றை ஆழ்ந்து நோக்கின் விபிஷணனின் குற்ற மற்ற அவனது நன்னெறி நன்கு புலனாகும்.

விபிஷணச் சரணாகதி நிகரற்ற தனிச்சிறப்பு வாய்ந்தது. சரணாகதன் யார் என்று சிந்தித்துப் பார்க்கலாம். சரணாகதன் தான் உய்ந்து போவதுடன் தன்னைச் சார்ந்தவர்களையும் உய்வித்து, அவர்களைக்கொண்டு லோக உபகாரமான செயல் களைச் செய்விப்பவன்.

இவன் இந்த நினைவில்தான் இராவணனையும், கும்ப கருணனையும் சரணடையச் சொல்லுகிறான். இதற்கு எடுத்துக் காட்டுதான் இவன் மகள் திரிசடை. இவள் தன் தந்தையைப் போன்றே தரும சிந்தனைகள் மிக்கவளாய் காணப்படுகிறாள்.

திரிசடை சீதைக்குத் தன் கனவை வெளியிட்டு ‘அம்மா உனக்கு சோபனம்’ என்கிறாள்.

சீதாபிராட்டிக்கு உறக்கம் வராததால் கனவும் தோன்று வதில்லை. திரிசடை சோர்ந்து கண்களை மூடியபோது ஒரு

கனவு தோன்றியது, இரண்டு சிங்கங்கள் மதயானைகள் நிறைந்த காட்டினை வளைத்துக் கொண்டு பிணம் விழக் கொன்றன. இதன் விளைவாக ஒரு மயில் தப்பிப் போயிற்று என்கிருள்.

இப்படிச் சொல்லி அந்த மயிலைப் பற்றிய செய்தியை முடிக்காமலே தன் இல்லத்தைப்பற்றிய ஒரு செய்தியைச் சொல்லுகிருள்.

"ஆயிரம் திருவிளக்கு அமைய மாட்டிய
சேயொளி விளக்கம் ஒன்று ஏந்தி, செய்யவள்,
நாயகன் திருமனை நின்று, நண்ணுதல்
மேயினள் வீடணன் கோயில்; மென் சொலாய்!"

இராஜலட்சுமியானவள் ஆயிரம் கடை விளக்குகளோடு கூடிய ஒரு மகா தீபத்தை ஏந்திக்கொண்டு இராவணன் அரண்மனையிலிருந்து விபிஷணன் அரண்மனைக்குப் போவதாய்க் கண்டேன் என்கிருள்.

அப்படியவள் என் தந்தை மனைப்புகுந்த சமயத்தில் என்னை நீ எழுப்பிவிட்டாய்; கனவு முடியவில்லை. ஆகவே அந்த மயில் எங்கே போயிற்று, அதற்கு என்ன நேர்ந்தது என்பதை நான் அறிந்துகொள்ள முடியவில்லை என்கிருள்.

உடன் சீதை,

'அன்னையே! அதன் குறைகாண் என்று, ஆயிழை,
இன்னமும் துயில்க'

என, இரு கை கூப்பினுள்.

இந்தச் சமயத்தில் இராமதூதனுகிய அநுமன் அங்கு வந்து சேர்கிருன்.

இந்தக் கனவில் சொப்பனலோகத்தின் வசிகரத்துடன் நடக்கப்போகிற செய்திகள் அனைத்தும் கடுகைத் துளைத்து ஒரு கடலைப் புகட்டியது போல் குறிக்கப்படுகின்றன.

பந்தபாசங்களுக்கு அப்பாற்பட்ட விபிஷணனால் வளர்க்கப்பெற்ற அருமைப் பெண் தந்தையின் தரும சிந்தைகளுக்கு ஏற்றபடிதானே நடந்து கொள்வாள். இது விபிஷணனுடைய அறம் நிறைந்த தூய வாழ்க்கையினை இனிது எடுத்துக் காட்டும்.

ஆனால் விபிஷணன் தேசத்துரோகி என்று மனோன் மணீயம் ஆசிரியரான பேராசிரியர் சுந்தரம்பிள்ளை கருதுகிறாரே என்று சிலர் கேட்கக் கூடும். அவர் அப்படிச் சொல்லுகிறார் என்பது சரிதானா என்று பார்ப்போம்.

'பண்டு ராகவன் தன் பழம் பகைசெற்றுக்
கொண்டதோர் இலங்கை வீடணன் ஆண்டவாறு
இன்றுநீ வென்ற நாடு இனிது காத்திடுவேன்,

என்று நாடக பாத்திரமான குடிலன் கூறுகிறான்.

நாடகத்தில் வரும் குடிலன் பழிபாவத்திற்கு அஞ்சாத பாதகன். அவன் வாக்கல்லவா இது. அவன் தன் துஷ்ட புத்திக்கு ஏற்றவாறு விபிஷணனைத் தன் இலட்சியமாகக் கொள்ளுவதாய்ப் பெருமை யடித்துக் கொள்கிறான். இப் படியிருக்க ஆசிரியர் சுந்தரம்பிள்ளை அபிப்பிராயம் எனக் கொள்ளுதல் கூடாது.

இதைத்தவறாகப் புரிந்து கொண்டவர்களே வீண்வாதம் செய்கிறார்கள். எப்படிப் பார்த்தாலும் விபிஷணன் சரணாகதியில் தவறு துளியும் காண முடியாது.

விபிஷணன் சரணாகதி சரணாகதி தருமத்திற்கே ஒரு எடுத்துக்காட்டு.

குடிலன் எதிர் அரசனிடம் சேர்ந்ததும், பிறவிப்பிணிக்கு மருந்தான இராமனிடம் வீடணன் சேர்ந்ததும் ஒன்ருகுமா?

இனி வாதப் பிரதிவாதங்களுடன் ஆராய்ந்து வீடணன் செயல் துரோகமா, தியாகமா என்று காணலாம்.

1. வீடணன் அண்ணன் செய்த செயல்களை இடித்துரைத்தானு?

ஆம்; ஒருமுறையன்று; பலமுறை இடித்துக் கூறித் திருத்த முயன்றிருக்கிருன்.

''எத்துணை எத்துணை ஒத்தன ஒத்தன கூறினேன்'' என்கிருன்.

சமுதாயத்தில் அற வாழ்வு வாழ்பவர் எதிர் நீச்சல் தான் போடவேண்டும். ஒரு சிலர்தான் அதில் வெற்றி பெறுவர். பலர் சமுதாயச் சுழலிலே மாட்டிக்கொண்டு விடுவர். வீடணன் வாழ்வு அறத்துக்கும் மறத்துக்குமிடையே நடந்த போராட்டத்தில் அறத்தினைச் சார்கிறது. பாசத்துக்கும் கடமைக்கும் இடையே போராடி—பாசத்தினை வென்று கடமை செய்யும் திறம் வாய்ந்து விளங்குகிறது.

'எந்தைநீ; யாயும்நீ! எம்முன்நீ—
தவ வந்தனைப் பெருந் தெய்வம்நீ'

என்று இராவணனை எல்லாமாக மதித்தவன், அவன் இந்திரப் பெரும்பதம் இழக்கலாகாதே என்று தவிக்கிருன். கெஞ்சுகிருன்; அச்சுறுத்திப் பார்க்கிருன். அழுதும் தொழுதும் அறிவுரை கூறுகிருன். விரட்டி அடித்தபோதும் விண்ணில் நின்று பேசுகிருன். எத்தனை எத்தனை உறுதி—ஒத்தன ஒத்தன உணர்த்தினேன் என்று அவனே வாக்கு மூலம் தருகிருன். எல்லா நேரமும் வீடணன் வந்தான்; அண்ணனிடம் அறிவுரை கூறினுன் என்று காப்பிய ஆசிரியன் காட்டுவானு? மந்திராலோசனை சபையில்தான்

அமைச்சன் போலப் புத்தி சொல்ல முடியும். அங்கு எவ்வளவு விரிவாக, விளக்கமாகச் சான்றுகளோடு அஞ்சாது தூய நல்லறிஞனாக, அரசனை இடித்துரைக்கிறான்! அவனது மனத்துணிவும், அறநெஞ்சமும் அறிந்து மகிழவேண்டியது!

2. அண்ணன் 'போ' என்று அடித்து விரட்டினால் ஓடி விடுவதா? சந்தர்ப்பம் எப்போது வரும்; ஓடலாம்—என்று காத்திருந்த மாதிரி நடக்கலாமா? அண்ணனுக்குப் புத்தி சொல்லிப் பார்க்கிறான். 'ஒத்தன ஒத்தன உணர்த்தினேன் உணருகின்றிலை' என்று வருந்துகிறான். அண்ணனோ 'ஒழிகிலை புகலுதல்' "பேசுதலை நிறுத்தமாட்டாய்" என்று விரட்டி மிரட்டுகிறான். பின்னும் பேசினால், 'விழிஎதிர் நிற்றியேல் விளிதி' என்று சொல்லவும் துணிகிறான். இந்நிலையில் அங்கு நின்று என்ன பயன்? தானாக விட்டுவிட்டு ஓடினால்தான் தவறு—அடித்து விரட்டினால் ஓடியது தவறா? அதுவும் உயிருக்கு அஞ்சி ஓடவில்லை. அவன் கோழையல்லன் அறம் கருதியே அங்கு நின்றுபோனான். அப்போதும் அண்ணனுக்காக வருந்தி, தான் எதிர்த்துப் பேசியதற்கு மன்னிப்பு வேண்டித்தான் சென்றான்.

'அறந்தலை நின்றவர்க்கு அன்பு பூண்டனன்
மறந்தும் நன் புகழ் அலால் வாழ்வு வேண்டலன்
பிறந்த என் உறுதிநீ பிடிக்கலாய் எனத்
துறந்தனன்-'

(வீடணன் அடைக்கலம் -17)

இதுதான் உண்மை. தானாக முடிவு செய்யவில்லை. அங்கு இருக்க இயலாத நிலை வந்தபோதுதான் வெளியேறினான்.

3. விட்டு ஓடி வந்தவன் எதிரி இராமனிடம் வந்தது துரோகமல்லவா? கல்வி நூல் மந்திரக் கிழவரிடம் கேட்டான். அவர்கள் தருமமூர்த்தி பால் சேர்க்க என்றனர். 'புன்புலப் பிறவியின் பகைஞன்' என்றுணர்ந்து வந்தான். அனுமன்

வந்து சொன்ன செய்திகளே இராமன் பரம் பொருள் என ஞானமுள்ள வீடணனுக்குத் தெளிவாகக் காட்டிவிட்டன. மறத்தை விட்டு அறத்திடம் அறவோன் சேர்ந்தான். “இன்மை துரப்ப இசைதர வந்தேன்” என்றான் புறநானூற்றுப்புலவன். வறுமை என்னை விரட்டிற்று. உன் புகழ் ஈர்த்தது. அதுபோல மறம் விரட்டிற்று அறம் ஈர்த்தது. பாரதத்தில் விதுரன் நடுநிலைமை கருதி வில் ஒடித்துப் போட்டுத் தீர்த்த யாத்திரை சென்ற மாதிரி போயிருக்கலாமே என்று சிலர் கேட்கின்றனர். அவரவர் மன நிலைப்படிதான் அவரவர் நடக்க முடியும். விதுரன் மாதிரி வீடணன் நடப்பது எப்படி? விதுரன் காலமெல்லாம் உண்ட சோறு துரியயோதனுதியருடையது. வீடணனோ அரக்கர்உணவு உட்கொண்டதாக இல்லையே! தொடக்க முதல் நீதியும் தருமமும் அல்லவா அவனுக்கு நேயமுடையன. ஆதியங்கடவுளிடம் அவன் வேண்டிப் பெற்ற வரமல்லவா அது? வந்த இடத்திலும் அவனுக்குச் சோதனைகள் இருந்தன.

அண்ணனைத் துறந்தது நீதியா? போர் என்று வந்ததும் பிரியலாமா? அரக்கரைக் கொல்ல வந்த இராமன் அரக்கனை ஏற்கலாமா? நஞ்சினில் கொடியவனை நயக்கலாமா? என்றெல்லாம் வினுக்கணைகள் எழுந்து பாய்ந்தன.

அவன் வந்த காலம் நன்று. அரசினுக்கு மேலான ஒரு பொருளை அவன் நாடி வந்துள்ளான். (அரசின் மேற்று+ஏ) இவன் அறிவினுக்கு எல்லையில்லை ‘பெருத்துயர் தவத்தினுலும், பிழைப்பிலன்’ என்று வந்தால் என்ன? என்று கூறித் தடைக்கு விடை சொல்லி, அவனது அறவுணர்வை அனுமன் விளக்க, அதன்பின்தான் மற்றவர்கள் ஒரளவு மன அமைதி பெறுகின்றனர். இராமன் ‘எனக்கு இவனுடைய அன்பிலும் அறத்திலும் சந்தேகமில்லை. மாருதி சொன்னதே சரி. எனக்கும் இவனை ஏற்கக் கருத்துண்டு. சரண் என்று வந்தவன் யாராயினும் ஏற்பேன்’ என்று ஏற்றான். தேவருக்குக் கிடைத்த காட்சி வீடணனுக்குத் தெரிந்தது.

"நாற்கடல் உடுத்த பாரின் நாயகன் புதல்வன் நாமப்
பாற்கடல் சுற்ற விற்கை வடவறை பாங்கு நிற்ப
கார்க்கடல் கமலம் பூத்தது எனப் பொலிவானைக்
கண்டான்"

(வீட. அடைக். 134)

அறநிறம் கரிதோ—என வியக்கிருன் வீடணன். வந்த இடமும் நன்று. காலமும் நன்று. கருத்தும் நன்று. வந்தவனும் நல்லவனே!

4. இராமனிடம் வந்தவன் அரசச் செல்வம் தருகிறேன் என்றதும் மறுக்காது ஏற்ருனே ஏன்?

இராமனிடம் எனக்கு அண்ணனைக் கொன்று அரசு தா என்ருனு? இராமனுக அவனுக்கு அளவறு பெருமையுடைய இலங்கைச் செல்வம் தருகிறேன் என்ற போதும்கூட, விளைவினை அறியும் மேன்மை வீடணன் என்ன கூறுகிருன்?

"அளவறு பெருமைச் செல்வம் அளித்தனை ஆயின் ஐய!
இளையவற்கவித்த மோலி என்னையும் கவித்தி" என்ருன்.

(வீட. அடைக். 142)

ஏன்? களவியல் அரக்கரின் பின்னே வந்த அக் கடன்மை தீரத்தான்.

கள்ள அரக்கன் தம்பி என்று பழிபடப்பிறந்த இழிநிலை மாற உன் பாதமே கதி.

('அவன் கால் பட்டழிந்தது இங்கு என் தலைமேல் அயன் கையெழுத்தே!' என்ற அருணகிரி வாக்கு நினைவு கொள்ளத் தக்கது.)

தம்பி பரதாழ்வானுக்குப் பாலித்த பாதுகையை எனக்கும் தா என்ற இவனு அரசு கேட்டவன்! அடிசூடும் அரசை வேண்டிய அடியவன் இவன்.

5. சரி, எல்லாம் கிடக்க, இராவணன் முதலானவர் பலம் பற்றியும், அவர் ஒவ்வொருவரை அழிக்கும் உபாயம்

பற்றியும் வீடணன் இராமனுக்குச் சொன்னது துரோக மில்லையா?

எது துரோகம்? எவன் அண்ணனில்லை என்று ‘இலங்கை வேந்தன் பிழைத்தனன் என்றபோதே பிறந்திலேன் அவன் பின்’ என உதறிவந்தானே அதற்குப்பின் அவன் யாரா யினும், அதர்மத்தை அழிக்க உதவ வேண்டியதுதான் கடமை. வீடணன் இராவணனைக் கொல்ல உபாயம் சொல்லாவிட் டால் இராமனுக்குத் தெரியாதா? அது அவதார நாடகம்! உடலிடைத் தோன்றிய கெட்ட ரத்தக் கட்டியை அறுத் தெறிவது அறிவுடைமை. அதுபோலத் தீயவன், உடன்பிறந்த வனாயினும் அவனைக் கொல்ல உதவுதல் நடுவுநிலைமை. ஏற்றுக் கொள்ளப்பட்ட அண்ணன் தம்பி இராமனும் வீடண னும். சுவிகாரம் போன ஒரு பிள்ளை தன்னைப் பெற்றவருக்கு எதுவும் செய்ய உரிமையில்லை. சுவீகாரம் செய்துகொண்ட வனுக்குத்தான் அவன் எல்லாம் செய்ய வேண்டும். அது போல் இராமனால் தம்பியாக சுவீகரிக்கப்பட்ட வீடணன் அவனுக்குத்தான் உதவ வேண்டும். அதுதான் முறை. இராவணனின் தீமையே அவனை அழித்ததேதவிர வீடணன் உளவு சொன்னதால் மட்டுமா அழிந்தான்?

6. எல்லாவற்றிற்கும் மேலாக இவன் தான் பிரிந்தது போதாதென்று கும்பகர்ணனையும் இழுக்க வருவது மிக்க மோசமல்லவா? தேசத் துரோகம் அல்லவா?

பாசம் குறைந்தவனல்லன் வீடணன். அண்ணனின் நன்மைக்காக இயன்றவரை உறுதி சொன்னவன். இயலாத நிலையில் விரட்டியடிக்கப்பட்டு இராமனின் தம்பியாக ஆனான். ‘எம்முனார் எனக்குச் செய்த பேறு’ என்பது உண்மையான மனநிலையில் பேசிய பேச்சு. அடித்து விரட்டியதால் நன்மை செய்தவன் இராவணன். இல்லை எனில் பரம் பொருளின் பாதாரவிந்தம் கிடைக்குமா? துரோகிக்கு ‘ஆழ்வார்’ பட்டம் கிடைக்குமா? இறையருள் கிட்டுமா? அறத்து வழி நிற்பவனுக்கு அனைத்துயிரும் துணைசெய்யும். அறத்துக்கு

மாருக மறம் செய்பவனுக்கு உடன்பிறந்தவனே பகையா வான் என்பது இராமாயண தத்துவம். மறம் செய்த தசமு கனைத் தம்பி வீடணன் பிரிந்தான். கும்பகர்ணனும் அறிவுள்ள வன். நீதி சொன்னவன். வரமும் தவமும் உடையவன் என்று வீடணன் சொல்லக் கேட்ட இராகவன், 'அவனை வீணுகக் கொல்ல வேண்டாம். சேருமேல் இங்கே சேர்த்துக் கொள்ள லாமே' என்ருன்.

(சிலர் அரசியல் மொழியில், இராமன் தன் கட்சிக்கு ஆள் சேர்க்கிருனு என்பர். அது அறிவுடைய வார்த்தையன்று. கடவுள் தன் மக்கள் வழி விலகிப் போகாமல் பாதுகாப்பதில் கவனமாயிருக்கிருன். நல்ல மேய்ப்பன். ஆயன், என்பதன் சாரமே அதுதான்.)

வீடணன் தானே சென்று அழைத்து வருவதாகக் கூறி வருகிருன். இந்த அற்புதமான காட்சி வான்மீகத்தில் இல்லை.

கம்பன் வேண்டுமென்றே காப்பிய உத்தியாக இதை அமைத்துள்ளான். வீடணன் கும்பகருணன் இருவரின் குணுதி சயம், பாத்திரப்படைப்பு, தர்மநியாயம் இவற்றை நமக் குணர்த்தக் கம்பன் செய்த அழகான மாற்றம் இது! இருவரை யும் சந்திக்க வைத்துக் கும்பகருணன் வாயிலாகவே வீடணன் செயல் பெருமைக்குரியது என்று காட்டிவிட்டான் கவிச் சக்கரவர்த்தி. இவனைத் துரோகி என்று அன்புச் சகோதரன் கும்பகருணன் நினைத்தால்

"உய்ந்தனை ஒருவ போனுய் என்றுவக்கின்றேன்
சிந்தனை முழுதும் சிந்தத் தெளிவிலார் போல மீள
வந்தது ஏன்?"

(கும்ப. வதை. 130)

என்றும்

'அமுதுண்பாய் நஞ்சுண்பாயோ?' என்றும்

'இராமனைப் பற்றி நின்று பிறப்பு எனும் புன்மை விட்டாய்' என்றும் பேசுவானா? 'துரோகி! ஏனடா அங்குப் போனாய்' என்றல்லவா கேட்பான்-

'இராமன் வீடுபேறு தருவான்' என்று அழைக்கிறான் விடணன். "தீயவை செய்வாராகில் தாய், தந்தை, உற்றார் என்று பார்க்கலாமா? உடலில் கெட்ட ரத்தக் கட்டிவந்தால் அதை வைத்து அழகு பார்ப்பது புத்திசாலித்தனமா? அதை அறுத்துக் குருதியைக் கொட்டி வேறொரு இடத்தில் பிறந்த மருந்தை வைத்துக் கட்டியல்லவா நலம் பெறவேண்டும்! உடன்பிறந்த இராவணன் தீயவன். அவன் மீதுள்ள பாசத்தை விட்டுதறிப் பிறவிப் பிணிமருந்தான இராமனை அடைந்து நலம் பெறலாம்" என்றழைக்கிறான் வீடணன். கும்பகருணனின் பதில் மிகச் சிறப்புடையது. தான் வராமைக்குச் செஞ்சோற்றுக்கடன் காரணம் என்றான் கும்பகருணன். (விரிவான விளக்கத்தைப் பாடல்களுடன் 'கும்பகருணன் பாத்திரம்-முரண்மயமா?' என்ற கட்டுரையில் காணலாம்.)

ஆனால் தருமத்திடம் பற்றுக் கொண்ட வீடணன் இராமனும் தரும மூர்த்தியிடம்தான் இருக்க வேண்டும் என்கிறான். மலரின் மேலிருந்த வள்ளல் வரத்தினால் உலைவிலாத் தருமம் பூண்டவனும் வீடணன். "உனக்கு அது (இராமனிடம் சரணாகதியானது) தக்கது நீ உலகுக்கெல்லாம் தலைவன். ஆனால் நானோ அறம் தெரிந்தும் கடைப்பிடிக்க இயலாத நிலையில் நன்றியுணர்வு என்னைத் தடுக்கிறது. இது அற்பமான சாவு. "புலையுறு மரணம்தான் எனினும் எனக்கு இதுவே புகழ் தரும். தருமமும் கருமமும் இதுவே." இந்த வாக்கில் எவ்வளவு பெரிய உண்மைகளை மிக எளிதாகச் சொல்லிவிட்டான் கம்பனின் கும்பகருணன். உலகம் வீணாக ஏன் வீடணனைக் குற்றம்சாட்டி முட்டிக் கொள்ளவேண்டும்? அவனுக்கு முன்னவன், இராவணனிடம் பேரன்புகொண்டவன் அவனே சொல்லிவிட்டானே! "நீ செய்தது சரி" என்று தன் நிலையை அழகுறக் காட்டுகிறான் அம்மாவீரன்! "பொருதொழிற்குரியராகி ஒருத்தரின் முன்னம் சாதல் உண்ட

வர்க்கு உரியதம்மா!" ஊன் உணவுண்டு கள் குடித்த நான் சோற்றுக்காக தின்ற உப்புக்காகப் போரிடத்தான்வேண்டும். நான் சண்டைக்காக வளர்க்கப்பட்டவன். எனக்கு அண்ணனே போர்க்கோலம் செய்து அனுப்பினான். ஆனால் நீ அவ்வாறு செய்ய அவசியமில்லை என்பது உட்கருத்து. இராவணன் கும்பகருணனை 'அறிவுடை அமைச்சன் நீயலை; உறுவது தெரிய உன்னை நான் அழைக்கவில்லை. மறங்கிளர் செருவனுக்கு உரிமை மாண்டனை, என்றெல்லாம் ஏசிப் பேசும் பேச்சுக்கள் வீடணனை தம்பியாயினும், அவனை அறிவுடை மந்திரச் சுற்றத்தில் ஒருவனாகக் கருதினான்; குப்பகர்ணனோ போர்வீரனாக (சண்டைக் கடாவாக-Warrior) ஆகவே வளர்க்கப்பட்டவன் என்பது புலனாகின்றது. போருக்காக வளர்க்கப்பட்ட ஒருவன் போரிட்டு உயிர் துறந்தால் அது புகழ்தான்! அறவோன் மறத்தைவிட்டு நீங்கி அறத்தின் வெற்றிக்குத் துணை நிற்பது அவனுக்குத் தக்கது. இருவரின் நிலை, பாத்திர அமைப்பு, மனோபாவம் இவை வேறு வேறு. இதைத் தெளிவுபடக் காட்டுவதற்காகவே கம்பன் என்கிற மேதை இருவரையும் போர்க்களத்தில் சந்திக்கவிட்டுத் தன் அற்புதமான அறிவு விளக்கம் தருகிறான்! எண்ணி எண்ணி மகிழத் தக்க, பொருள் பொதிந்த பாடல்கள். இவற்றை ஓதுவார் உணர்வர் உண்மை!

# 7. கும்பகர்ணன்—முரண்மயமா?

ஆரண்ய காண்டத்தில் சூர்ப்பணகை (முறம் போன்ற காதுகளையுடையவள்) தன் அங்க பங்கத்தைக் குறித்துப் பிரலாபிக்கும்போது அரக்கர் ஒருவரும் அப்போது துணைக்கு வராததால் 'நீங்கள் எல்லோரும் உறங்கிப் போய் விட்டீர்களோ கும்பகருணனைப் போல்?'—எனக் கதறுகிறுள். அடி வயிறு கொதிக்க ஓலமிடும் அரக்கி ஆங்காரத்துடன் கூக்குரலிடுகிறுள்.

"கல் ஈரும் படைத்தடக்கை, அடல், கர தூடணர் முதலா
அல் ஈரும் சுடர் மணிப்பூண், அரக்கர் குலத்து அவதரித்தீர்!
கொல் ஈரும் படைக் கும்பகருணனைப் போல், குவயைத்துள்
எல்லீரும் உறங்குதிரோ? யான் அழைத்தல் கேளீரோ?"

(சூர்ப்பணகைப் படலம். 113)

இப்போதுதான் நாம் முதன் முதலில் கும்பகருணனைப் பற்றிக் கேள்விப்படுகிறோம்.

இலங்கையில் அநுமன் பிராட்டியைத் தேடி வரும் பொழுது அந்த நடுநிசியிலே கும்பகருணனைப் பார்க்கிறுன். இவனுடைய மூச்சுக் காற்று அனுமனையும் இழுத்து "நாசியின் அளவையின் நடத்தக் கண்டவன்! கூசினன்; குறித்தனன், விதிர்த்த கையினன்."

இந்நிலையில் தாமஸ குணமுள்ள கும்பகருணனை "உன்ன அருந் தீவினை உருக் கொண்டென்னவே," என்கிறுன். நினைத்துப் பார்க்கவும் முடியாத தீவினையின் உருவம் போலும் இது என்று அநுமன் தனக்குத்தானே சொல்லிக் கொள்கிறுன்.

கும்பகருணனின் ஒருதலையே முதல் பார்வையில் பத்துத் தலைகளாகத் தோன்றி அநுமனைச் சற்று மயக்கி விடுகிறது. அப்போதுதான் அறிஞனான அநுமன் சினங் கொண்டு கும்பகருணனைப் பழித்துரைக்கிறான். குறுகி நோக்கிய போதுதான் இவன் பத்துத்தலை இராவணன் அல்லன் என்பது தெளிவாகிறது.

கும்பகருணனைக் கண்ட சீற்றம் உறங்கிக் கொண் டிருக்கும் வீடணனைக் கண்டதும்தான் ஆறுதல் அடை கிறது.

முதல் நாட்போரில் இராவணன் தோல்வியுற்று மீண்ட தும் மூலப்படைகளைத் திரட்டி வரும்படி தூதுவரை ஏவு கிறான். மாலியவான் நல்ல புத்திகள் சொல்லிக் கொண் டிருக்கும்போதே மகோதரன் குறுக்கிடுகிறான்.

இவனை ''மாயைகள் புரிவதில் வல்லவன்'' என்று கம்பன் குறிப்பிடுகிறான். தளர்ந்த சிந்தையோடு இருந்த இராவணனுக்குத் தகாத முறையில் உறுதி மொழிகள் சொல்லுகிறான். ''சீதா தேவியை விட்டுவிட்டால் அவர்கள் போய் விடுவார்கள், அதுவோ உன்னால் முடியாத காரியம். இனிக் கொஞ்சம் தாமதம் செய்தாயானால் குரங்குகள் எல்லாம் கனியுள்ள மரங்கள் மீது பாய்வது போல் நம்மீது வந்து பாய்ந்துவிடும்'' என்று எச்சரிக்கை செய்கிறான். திடீரென்று, ''நாம் இப்படியெல்லாம் தளர் வோடு பேசிக்கொண்டிருப்பது உன் தம்பி கும்பகருணனை இகழ்வது போல் ஆகிவிடும்'' என்கிறான்.

> 'ஓங்கலே போல்வான் மேனி காணவே ஒளிப்பர் அன்றே;
> தாங்குவர் செருமுன் என்னின்; தாபதர் உயிரைத்தானே
> வாங்கும்'

என்று இனைய சொன்னான்;

கும்பகருணனுடைய மலைபோல் மேனியைக் கண்டதுமே எதிரிகள் ஓடி ஒளிந்து கொள்வார்கள். அப்படி

யின்றிப் போர்க்களத்தில் இவனை எதிர்த்து விடுவார்களானால் அந்தத் தவசிகள் போன்ற இராமலெட்சுமணர்கள் உயிரை இவன் வாங்கிவிடுவான் என்றதும் இராவணன் மிக மகிழ்ந்து, உடன் கும்பகருணனை எழுப்புமாறு ஏவலர்களை ஏவுகிறான்.

கிங்கரர் நால்வர் சென்று கும்பகருணனை தலை, செவி முதலான உறுப்புகளில் அடித்து எழுப்ப முயலுகிறார்கள். அவனுக்கோ உறக்கம் மேலும் அதிகரிக்கிறது.

கடினமான உழைப்பை மேற்கொள்ளுபவர்கள் அது தெரியாமல் இருக்க ஏதாவது பாடுவார்கள். இது வழக்கம். அப்படியிருந்ததாம் கும்பகருணனை எழுப்ப இவர்கள் பாடிய பாடல்.

'உறங்குகின்ற கும்பகன்ன! உங்கள் மாய வாழ்வு எலாம்
இறங்குகின்றது! இன்றுகாண்; எழுந்திராய்! எழுந்திராய்!
கறங்குபோல வில்பிடித்த காலதூதர் கையிலே,
உறங்குவாய், உறங்குவாய்! இனிக்கிடந்து உறங்குவாய்!'

(கும்ப. வதை—45)

பின்னர் எவ்வளவோ முயன்று கும்பகருணனை எழுப்பி விடுகிறார்கள். எழுந்ததும் பசியோ பசி! பேருறக்கமும், பெரும் பசியும் கொண்ட தாமத குணம் படைத்தவனல்லவா?

'ஆறுநூறு சகடத்து அடிசிலும்,
நூறுநூறு குடம்களும் நுங்கினன்;
ஏறுகின்ற பசியை எழுப்பினன்
சீறுகின்ற முகத்து இரு செங்கணன்.'

(கும்ப. வதை—60)

இந்தப் பாடல் கும்பகருணனை நமக்கு பிரத்யட்சமாக்கிவிடுகிறது அறுநூறு வண்டிகளில் வந்திருக்கிறது உணவு. குடித்த கள்ளுக்கோ கணக்கில்லையாதலால் நூறு

நூறு குடங்களாக உள்ளே தள்ளி விடுகிறுனும். 'நுங்கினுன்' என்ருல் நுங்கு சாப்பிடுவது போல் அவ்வளவு சுவையோடு உட்கொண்டான் என்பது பொருள். இவ்வளவும் "Appetiser" [பசியை எழுப்பிவிடும் டானிக்] போல ஆகிறது. இறுதி அடியான சீறுகின்ற முகத்து செங்கணுன் என்பதை ஊன்றி நோக்கினுல் கும்பகருணன் சிவந்த கண் களோடும், சீறுகின்ற தோற்றத்தோடும் நம் கண் முன் வந்து விடுகிருன் அல்லவா.

பிறகு கும்பகருணன் இராவணனிடம் போய் வணங்கு வதை இவ்வாறு வருணிக்கிறது;

"நிலைகிடந்த நெடு மதிள் கோபுரத்து
அலை கிடந்த இலங்கையின் அண்ணலைக்
கொலை கிடந்த வேல் கும்பகருணன், ஓர்
மலை கிடந்ததுபோல வணங்கினுன்."

(கும்ப. வதை—71)

இராவணன் ஒரு நெடு மதிள் கோபுரத்தில் அமர்ந்திருக் கிருன். கும்பகருணனைக் கண்டதுமே இராவணனுக்குப் பயம் நீங்கி விடுகிறது. அதற்கு முன் இந்த அரண் முதலானவை நமக்கு நிலைத்திருக்குமா என்று கவலைப்பட்டு இருந்தவன், இப்போது இவையெல்லாம் நிலைத்துப் போயின என்றே நினைக்கிருன். கும்பகருணன் வேலும் தோளுமாக காட்சியளிக்கிருன். அந்த வேல் எத்தனை கொலைகளைச் செய்திருக்கின்றன, இன்னும் எத்தனையோ கொலைகள் புரியும் ஆற்றல் வாய்ந்தவை என்பது பாட்டின் திரண்ட பொருள்.

இப்பாட்டில் இராவணனது குணுதிசயமும்—பேராசை யும் குறிக்கப்பட்டிருப்பதையும் காண்கிருேம். தனக்கு அரணுக இராவணன் அமைத்துக்கொண்ட மதில்களும் கோபுரமும் கடலைத் தூர்த்து அமைத்துக் கொண்டவை என்பது உற்று நோக்கின் இனிது புலனுகும்.

இராவணன் தன் கையாலேயே கும்பகருணனை அலங்கரித்து ஆயுத பாணியாக்குகிருன். இவ்வளவு ஆயத்தம் எதற்காக என பணிவோடு கேட்டதும். இராவணன்,

'வானரப் பெருந்தானையர், மானிடர்,
கோ நகர்ப்புறம் சுற்றினர்; கொற்றமும்
ஏனை உற்றனர்; நீ அவர் இன் உயிர்
போனகத் தொழில் முற்றுதி, போய் என்ருன்.'
(கும்ப. வதை—78)

உன்னுடைய போஜனம் முற்றுப் பெறவில்லை. அல்லவா? அதற்கு இலக்காக மானிடரும் குரங்களும் வந்து பராக்கிரமம் காட்டுகிருர்கள். அவர்களைப் புசித்து நீயும் உன் போஜனத் தொழிலை முடித்துக் கொள்வாய் என்கிருன்.

அதற்கு கும்பகருணன் பெரு வியப்புற்று,
''ஆனதோ வெஞ்சமர்? அலகில் கற்புடைச்
சானகி துயர் இனம் தவிர்ந்தது இல்லையோ?
வானமும் வையமும் வளர்ந்த வான்புகழ்
போனதோ? புகுந்ததோ, பொன்றும் காலமே?''
(கும்ப. வதை—79)

கொடிய போர் வந்து விட்டதா? கற்புமிக்க சீதா பிராட்டியின் துயரம் இன்னும் தீரவில்லையோ? வானகமும் வையகமும் வளர்ந்த நம் பெரும் புகழ் போய்விட்டதோ? அழிவு காலம் வந்துவிட்டதோ? என்று பதறியது போல் பேசுகிருன்.

இப்பாடலின் கருத்துகள் 'கும்பகருணனின் உலகத்தை மறந்த தூக்கத்தினையும்' அவனது தரும சிந்தையையும் நன்கு புலப்படுத்துகின்றன.

கண்ணுல் பார்த்தே கொல்லும் விஷம் (திட்டிவிடம்) போன்றவள் நமக்கெல்லாம் சீதா பிராட்டி. அவளை நீ இன்னும் விடவில்லையோ? இது நம் விதிதான் என்கிருன்,

"புலத்தியன் வழிமுதல் வந்தபொய் அறு
குலத்து இயல்பு அழிந்தது; கொற்றம் முற்றுமோ?
வலத்து இயல் அழிவதற்கு ஏது; மைஅறு
நிலத்து இயல் நீர் இயல் என்னும் நீரதால்"

(கும்ப. வதை—82)

புலத்தியன் (மூல புருஷன், பிரும்மாவின் வழி வந்தவன்) வழி வந்த அந்தச் சீலமும் கோலமும் அழிந்தன. வஞ்சமும், பாவமும், பொய்யும் வெல்ல முடியுமா? இல்லை தருமத்திற்குத்தான் ஒரு குறை ஏற்படுமா? என்றெல்லாம் நல்ல புத்தி சொல்கிறான்.

"தையலை விட்டு அவன் சரணம் தாழ்ந்து, நின்
மையறு தம்பியோடு அளவளாவுதல்
உய்திறம்; அன்று எனின், உளது, வேறும் ஓர்
செய் திறம்; அன்னது தெரியக் கேட்டியால்."

(கு. வதை. ௪௪)

சீதாபிராட்டியை விட்டு விட்டு இராமன் அடிகளில் விழுந்து ஒரு குற்றமுமில்லாத விபிஷணனோடு அளவளாவி மகிழ்வதே நீ பிழைக்கும் வழி. அப்படியில்லா விட்டால் நாம் ஒருசேரத் திரண்டு போருக்குப் போவோம். பகுதி பகுதியாக அரக்கர்களைப் பலிகொடுப்பது சரியன்று என்கிறான் கும்பகருணன்.

இந்தச் சந்தர்ப்பத்தில் இவன் இராவணன் மந்திராலாலோசனையில் கலந்துகொண்டு என்ன சொன்னான் என்பதையும் கவனிக்கவேண்டும்.

பேசுவது மானம், இடை பேணுவது காமம்,
கூசுவது மானிடரே' நன்று நம் கொற்றம்!

என்கிறான். அப்போதுதான் தன் உறக்கத்திலிருந்து இயற்கையாக விழித்தெழுந்தான்.

விபிஷணனின் புத்திமதியைக் கேட்டவாறு உறங்கப் போய்விட்டான். அந்தப் புத்திமதி உறக்கத்தில் பக்குவமாகி பயனளிக்கலாயிற்று என்பது மனோதத்துவ மர்மங்களில் ஒன்று.

கும்பகருணனுடைய புத்திமதிகளைக் கேட்ட இராவணன் அவனை நோக்கி, "உன்னைக் கூப்பிட்டது உன் ஆலோசனையைக் கேட்பதற்கு அன்று. ஆலோசனைக்குரிய மந்திரிமார்கள் எனக்குண்டு. நீ அந்த அறிவுடைய அமைச்சர்களில் ஒருவன் இல்லை. உன் வீரம் வெறும் பேச்சுத்தான் என்றே தோன்றுகிறது.

போருக்குக்கூட நீ உரியவனில்லை. மாமிசமும் கள்ளும் ஏராளமாகப் பெற்று உன் வயிற்றை நிரப்பிக் கொண்டாய். 'இரவும் பகலுமாய் இனித் தூங்கப் போய் விடு' என அதட்டும் குரலில் இராவணன் சொல்லுகிறான். கும்பகருணன் மனம் புண் படுகிறது.

பின்னர் கும்பகருணனை நோக்கி,

'மானிடர் இருவரை வணங்கி, மற்றும் அக்
கூனுடைக் குரங்கையும் கும்பிட்டு, உய்தொழில்
ஊனுடை உம்பிக்கும் உனக்குமே கடன்;
யான் அது புரிகிலேன்; எழுக போக!' என்றான்.

(கு. வதை-92)

"மனிதர் இருவரையும் வணங்குவதோடு, மரக்கிளைகளில் கூனிக் குறுகிக் கொலுவிருக்கும் குரங்கையும் கும்பிட்டு வாழ்க்கை நடத்துவது உனக்கும் உன் தம்பிக்கும் தான் ஏற்ற தொழிலாகும். என்றால் அப்படிச் செய்யமுடியாது. நீ போய் விடு" என்கிறான்.

இப்படி இராவணன் சொன்னவுடன், கும்பகருணன் அண்ணன் பாதங்களில் வணங்கி, 'நீ பொறுத்துக்கொள்' எனச் சொல்லிவிட்டு சூலத்தை எடுத்துக்கொண்டு புறப்பட யத்தனிக்கிறான். இராவணனை நோக்கி இன்னும் ஒரு

வார்த்தை சொல்லவேண்டும் என, "வென்று இங்கே மீண்டும் வருவேன் என்று வாக்களிக்க முடியாது, விதி யானது பிடர் பிடித்துத் தள்ளிக்கொண்டு போகிறது என்னே. நான் போர்க்களத்தில் இறந்து விடுவேன். அதன் பின்னு வது சீதையை விட்டுவிடு. அதுவே உனக்கு நன்மை" என் கிருன்.

'வென்று இவண் வருவென் என்று உரைக்கிலேன்! விதி
நின்றது; பிடர் பிடித்து உந்த நின்றது;
பொன்றுவன்; பொன்றினுல், பொலன்கொள் தோளியை,
"நன்று" என, நாயக விடுதி; நன்று அரோ'

என்னே ஜெயித்து விட்டார்களானுல் இராவணனே, அவர்கள் உன்னே வெல்வது சத்தியம். ஆதலால் நீ வெற்றி பெறுவாய் என்று நினேப்பது வீண் கனவு. எனவே அந்தச் சீதையை நன்கு ஒப்படைப்பது உனக்குத் தவம் போலாகும்.

நான் இதுவரை குற்றம் புரிந்திருந்தால் என்னே நீ பொறுத்துக் கொள்ளுதல் வேண்டும் என போர்க் களத்துக்குப் புறப்படுகின்ருன் கும்பகருணன்.

முதன் முதலாகக் கும்பகருணனே இராமன் இப்போது தான் பார்க்கிருன். 'மலேக்குக் கால்கள் முளேத்த மாதிரி வருகிருனே, இவன் யார்?' என்று விபீஷணனேக் கேட்கிருன். உடனே விபீஷணன்,

'பேர் இயல் இலங்கை வேந்தன் பின்னவன்; எனக்கு முன்னேன்;
கார் இயல் காலன் அன்ன கழல் கும்பகருணன் என்னும்
கூரிய சூலத்தான் இவன்"

என்று அறிமுகம் செய்கிருன்.

பள்ளிகொண்ட பெருமாள் விழித்துக் கொண்டதும் அசுரர்கள் மாண்டு போவர் என்பது பிரசித்தம். இவன்

விழித்துக் கொண்டதும் தேவர்கள் துன்பப் படுவார்கள். இவன் தன் ஊழிநாளும் உறங்குவான். அதனால்தான் உலகம் பிழைத்திருக்கிறது.

ஊன் உயர்ந்த உரத்தினன்,
மேல் நிமிர்ந்த மிடுக்கினன்;
தான் உயர்ந்த தவத்தினன்;
வான் உயர்ந்த வரத்தினன்; (கு. வதை. 120)

இவனுடைய ஊன் உடம்பின் ஒவ்வொரு அணுவும் பேராற்றல் வாய்ந்தது. இதற்கு மேலே போகிறது இவனுடைய கம்பீரம். தான் எவ்வளவு உயரமோ அவ்வளவு தவத்திலும் உயர்ந்தவன். வானளாவிய வர பலமும் உள்ளவன்.

''தருமம் அன்று இதுதான்; இதால்
வரும், நமக்கு உயிர் மாய்வு'' என,
உருமின் வெய்யவனுக்கு உரை
இருமை மேலும் இயம்பினன். (கு. வதை. 124)

இவன் இராவணனை நோக்கி உன் செய்கை தருமம் அன்று, அதனால் நமக்கு உயிர் போய்விடும் என்றெல்லாம் இம்மைக்கும் மறுமைக்கும் சாதகமான புத்திமதிகளைச் சொல்லிப் பார்த்தான். தமையன் மறுத்துவிடவே, அவனைக் கண்டித்துத் தொடர்ந்து புத்திமதிகளை வழங்கினன்.

பின்னர் வெறுத்துப் போய்ச் சாவது நிச்சயம் என வந்து உன் எதிரே நிற்கின்றன்.

''நன்று இது அன்று நமக்கு'' என,
ஒன்று நீதி உணர்த்தினன்;
இன்று காலன் முன் எய்தினன்,
என்று சொல்லி, இறைஞ்சினன். (கு. வதை. 126)

இப்படி அழுத்தமாய் விபிஷணன் சொன்னதும் உடனே சுக்கிரீவன் சொல்லுகிறுன்,

இரவிசேய், 'இவனை இன்று
கொன்று ஒரு பயனும் இல்லை; கூடுமேல, கூட்டிக்கொண்டு
நின்றது புரிதும்! மற்று இந்நிருதர் கோன் இடரும் நீங்கும்;
''நன்று'' என நினைந்தேன் என்றுன்;

(கு. வதை. 127)

விபிஷணனை நிருதர்கோன் என்று குறிப்பிடுவது மிகுந்த சிந்தனைக்குரியது. இதனை இராமபிரானும் ஒப்புக் கொண்டான்.

பிறகு, இராமபிரான் இந்தக் காரியத்திற்கு யாரை அனுப்பலாம் என்றதும், விபிஷணன், தானே சென்று அவனைத் தெளிவடையச் செய்து காரண காரியரீதியாக அவன் உள்ளத்தைத் தெளிவித்து, கூடுமானுல் கூட்டிக் கொண்டு வருவேன் என்கிறுன்.

வானரப் படையைக் கடந்து இராட்சஸப் படையை அணுகியதும் விபிஷணன் வந்து விட்டான் என்று குதூகலப் படுகிறுர்கள் அரக்கர்கள். இராமனை விட்டுவிட்டு விபிஷணன் இராவணனுக்கு உதவி செய்ய மீண்டு வந்து விட்டான் என்பது அவர்கள் எண்ணம்.

கும்பகருணனும், விபிஷணன் இராமனைப் பிரிந்து தங்கள் கட்சிக்கு வந்துவிட்டதாகவே ஊகம் செய்கிறுன். அதன் விளைவாக, தன்னை வந்து வணங்கிய விபிஷணனை இறுகத்தழுவிக் கொண்டு, "நீ ஒருவனுவது தப்பிப், பிழைத்துப் போய் விட்டாய் என்று உவப்புடன் இருக் கின்றேன். அப்படியிருக்க என் சிந்தனை முழுதும் சிதறிப் போகும் வண்ணம் அறிவுத் தெளிவு இலாதவர் போல் நீ மீண்டு வந்த காரணம் என்னவோ'' என்று கேட்கிறுன்.

தொடர்ந்து மேலும் கேட்கிறுன்:— நீ அபயம் பெற்றதுபோல் தேவர்களும் பெற்றதில்லை. இம்மைக்கும்

மறுமைக்கும் உற்ற பாக்கியம் உனக்குக் கிடைத்திருக்கிறது. உன்னுடைய அறிவு கவிஞர்களின் (உள்ளொளி மிகுந்த) அறிவினைப் போன்றது. நீ வந்தது பெருங்குற்றம். ஏன் இவ்வாறு செய்தாய்? அமுது விரும்பும் நீ நஞ்சைச் சாப்பிடுவாயோ?

அரக்கர் குலத்து இயல்பு அழிந்தது என்றாலும் இந்த புலத்தியன் மரபு இறவாத புண்ணியத்தைப் பெற்றிருக்கிறது உன் சரணாகதியால் என்று தோள் பூரித்து மகிழ்ந்திருந்தேன். இலங்கேஸ்வரனே! நீ திரும்பி வந்ததால் என் உள்ளம் உலைந்து போயிற்று.

இராமனும், தம்பியும் அறத்திற்குப் பெருந் துணைவர்கள். அவர்கள், அபயம் என்று அடைந்த உன்னைத் தங்கள் உயிர் துறந்த போதிலும்கூடத் துறக்கமாட்டார்கள். இராமன் அருளால் இராட்சஸப் பிறப்பின் புன்மை உனக்கு இல்லை. நீ என்ன நினைத்துத் திரும்பிவிட்டாய்?

சாட்சாத் தருமம் என்று சொல்லும் வண்ணம் நின்ற நம்பிக்கு அடிமையாகி அவனருளால் பாவகுணங்களை அறவே மாற்றிக் கொண்டு தீமையே இல்லாத செல்வம் பெற்றுள்ள சீமான் நீ.

"பிறர் மனை நோக்குவேமை
உறவு எனப் பெறுதி போலாம்?"

இராவணன் பிறர்மனை நோக்கும் குற்றம் செய்பவன் எனினும் அவனுக்கு ஆதரவாக இருப்பதால் தாங்களும் அந்தப் பாவத்திற்குப் பொறுப்பாய் நிற்பதாய் சொல்லுகிறான். (எவ்வளவு பெரிய உள்ளம் இந்தப் பெரிய உடம்புக்குள் இருந்து பேசுகிறது பாருங்கள்)

நீதியும் தருமமும் புலமையும் ஆதியங் கடவுளிடம் அருந்தவம் இயற்றிப் பெற்றாய். இராமபிரான் வாக்கினால் சாவே இல்லாத "சிரஞ்சீவி விபிஷணன்" எனப் புகழப் பெறுகின்றாய்! இப்படிப்பட்ட உன்னையும் இராட்சஸ ஜாதியின் குணம் இன்னும் விடவில்லையா?

ஏற்றிய வில்லோன், யார்க்கும் இறையவன், இராமன்
நின்ருன்;
மாற்ற அருந்தம்பி நின்ருன்; மற்றையோர் முற்றும் நின்ருர்;
கூற்றமும் நின்றது, எம்மைக் கொல்லிய; விதியும் நின்ற;
தோற்ற எம் பக்கல், ஐய! வெவ்வலி தொலைய வந்தாய்.

(கு.வதை—136)

இந்தப் பொருள் பொதிந்த பாடலை நன்கு பல முறை கற்றுத் தெளிந்தால் இதன் உட்பொருள் இனிது புலனுகும்.

யாவர்க்கும் இறைவனுன இராமபிரான் வில்லை நாணேற்றியவண்ணம் நிற்கின்ருன். அவனுடன் தம்பியும் நிற்கின்ருன். மற்றவர்களான சுக்கிரீவன் முதலானேர் களும் பக்க பலமாய் நின்றுகொண்டு இருக்கிருர்கள். கூற்று வனும் நிற்கின்ருன். எம்மைக் கொல்ல வந்த விதியும் நிற்கின்றது. நாங்கள் இப்பொழுதே தோற்றவர்களாய் விட்டோம். இத்தகைய வலிமையெல்லாம் தொலைந்து போகும்படியாக நீ வரலாமா?

ஐயா! நீ, இராமபிரானுக்கு அடைக்கலமாகி உய்ந்து போகவில்லையென்ருல் இந்த அரக்கர் கூட்டம் எல்லாம் மாய்ந்து போகுமே! இவர்களுக்கு எள்ளும் தண்ணீரும் இறைப்பதற்கு ஆள் வேண்டுமே.

இப்பிழைபடு கூட்டம் எல்லாம் மாண்ட பிறகுதானே நீ வருகை தரவேண்டும், அப்பால் இராமனருளால் அருஞ் செல்வம் எல்லாம் விரைவில் அனுபவிக்கப் போகிருய்! இப்படியெல்லாம் கும்பகருணன் சொல்லவும், விபிஷணன், "நான் வந்தது ஒரு காரியத்தை முன்னிட்டுத்தான்" என்கிருன். அப்படியானுல் அதைச் சொல்லு என்கிருன்.

இருண்ட சிந்தையோடு கூடிய அடியேனுக்கு அருள் புரிந்த வீரன், நீயும் எங்களோடு சேர்ந்து கொண்டாய் என்ருல் உனக்கும் அருள் புரிவான், அபயம் அளித்து முக்தியும் தருவான்.

எனக்கு அவன் தந்திருக்கும் அரசுரிமைச் செல்வம் எல்லாம் நான் உனக்குத் தருவேன்; தந்து உன் ஏவலில் நிற்பேன். இதைக் காட்டிலும் உனக்கு உறுதி பயப்பன இல்லை. உன் மன நோயைத் துடைத்து மரபையும் விளங்கச் செய்ய வேணும்" என்று பிரார்த்தித்துக் கொள்ளுகிறான்.

வீடணன் மேலும் பேசுகிறான்;

"தப்பிப்போவது இயலாத காரியம். போனால் வேறு புகலிடம் கிடையாது. சாவு நிச்சயம். நீ நீதி தருமத்தைத் தழுவி நிற்கின்றாய் ஆதலால் அநியாயத்தை உதறித் தள்ளி விட்டு நம்முடைய வேதநூல் மரபுக்கு இசைந்தவாறு ஒழுக்கத்தை மேற்கொள்ளவேண்டும். தீமை செய்பவரைத் தாய், தந்தை, குரு என்றெல்லாம் பாராது துறந்து விடுவதே தருமமாகும் இவையெல்லாம் உனக்குத் தெரிந்த விஷயங்கள். தூய செயல்களை மேற்கொண்டால் பழித் தொடர்வது உண்டோ?

> உடலிடைத் தோன்றிற்று ஒன்றை அறுத்து, அதன் உதிரம் ஊற்றி,
> சுடல் உறச் சுட்டு, வேறு ஓர் மருந்தினால், துயரம் தீர்வர்,
> கடலிடைக் கோட்டம் தேய்த்துக் கழிவது கருமம் அன்றால்;
> மடலுடை அலங்கல் மார்ப! மதி உடையவர்க்கு மன்னோ!

சத்தியாகிரகத் தருமம் எப்படிப்பட்டது என்றால் சொல்லுகிறேன்.

உடம்பிலே கட்டி ஏற்பட்டிருக்கிறது என்றால் அதனை அழகு பார்த்துப் போற்றுவார் உண்டோ? அதனை அறுத்து எடுத்து, அதனுடைய கெட்ட இரத்தத்தினை அப்புறப் படுத்தி, அந்த இடத்தினைத் தீயினால் சுட்டு, வேறு மருந்து வைத்துக் கட்டமாட்டோமா? அதுபோல இராவணனைத் தமையன் என்று பாராமல் தள்ளிவிடுவதுதானே முறையாகும்" என்கிறான்.

உன்னுடைய தமையனை (தான் இராவணன் தம்பியல்ல; இராமன் தம்பி என்பது)க் காப்பாற்றலாம் என்பது கைகூடாத காரியம். புதிதாக அறத்தை மாற்றிக் கொள்ளலாம் என்றால் அது சாத்தியமா என்ன?

"காக்கலாம் நும்முன்தன்னை எனின் அது கண்டது இல்லை;
ஆக்கலாம் அறத்தை வேறே என்னினும், ஆவது இல்லை,"
(கு. வதை. 147)

என்கிறான். உன் வாழ்வில் முக்கியமான பகுதியையெல்லாம் நீ தூங்கித் தொலைத்து விட்டாய் அண்ணா! இனி அறம் கெட உயிரை விட்டு என்னதான் சாதிக்கப் போகிறாய்?

"மூவர்க்கும் தலைவர் ஆன மூர்த்தியார்; அறத்தை முற்றும்
காவற்கு புகுந்து நின்றார், காகுத்த வேடம் காட்டி!"
(கு. வதை. 150)

என அவதார இரகசியத்தை வெளியிடுகிறான்.

அறம் என்பது உணவுக்கு ஆதாரமாக அமைந்த வளமான வயல் போன்றது. அதில் ஒரு கதிரைக்கூட மாடுகள் விழுந்து மேய்ந்துவிட முடியாது. அவ்வளவு ஜாக்கிரதையாக இருக்கிறானும் அதன் காவல்காரன். அந்தக் காவலாளிதான் இராமபிரான் என்கிறான். (இம் மாபெரும் கருத்தை வெளியிடும் வாசகம் எத்தகைய பேரழகு வாய்ந்தது என்று பாருங்கள்.]

உன் மக்கள் ஆகி உள்ளார், உன்னொடும் ஒருங்கு தோன்றும்
என் மக்கள் ஆகி உள்ளார், இக்குடிக்கு இறுதி சூழ்ந்தான்
தன் மக்கள் ஆகி உள்ளார், தலையொடும் திரிவர் அன்றே
புன் மக்கள் தருமம் பூணப் புலமக்கள் தருமம் பூண்டால்?
(கு. வதை. 151

உன் பிள்ளைகள் இருக்கிறார்கள். என் மக்கள் இருக்கிறார்கள். இராட்சஸ குலத்துக்கே நாசம் விளைக்கத்

தோன்றிய இராவணனுடைய (இந்திரஜித் தவிர) வேறு மக்களும் நிரபராதிகளாக நிற்கிறார்கள். அவர்களெல்லாம் தலையோடு திரியும்படி நீ தயவு செய்ய வேணும். நீ புன் மக்கள் தருமத்தை' விட்டு அறிவுள்ள மக்கள், அறம் என்று உரைப்பதைப் பற்றிக் கொண்டால் இப்போதுள்ள நிலைமை அதிசயமாக மாறிவிடலாம் என்கிறான்.

முனிவரும் கருணை வைப்பர். மூன்று உலகத்திலும் உனக்குப் பகைவரே இருக்க மாட்டார்கள். சாவு உண்டே என்று வருத்தப் படவேண்டாம். நமக்குப் பகைவர்களா யிருக்கிற தேவர்களே துணைவர் ஆக மாறிவிடுவர். பழத் திற்குக் காத்திராமல் அதைப் பூவாய் இருக்கும்போதே கொய்துவிடலாமா?

வேத நாயகனாகிய இராமபிரானே உன்மீது கருணை கொண்டு என்னை அனுப்பியிருக்கிறான். என்மேல் உனக்கு அன்பாவது, இரக்கமாவது இருந்தால் நீ செய்ய வேண்டிய காரியம் நான் சொல்லுவதுதான். ஆதலால் அவனைக் காண் பதற்கு என்னுடன் நீ வரவேண்டும் என்று விபிஷணன் கும்பகருணனின் இரண்டு அடிகளிலும் விழுந்து வணங்கி வேண்டிக்கொள்கிறான்.

இவ்வாறு காலில் விழுந்த விபிஷணனைத் தூக்கி மார் புறத் தழுவிக்கொண்டு கண்ணீர் சொரிய நிற்கிறான். பிறகு பேசுகிறான்.

நீர்க்கோல வாழ்வை நச்சி, நெடிது நாள் வளர்த்துப் பின்னைப்
போர்க்கோலம் செய்து விட்டாற்கு உயிர் கொடாது, அங்கு போகேன்;
தார்க்கோல மேனி மைந்த; என் துயர் தவிர்த்தி ஆகின்,
கார்க்கோல மேனி யானைக் கூடுதி, கடிதின் ஏகி

(கு. வதை. 155)

வாழ்க்கையானது நீரில் கோலம் போடுவது போல் தான். இத்தகைய வாழ்வில் என்னை நீண்டகாலமாக பேணிக் காப்பாற்றி வந்தவன் நம் தமையன் இராவணன் தான். மேலும் எனக்குத் தன் கையால் போர்க்கோலமும் செய்து அனுப்பியிருக்கிறவனுக்கு உயிர் கொடாமல் இராம னிடம் வரமுடியுமா? என் துயரத்தை நீடிக்க விடாமல் தவிர்ப்பாய் என்றால் நீ செய்ய வேண்டியது விரைவில் இராமனிடம் போகவேண்டியதுதான்.

பிரும்மதேவனது குற்றமற்ற வரத்தினால் நீ அழியாத தருமத்தினை மேற்கொண்டாய். உலகம் உள்ள வரையிலும் நீயும் உடன் வாழ்வாய். நீ உலகத்திற்கெல்லாம் தலைவன், உனக்குத் தக்கதுதான் நீ சொல்வது. நீசத்தன்மை வாய்ந்த எனக்கோ மரணந்தான் புகழ் தருவதாகும்.

கருத்து இலாமல், முன்பின் விளைவுகளை எண்ணிப் பாராமல், அரசன் தீமை கருதினால், முடியுமானால் திருத்த லாம், அது கூட வில்லையென்றால் அவனுக்குமுன் சாவது தானே செஞ்சோற்றுக்கடன் கழிப்பதாகும்.

இராமபாணத்தால் அடிபட்டுத் தலைவன் உயிர் துறந்து கிடக்கும் போது, சேனைகளும், சுற்றத்தார்களும், தம்பி மார்களும் இல்லாமல் தனியே கிடக்கலாமோ?

செம்பு இட்டுச் செய்த இஞ்சித் திருநகர்ச் செல்வம் தேறி,
வம்பு இட்ட தெரியல் எம்முன் உயிர் கொண்ட பகையை வாழ்த்தி,
அம்பு இட்டுத் துன்னம் கொண்ட புண்ணுடை நெஞ்சோடு, ஐய!
கும்பிட்டு வாழ்கிலேன் யான்—கூற்றையும் ஆடல் கண்டேன்!
(கு. வதை. 160)

அரண்களோடு கூடிய நகரத்தின் செல்வத்தைப் பொரு ளாக நினைத்து, என் தமையனுடைய உயிரை வாங்கிய பகைவனை வாழ்த்திய வண்ணம் கும்பிட்டு வாழும் ஆற்றல்

எனக்கில்லையப்பா! கூற்றுவனும் என்னைக் கண்டு நடுங்கி ஆட்டம் போடுவதுதான் எனக்குத் தெரியும்.

எனக்குத் தெரியாததெல்லாம் கும்பிட்டு வாழ்வதுதான். அதைத்தானே நீ சரணாகதி யென்கிறாய்!

போரில் காயம் ஏற்படுவது இயல்பு. அந்தப் புண்ணை விழுப்புண் என்பர். (ஒரு வீரத்தமிழன் ஒருவன் தொண்ணூற்று ஆறு புண்களைப் பெற்றிருந்தானும். அது கூட ஆச்சரியமில்லை; அவன் அதைப் போற்றினானும்) அம்பினால் ஏற்பட்ட புண்களை ஆற்றித் தையல் போட்டுக்கொள்வது பழங்கால வைத்திய முறை. அப்படித் தையல் போட்டுக் கொண்டாலும் புண்பட்ட நெஞ்சு இருக்கிறதே, அதைக் குணப்படுத்துவது எப்படி? எனவே கும்பிட்டு வாழ்தல் என்பது எனக்குத் தெரியாது.

இத்தகைய பேச்சினிடையே கும்பகருணனுக்கு வீரவெறி ஏறிக்கொண்டே போகிறது.

வீர தர்ம உணர்ச்சி வேறு, வீரவெறி வேறு. வீரவெறியானாலும் கள் வெறி போலத்தான். இத்தகைய வெறியாட்டத்தால் வீண் சேதமே தவிர வேறு ஒரு பயனும் இல்லை.

இங்கே நாம் கும்பகர்ணனுடைய குணாதிசயத்தில் ஒரு முக்கியமான திருப்பத்தினைக் காண்கிறோம். இராவணனிடம் இவன் சொன்னது வீரதருமத்தை அடிப்படையாகக் கொண்டதுதான். ஆனால் இப்போது விபிஷணனிடம் சொல்லுவது அதற்கு நேர்மாறானது.

தான் போரில் எல்லோரையும் அழித்து விடுவதாகக் கூறுகிறான். அது வீர வஞ்சினம்!

அனுமனை, வாலிசேயை, அருக்கன் சேய்தன்னை, அம்பொன
தனு உடையவரை, வேறு ஓர் நீலனை, சாம்பன் தன்னை,
கனிதொடர் குரங்கின் சேனைக் கடலையும், கடந்து, மூடும்
பனி துடைத்து உலகம் சுற்றும் பரிதியின் திரிவென்:

பார்த்தி!

அங்கே சொன்னது ஒன்று. இங்கே கூறுவது அதற்கு முரண்பாடு. முரட்டுத்தனமாகப் பேசுகிறான். இவன் எதிரிகள் பலத்தைச் சரியாக உணர்ந்து கொள்ளவில்லை எனலாமா? அன்று. நீதி சொல்ல வந்த இடம் வேறு போரிட வந்துள்ள இடத்தில் முழு வீரனாக. எதிரி யாரா யினும் வெல்வேன் என்று வீரவுரை பேசிப் போரிட வருவது தான் அழகு.

கும்பகருணன் இராவணனுக்கு அறத்தின் தன்மையை எடுத்துரைக்கிறான். சீதா பிராட்டியைக் கவர்ந்தது தவறு என்கிறான். போருக்குப் புறப்படும்வரை இராவணனைத் திருத்துவதற்காக எவ்வளவோ புத்திமதி சொல்லிப் பார்த்தான். இத்தகைய குணாதிசயத்தை உடைய கும்பகருணனைப் பற்றி இராமனுக்கு விபிஷணன் பிரஸ்தாபித்தான். இது கேட்ட சுக்கிரீவன் இவன் நல்லவன்; இவனை அழித்தல் கூடாது. அபயம் கொடுப்பதே நன்று என இராமனுக்குக் கூறினான்.

இராமனும் இசைந்து கும்பகருணனை அழைத்துவர விபிஷணனை அனுப்பி வைத்தான்.

ஆனால் கும்பகருணனோ தான் போருக்கு வந்திருப்பது நியாயத்திற்குப் புறம்பானது என்பதை உணர்ந்த போதிலும், இராவணனுக்குச் செஞ்சோற்றுக் கடன் கழிக்கும் பொருட்டுப் போரிடவே தீர்மானிக்கிறான். இந்த எண்ணமே அவனது அழிவுக்குக் காரணமாகிறது. இராவண னுக்கு உதவி செய்யவேண்டும் என்ற தவறான எண்ணத் தினாலே மிருகத்தனமாகப் பேசுகிறான்.

பாற்கடல் கடையும்போது ஆலகால விஷத்தைக் கண்டு தேவர்கள் ஓட்டம் பிடித்தது போல் சத்துருக்கள் என்னைக் கண்டு ஓடிப்போவார்கள்; என்னுடைய வருகை எதிரிகளுக்கு, கடல் பொங்கி வருவது போலவும், நெருப்பும் காற்றும் கூடி வருவது போலவும் தோற்றமளிக்கும்;

ஊழிக்காலம் முடிந்துவிட்டது என ஓட நான் பம்பரம் போல் போர்க்களத்தில் திரிவேன்; நீயும் காண்பாய்.

இராம லட்சுமணர்கள் தவிர மற்றவர்கள் போர்க் களத்தில் பயப்படாமல் என் கண்ணெதிரே வந்து நிற்கத் துணிவாரேயானுல் அவர்களையெல்லாம் உயிர் சுமந்து உலகில் திரிய விடமாட்டேன். யாவரும் தொழும்படி தன்மை வாய்ந்தவனே, இங்கே தாமதம் செய்யாதே. என் சொல் கடைபிடிக்கத்தக்கது என்று நினைப்பாயானுல் உடனே சென்று அவர்களை அடைவாய். திரும்பத் திரும்பச் சொல்லுவதால் எனக்கு மனம் மாற்றம் ஏற்படும் என்று கற்பனை செய்யாதே என்று சொல்கிருன்.

இப்படியெல்லாம் சொன்ன போதிலும் கும்பகருண னுக்கு விபிஷணனைப் பிரிய மனமில்லை.

> "என்று, அவன்தன்னை மீட்டும் எடுத்து, மார்பு இறுகப் புல்லி,
> நின்று நின்று, இரங்கி ஏங்கி, நிறைகணுல் நெடிது நோக்கி,
> 'இன்றெடும் தவிர்ந்தது அன்றே, உடன்பிறப்பு' என்று
> விட்டான்."

அவனை எடுத்து. மார்புறத் தழுவிக் கொள்கிருனும். 'நின்று நின்று' என்கிருன் கம்பன். இதனுடைய பொருள் யாதெனில் விபிஷணனைத் தழுவிக்கொண்ட கும்பகருணன் அப்படியே நிற்கின்றுன் பாச உணர்வினுல். விட்டுப் பிரிவதற்கே மனம் இல்லை. இரங்குகிருன், ஏங்குகிருன். பாச உணர்ச்சிக்கு முடிவு இல்லாமல் அவனை அப்படியே பார்க்கிருன். கடைசியாக "இன்றேடு முடிந்தது. உடன் பிறப்பு" என்று கைகளை நெகிழவிடுகிருன்.

விபிஷணன் அவன் அடிகளில் வீழ்ந்து வணங்கினுன். இன்ன செய்வெதென்று அறியாது செயலற்று நிற்கின்ருன். உயிரும் உடம்பும் சோர்ந்து நிற்கின்ருன். தமது உரையாடல் இனி ஒரு பயனும் தரப்போவதில்லை என உணர்ந்து திரும்பி வருகிருன். குணங்களால் உயர்ந்த

விபிஷணன் வந்த காரியம் நிறைவேருமல் தோல்வியுற்றுப் திரும்புவதைக் கண்ட அரக்கர் சேனை தங்களை மறந்து கை குவித்து வணக்கம் செலுத்துகிறது.

எங்கள் கள்ள வாழ்க்கையைக் தம்பி கைவிட்டுப் போகிருன் என்று, ஒரே பிள்ளையை உடையவன் அப் பிள்ளையை இழந்தது போலவும், பைத்தியம் பிடித்தவன் போன்ற நிலையையும் அடைகிருன் கும்பகர்ணன். இரத்தக் கண்ணீர் வடிக்கிருன்.

'கள்ளநீர் வாழ்க்கையேமைக் கைவிட்டு, காலும் விட்டான்;
பிள்ளைமை துறந்தான்' என்ருப் பேதுறும் நிலையன் ஆகி,
வெள்ளநீர் வேலைதன்னில் வீழ்ந்த நீர் வீழ, வெங்கண்
உள்ளநீர் எல்லாம் மாறி, உதிரநீர் ஒழுக, நின்ருன்!

விபிஷணன் இராமனிடம் திரும்பி வந்து செய்தி சொல்கிருன். தப்பிப் பிழைத்து உயிர் வாழ வேண்டும் என்று நினைப்பவனுக்கு அல்லவா அறிநெறி ஒழுக்கம் புலனுகும். என்ருல் இயன்றவரை சொல்லிப் பார்த்தேன். அவன் அசைந்து கொடுக்கவில்லை. குலத்தின் மானம்—தன் மானத் தனி வீரம் என்பதைச் சிறிதும் விட்டுக் கொடுக்க வில்லை.

கொய்திறச் சடையின் கற்றைக் கொந்தளக் கோலக்
கொண்டல்
நொய்தினில் துளக்கி, 'ஐய!' "நுன் எதிர், நும்முனேனை
எய்து இறத் துணித்து வீழ்த்தல் இனிது அன்று" என்று
இனைய சொன்னேன்;
செய்திறன் இனிவேறு உண்டோ? விதியை யார்
தீர்க்ககிற்பார்?'

இராமன் விபிஷணனிடம் ஐயா உன் கண்ணெதிரே' உன் தமையனைக் கொல்லுவது சரியென்று அவனுக்கு

நல்லது கூறி அபயம் அளிப்போம் என்றேன். ஆனால் அவன் கேட்கவில்லை இனி செய்யக்கூடியது வேறு என்ன இருக்கிறது. விதியை யாரால் வெல்ல முடியும் என்கிறான்.

இவ்வாறு சொல்லிக் கொண்டிருக்கும்போது அரக்கர் சேனை வானர சேனையைச் சூழ்ந்து கொள்கிறது. சண்டை மும்முரமாக நடக்கிறது. நீலன், அங்கதன் முதலானோர் தோற்றுப் போகின்றனர். அனுமன்கூட, 'இவனை, இராமன் ஒருவனால்தான் கொல்ல முடியும்,' என்று விலகிப் போகிறான். குரக்குச் சேனையில் பாதி அழிந்துவிட்டது.

இலக்குவன் வந்து எதிர்க்கிறான். இருவரும் வீர வசனம் பேசுகிறார்கள். வீரவசனம் என்பது படை வீரர்களை உற்சாகப்படுத்துவதற்காக தங்கள் கட்சியில் நியாயம் இருக்கிறது என்றும் எதிர்க் கட்சியில் அநியாயம்தான் காணப்படுகிறது என்றும் சொல்லப்படும் பேச்சு.

பெய்தவத்தினர் பெண்கொடி, எம்முடன் பிறந்தாள்,
செய்த குற்றம் ஒன்று இல்லவள், நாசி வெஞ்சினத்தால்
கொய்த கொற்றவ! மற்று அவள் கூந்தல் தொட்டு ஈர்த்த
கைதலத்திடைக் கிடத்துவென்; தாக்குதி என்கிறான்.

(கு. வதை. 235)

நாங்கள் மூன்று சகோதரர்கள். எங்களுக்கு ஒரே சகோதரி. தண்ணீர் பெய்து பூங்கொடியை வளர்ப்பது போல் இந்தப் பெண் கொடியை நாங்கள் வளர்த்தோம். அவளுடைய மூக்கைக் கோபத்தினால் கொய்துவிட்ட வீர பராக்கிரமசாலியே! அதற்காக உன்னைத் தண்டிக்கவில்லை. ஆனால் கற்புடைய அவள் கூந்தலைத் தொட்டு இழுத்தாயே, அதற்காக இந்தக் கையைச் செம்புழுதியில் புரளச் செய்வேன்; முடியுமானால் அந்தக் கை தோளொடு பொருந்தியிருக்கும்படி காப்பாற்றிக் கொள் என்கிறான்.

அல்லினல் செய்த நிறத்தவன் அனையது பகர,
மல்லினல் செய்த புயத்தவன், 'மாற்றங்கள் நும்பால்
வில்லினல் சொல்லின் அல்லது, வெந்திறல் வெள்கச்
சொல்லினல் சொலக் கற்றிலம், யாம், எனச் சொன்னன்.

(கு. வதை. 236)

இருட்டே உருவெடுத்தது போல் நின்று கொண்டிருக்கும் கும்பகருணன் அப்படிச் சொன்னதும், மற்போர் செய்து மலர்ந்த மார்பினை உடைய இலட்சுமணன் சொல்கிருன்; வீணன வார்த்தைகள் பரிமாற நான் தயாராக இல்லை, நீ உம்மைப் போன்றவர்களோடு பேசுகிருயே அந்த வீரதருமம் அது வெட்கமடையும்படி சொல்லில் வாதம் செய்ய நாங்கள் படித்ததில்லை, இனி உன்னேடு பேசுவது எல்லாம் வில்லினல்தான், என்கிருன்.

பின்னர் இலக்குவன் சோர்வடைய சுக்கிரீவன் வந்து போரிடுகிருன். அவன் தாக்குப் பிடிக்க முடியாமல் மூர்ச்சித்துப் போகவே கும்பகருணன் சுக்கிரீவனைத் தூக்கிக் கொண்டு தனது நகர் திரும்ப எத்தனிக்கிருன்.

இந்தச் சமயத்தில்தான் இராமன் போரிட வருகிருன்.

கும்பகருணன் வானர சேனையை முறியடிக்க தக்கவழி சுக்கிரீவனைக் கொண்டு போவதுதான் என்று மயங்கிய அவனைத் தூக்கிச் செல்லுகிருன். தருமத்தைப் பேசி வந்தவன் அதர்மத்தைச் செய்கிருன். போர்க்களத்தில் ஆயுதமில்லாமல் மயங்கியவனைக் கவர்ந்து செல்லுகிருன்.

ஆயுதம் இழந்த இராவணனை இராமபிரான் "வெறுங்கை நின்ருன்" என்று "போர்க்கு நாளை வா" என்கிருனல்லவா? ஆனல் இதே இராவணன்; போரில் சோர்ந்து மயக்கமுற்ற இலக்குவனைக் கவர்ந்து செல்ல முயலுகிருன். அதுபோலவே இங்கும் சுக்கிரிவனைக் கவர்ந்து செல்ல முயலுகிருன் கும்பகருணன். தாங்கள் இருவரும்

உடன் பிறப்பு (அதர்மத்தின் உடன் பிறப்பு) என்பதை உலகத்துக்கு அழகாக உணர்த்துகிருர்கள்.

பகைவரிடமும் அன்பு காட்டும் இராமபிரான் இந் நிலையில் கும்பகருணனைக் கொல்வதைத் தவிர வேறு வழி யில்லை என்பதை உணர்கிருன்.

இராமபிரான் கும்பகருணனின் மீது அம்பு எய்யவே அவன் மூர்ச்சையடைகிருன். இரத்தம் பெருக்கெடுத்து ஓடுகிறது. இரத்த வெள்ளம் சுக்கிரீவன்மீது பாய அவன் மூர்ச்சை தெளிகிருன்.

பின்னர் மயக்கமுற்றுக் கிடக்கும் கும்பகர்ணனின் மூக்கையும், செவியையும் கடித்துத் தம்மவரைக் கூடினன்.

மூர்ச்சை தெளிந்த கும்பகருணன் தனக்கு நேர்ந்த அவமானத்தை உணருகிருன். கோபம் மேலிட்டுப் பயங் கரப் போர் புரிகிருன்.

இந்த நிலையில்கூட இராமபிரான் கும்பகருணனுக்கு திருந்துவதற்கு ஒரு வாய்ப்பு அளிக்கிருன்.

ஏதியோடு எதிர் பெருந்துணை இழந்தனை
எதிர் ஒரு தனி நின்ருய்;
நீதியோனுடன் பிறந்தனை ஆதலின்,
நின் உயிர் நினக்கு ஈவென்;
போதியோ? பின்றை வருதியோ? அன்று எனின்,
போர் புரிந்து இப்போதே
சாதியோ? உனக்கு உறுவது சொல்லுதி,
சமைவுறத் தெரிந்து, அம்மா!

(கு.வதை. 323)

என்று அவனை திருந்துமாறு எச்சரிக்கிருன். ஆனல் இவனே 'உங்கள் தோள் தலை வாள் கொடு துணித்து' உயிர் குடிப் பேன் என்கிருன். (கொடு—கொண்டு) மறுபடியும் போரிடு

கிருன். அவன் கைகளும் கால்களும் அறுபடுகின்றன. இறுதியில் கும்பகருணன் "இராமனுடைய வில்லின் ஆற்றலுக்கு ஆயிரம் இராவணர்களும் ஈடாகார்" என்பதைக் கண்டு கொள்கிருன்.

அந்தோ! கையும் காலும் இழந்துவிட்டேன். இனி என்ன உதவி செய்ய முடியும் இராவணனுக்கு? என்கிருன். மையல் நோயால் முடியப்போகிற அண்ணனுக்கு நான் இனி ஒன்றும் செய்வதற்கில்லையே என்று வருந்துகிருன்.

போர்க்களத்தில் இரத்த ஆறுகள் ஓடுகின்றன. அவை யானை, குதிரை, தேர் முதலியவற்றை இழுத்துக்கொண்டு போகின்றன. இப்படிப் போர் நிகழ்த்திய கும்பகருணன் முன் இராமன் வருகிருன். போரில் பயன்பட்ட ஆயுதங்கள் இப்போது இராமனுக்கு அணிகலன்கள் போல் அழகு செய்கின்றன. இத்தகைய சௌந்தர்ய மூர்த்தியின் முகம் நோக்கிச் சொல்லுகிருன்.

"சிபி சக்கரவர்த்தியின் பரம்பரையில் தோன்றியவனே; நீ எனது கடைசி வேண்டுகோளைக் கேட்டருள வேண்டும்" என்ற பீடிகையுடன், இராவணனுக்காகப் போர் செய்த கும்பகருணன் விபிஷணனுக்காகப் பரிந்து ஒரு வேண்டுகோள் செய்து கொள்கிருன்.

"நீதியால் வந்தது ஒரு நெடுந் தரும நெறி அல்லால்,
சாதியால் வந்த சிறுநெறி அறியான், என்தம்பி;
ஆதியாய்! உனை அடைந்தான்; அரசர் உருக்கொண்டு
அமைந்த
வேதியா! இன்னம் உனக்கு அடைக்கலம் யான்
வேண்டினேன்.
(கு. வதை. 354)

விபிஷணன் நீதி தருமமாகிய நெடுந் தர்மத்தை நன்கு உணர்ந்தவன். அந்த நெறி இல்லாமல் சாதிச் சிறுநெறியைப்

உடன் பிறப்பு (அதர்மத்தின் உடன் பிறப்பு) என்பதை உலகத்துக்கு அழகாக உணர்த்துகிறார்கள்.

பகைவரிடமும் அன்பு காட்டும் இராமபிரான் இந் நிலையில் கும்பகருணனைக் கொல்வதைத் தவிர வேறு வழி யில்லை என்பதை உணர்கிறான்.

இராமபிரான் கும்பகருணனின் மீது அம்பு எய்யவே அவன் மூர்ச்சையடைகிறான். இரத்தம் பெருக்கெடுத்து ஓடுகிறது. இரத்த வெள்ளம் சுக்கிரீவன்மீது பாய அவன் மூர்ச்சை தெளிகிறான்.

பின்னர் மயக்கமுற்றுக் கிடக்கும் கும்பகர்ணனின் மூக்கையும், செவியையும் கடித்துத் தம்மவரைக் கூடினன்.

மூர்ச்சை தெளிந்த கும்பகருணன் தனக்கு நேர்ந்த அவமானத்தை உணருகிறான். கோபம் மேலிட்டுப் பயங் கரப் போர் புரிகிறான்.

இந்த நிலையில்கூட இராமபிரான் கும்பகருணனுக்கு திருந்துவதற்கு ஒரு வாய்ப்பு அளிக்கிறான்.

ஏதியோடு எதிர் பெருந்துணை இழந்தனை
எதிர் ஒரு தனி நின்றாய்;
நீதியோனுடன் பிறந்தனை ஆதலின்,
நின் உயிர் நினக்கு ஈவென்;
போதியோ? பின்றை வருதியோ? அன்று எனின்,
போர் புரிந்து இப்போதே
சாதியோ? உனக்கு உறுவது சொல்லுதி,
சமைவுறத் தெரிந்து, அம்மா!

(கு.வதை. 323)

என்று அவனை திருந்துமாறு எச்சரிக்கிறான். ஆனால் இவனோ 'உங்கள் தோள் தலை வாள் கொடு துணித்து' உயிர் குடிப் பேன் என்கிறான். (கொடு—கொண்டு) மறுபடியும் போரிடு

கிறான். அவன் கைகளும் கால்களும் அறுபடுகின்றன. இறுதியில் கும்பகருணன் "இராமனுடைய வில்லின் ஆற்றலுக்கு ஆயிரம் இராவணர்களும் ஈடாகார்" என்பதைக் கண்டு கொள்கிறான்.

அந்தோ! கையும் காலும் இழந்துவிட்டேன். இனி என்ன உதவி செய்ய முடியும் இராவணனுக்கு? என்கிறான். மையல் நோயால் முடியப்போகிற அண்ணனுக்கு நான் இனி ஒன்றும் செய்வதற்கில்லையே என்று வருந்துகிறான்.

போர்க்களத்தில் இரத்த ஆறுகள் ஓடுகின்றன. அவை யானை, குதிரை, தேர் முதலியவற்றை இழுத்துக்கொண்டு போகின்றன. இப்படிப் போர் நிகழ்த்திய கும்பகருணன் முன் இராமன் வருகிறான். போரில் பயன்பட்ட ஆயுதங்கள் இப்போது இராமனுக்கு அணிகலன்கள் போல் அழகு செய்கின்றன. இத்தகைய சௌந்தர்ய மூர்த்தியின் முகம் நோக்கிச் சொல்லுகிறான்.

"சிபி சக்கரவர்த்தியின் பரம்பரையில் தோன்றியவனே; நீ எனது கடைசி வேண்டுகோளைக் கேட்டருள வேண்டும்" என்ற பீடிகையுடன், இராவணனுக்காகப் போர் செய்த கும்பகருணன் விபிஷணனுக்காகப் பரிந்து ஒரு வேண்டுகோள் செய்து கொள்கிறான்.

"நீதியால் வந்தது ஒரு நெடுந் தரும நெறி அல்லால்,
சாதியால் வந்த சிறுநெறி அறியான், என்தம்பி;
ஆதியாய்! உனை அடைந்தான்; அரசர் உருக்கொண்டு அமைந்த
வேதியா! இன்னம் உனக்கு அடைக்கலம் யான் வேண்டினேன்.

(கு. வதை. 354)

விபிஷணன் நீதி தருமமாகிய நெடுந் தர்மத்தை நன்கு உணர்ந்தவன். அந்த நெறி இல்லாமல் சாதிச் சிறுநெறியைப்

பின்பற்றுகிறவன் இல்லை; சாதியால் வந்த சிறுநெறி அறியான், என் தம்பி! எனப் பெருமை கொள்கிறான். அத்தகைய விபிஷணன் உன்னிடம் அடைக்கலம் புகுந்திருக்கிறான். நீ அரசர் உருக்கொண்டவனாயினும் உண்மையான வேத முதல்வன்—வேதியன். சரணாகதியில் நம்பிக்கையில்லாத நான் விபிஷணனுக்காக உன்னை அடைக்கலமாக அடைகிறேன்! எப்படியாவது வெற்றிபெற வேண்டும் என்பதுதான் இராவணன் குறிக்கோள். விபிஷணன் வேரொடு தன் குலத்தை அழிக்கப் பார்க்கிறான் என்ற நினைப்பில் அவன் சீற்றம் கொண்டிருக்கிறான். அதனால் அடாத காரியங்களைச் செய்யக் கூச மாட்டான்.

தம்பி என நினைத்து, இரங்கித் தவிரான், அத்தகவு இல்லான்
நம்பி! இவன் தனைக் காணின் கொல்லும்; இறை நல்கானால்!
உம்பியைத்தான்; உன்னைத்தான், அனுமனைத்தான், ஒரு
பொழுதும்
எம்பி பிரியானாக அருளுதி; யான் வேண்டினேன்.
(கு. வதை. 356)

எனவே அவன் தம்பி என்று கொஞ்சமும் தாட்சணியப் படமாட்டான். விபிஷணன் எப்பொழுதும் இலட்சுமணன் கண்காணிப்பில் இருக்கவேண்டும் அல்லது உன்னுடைய கண்காணிப்பிலோ, அனுமன் மேற்பார்வையிலோ இருக்க வேண்டும். இதுதான் என் வேண்டுகோள் என்கிறான்.

பின்னர் மூக்கு இல்லாத தங்கையைப்போல் முகம் உள்ளவனாகி விட்டான் என்று தேவர்களும் முனிவர்களும் பார்ப்பார்கள். அவர்களை அப்படி நோக்காமல் செய்யவேண்டும் என்கிறான். அவருடைய கண்களை மூடிமறைக்க முடியுமா! எனவே "என் நெடுந்தலையைக் கடலினுள் மூழ்கடிப்பாய். இதுதான் வேண்டிய பொருள்! வேறு ஒன்றும் எனக்குத் தேவையில்லை!" என்கிறான்.

கும்பகருணனுடைய குணாதிசயம் சுருக்கமாகச் சொல்லுமிடத்து, அது சகோதர பாசத்தைச் சுற்றியே வட்டமிடு

கிறது; இந்தப் பாசத்தால்தான் இராவணனுக்காக உயிர் துறக்கிறான்.

இதே பாசந்தான் சூர்ப்பணகையையும் கற்புஉடையவள் என்றும், குற்றம் இல்லாதவள் என்றும் நினைக்குமாறு அவன் அறிவை மறைக்கிறது. முடிவாகக் கூறின் இவனுடைய சகோதரபாசமே இவனுக்கு எமனாக முடிகிறது.

கும்பகர்ணன் பாத்திரத்தை முரண்மயம் என்பர் சிலர். அறியாமல், ஆராயாமல் பேசுதல் கூடாது. கம்பன் கும்ப கர்ணனைக்காட்டும்போது முதலில் 'உன்னருந்தீவினை உருக் கொண்டென்னவே' கிடந்ததாய்ச் சொல்கின்றான். போருக்கு வரும் கும்பகர்ணனை மண்ணினை அளந்து நீண்டாமால் என வளர்ந்து நின்றதாக வர்ணிக்கிறான். பாத்திரத்தின் குண வளர்ச்சியையும், கதைப்போக்கையும் ஒட்டி உவமைகள் கவிஞனால் கையாளப்படும்.

மந்திராலோசனைச் சபையில் அண்ணன் செயலைக் கடிந் துரைக்கும் துணிவில் கும்பகர்ணனின் அறவுணர்வு தெரி கிறது. அதேசமயம் குலத்து மானமும் புலனாகிறது. இனி மேல் விட்டால் எளியம் ஆகும் என்ற வரிகளில் இரு குணங் களின் போராட்டமே ஒருவனை அவல வீரனாக்குகிறது. "வென்றிவண் வருவன் என்று உரைக்கிலேன்—விதிதான் என்னைப் பிடர்பிடித்துத் தள்ளுகிறது" எனும் தொடரில் கையற்ற நிலை தெரிந்தாலும், 'போரில் நான் அனைவரையும் கொல்வேன்' (அவ்விருவர் நிற்க—இராம இலக்குவர் தவிர) என்னும்போது வீரத்தின் அழகு புரிகிறது. 'சீதையைக் கொண்டுவந்து வைத்தது, காமம் கொண்டது, தகாதது— சிட்டர் செயலன்று; அது குலச்சிறுமைஎன்னும் அறநெஞ்சம் பொருதொழிலுக்குரியவனாகி, அவனைச்செஞ்சோற்றுக்கடன் கழிக்க உயிர்விடச் செய்து நன்றியறிதல் என்னும் அறத் தையும் கூட்டுகிறது. தான் சாவது புலையுறுமரணம் என்று புரிந்துகொண்டும் உயிர்விட்ட தியாகம் அவனை மா(ன) வீரனாக்குகிறது. தமையனின் பகைவனைக் கும்பிட்டு வாழ

மாட்டேன் என்னும் கொள்கை அவனைக் குலத்துமானம் காத்தவனுக்குகிறது. தம்பி செய்தது சரி என்று பேசி அவனை இராமனிடமே அனுப்பியது அவன் நீதியின்பால் நேய முள்ளவன் என்று நிறுவுகிறது. மூக்கிலா முகம் என்று அமரர் நோக்கக்கூடாது என்பதிலும் குலத்து மானமும், அண்ணன்புகழில் அக்கறையும் தெரிகிறது. பல நற்பண்புகள் சேர்ந்தும், மறத்தின்பக்கம் சார்ந்து நின்ற ஒரே குறை கும்ப கருணனை அவல வீரனுக்குகிறது. அவனது அழிவில் இராவணன் மட்டுமா அழுகிறான். படிக்கும் நாமும் அழச் செய்துவிடுகிறான் கம்பன்!

பேதை, பெதும்பை, மங்கை என்ற பருவங்கள் பெண் களுக்கு உண்டு. பேதை உடம்பு, உள்ளம் இரண்டாலும் பக்குவமற்ற நிலை. இது இராவணன்! பெதும்பை, மனத் தளவில் ஆசைபெற்று, உடல் பக்குவமடையாத பருவம்— இந்த நிலைதான் கும்பகர்ணனின் நிலை. மனம் இராமன் பரம் பொருள்; வீடணன் சரண் அடைந்தது நன்று, அண்ணன் செய்வது தீமை என்றெல்லாம் கூறியும், உடம்பு, உண்ட சோற்றின் கடன் தீர்க்கப் பயன்பட விழைந்தது—சோறும், ஊனும் உண்டு சதைசதையாய் வளர்ந்த உடல் அணுவணு வாய், அண்ணனுக்காக அழிந்தது. குடித்தகுடம் குடமானகள் குருதியாருய்ப் பெருகிற்று. கும்பகர்ணனின் கதை முடிந்தது. அண்ணனுக்காகப் போரிட்டுஉயிர்துறந்ததில் செஞ்சோற்றுக் கடனும் தீர்ந்தது. தம்பியை இராமனிடம் மீண்டும் அடைக் கலப்படுத்தி அறத்திற்குக் கடமை தீர்த்தாயிற்று. ஆகவே ஆழ்ந்து ஆராய்ந்து பார்த்தால் கும்பகர்ணன் என்னும் பாத் திரம் முரண்மயமல்ல, அதில்தான் உளவியல்படி கூடிய அழகு விளங்குகிறது!

# 8. இறுதிவரை சீதையின் நினைவா!

இராவணன் போர்க்களத்தில் இறந்து கிடக்கும் காட்சி குறித்துச் சிலர் சீதா பிராட்டியின் நினைவோடு இறந்தானா இல்லையா என்று வாதிக்கிறார்கள். பாட்டின் போக்கையும் மெய்ப்பொருளையும் இங்கே உள்ளவாறு காண்போம். அதன் பாட்டு பின் வருமாறு. மண்டோதரி புலம்பும் பாடல்:

''வெள் எருக்கஞ் சடை முடியான் வெற்புஎடுத்த
திருமேனி, மேலும் கீழும்,
எள் இருக்கும் இடம் இன்றி, உயிர் இருக்கும்
இடம் நாடி, இழைத்தவாறோ?
''கள் இருக்கும் மலர்க் கூந்தல் சானகியை
மனச்சிறையில் கரந்தகாதல்
உள்இருக்கும்'' எனக்கருதி, உடல்புகுந்து,
தடவியதோ ஒருவன் வாளி?

(இராவணன் வதை 237)

மண்டோதரி இராவணனின் மரணம் குறித்து இவ்வாறு புலம்புகிறாள்.

சிவபெருமானுடைய கைலையங்கிரியை திக் விஜயகாலத்தில் தூக்கிய இராவணனது திண்மைவாய்ந்த மேனி, மேலும் கீழுமாக எள் இருக்கும் இடம் இன்றி, உயிர் இருக்கும் இடம் நாடித் தேடியதோ?

சீதாபிராட்டியைச் சிறை பிடிக்கும்முன், இராவணன் 'கேட்டதும் காதல்' என்ற விபரீத முறையில் மனமாகிய சிறையில் வைத்து விட்டானாம்.

மயிலுடைச் சாயலாளை வஞ்சியா முன்னம், நீண்ட
எயிலுடை இலங்கை நாதன், இதயம் ஆம் சிறையில்
வைத்தான்.

அப்போதே இவனுக்கு அபாயம் தொடங்கிவிட்டது. எவ்வளவோ வலிமை வாய்ந்த இராவணன் உள்ளமும் நீராய்க் கரைந்து உருகிப் போயிற்றும், வெய்யிலில் வைத்த வெண்ணெய் போல.

அந்தக் காதல் காலப்போக்கில் உற்ருர் உறவினர்களே யும், அருமந்த சகோதரனுகிய கும்பகருணனையும் வீரப்புதல் வனுகிய இந்திரசித்தையும் ஒருவர் பின் ஒருவராகப் பலி கொடுத்த பின் வறண்டு போகிறது.

இப்போது மிஞ்சியதெல்லாம் பிடிவாத குணமும் மூர்க்க சுபாவமும்தான்.

இந்நிலையில் இராமபாணம் சீதையின் நினைப்பை இராவணன் உடலினுள் கண்டுபிடிக்க முடியவில்லை. இது தான் பாட்டின் திரண்ட பொருள்.

பொதுவாகக் கம்பன் பாடல்களை அவற்றின் அமைப் பிற்கும் போக்கிற்கும் இசையப் பொருந்தும்படிதான் அதன் பொருளைப் புரிந்து கொள்ள வேண்டும். சிறப்பான இத் தகைய உயிர்நிலைப் பாடல்களை எளிதில் புரிந்து கொள்ளுவது கொஞ்சம் கடினந்தான். இவற்றைப் பன்முறை ஆழ்ந்து சிந்தித்துத்தான் நாம் நமது ஐயப்பாடுகளைத் தீர்த்துக் கொள்ளவேண்டும். அப்படியானுல்தான் கம்பனது கவி யுள்ளம் தன்னை உள்ளவாறு புலப்படுத்தும், தேகம் உள்ளள வும் சந்தேகம் என்ற நிலையும் மாறும்.

கும்பகர்ணன் இறந்தபோது அழுது, கதறிப் புலம்பு கிருன் தசமுகன். அதிகாயன் மறைந்தபோது, தானிய மாலை இவன் கண் எதிரே இவன் காமத்தை நிந்தித்தும், மனம் மாறியதாகத் தெரியவில்லை. 'பேதையாய்க் காமம் பிடிப் பாய், பிழைப்பாயோ!' என்ருள். ஆனுல் இந்திரசித்தனின் தலையற்ற முண்டமான உடல் கண்டு மண்டோதரி கதறு கிருளே—'இன்று என்மகனுக்கு இந்தக் கதி; நாளை இலங்கை வேந்தனுக்கும் இதே கதிதானே' என்று. அப்போது இராவணன் தன் தவற்றை உணர்ந்து கொள்கிருன்.

"அஞ்சினேன் அஞ்சினேன் அச்சீதை என்ற
அமிழ்தால் செய்த நஞ்சினுல் இலங்கை வேந்தன்
நாளை இத்தகைய னன்றே?"

உடனே இராவணன் சீதையை வெட்டவும் புறப்படுகிறுன். காம நினைப்பிருந்தால் வெட்டப் போவானு? இத்தனையும் சீதையால்தான் என்று முன்னர் புரிந்து கொள்ளாதவன் மேகநாதனின் மரணத்தின் பின்தான் "நேரிழை ஒருத்தி நீரால் எனக்கு நீ செய்யத் தக்க கடன் எலாம் இரங்கி ஏங்கி உனக்கு நான் செய்வதானேன்!" என்று புலம்பினுன். இந்தப் பாடலுக்குப் பின் இராவணன் மன நிலை முற்றிலும் மாற்ற முடையது. இனி மானம் காக்க, வீரம்காக்க, புகழ்காக்கப் போரிட்டு மடிவதே சரி என்பதுதான் அந்நிலை. காமம் இல்லை; வீரவெறி, பிடிவாதம் ஆணவம் என்றுகொள்ளலாம்.

கடைசி நாளாகப் போரிடப் புறப்படும் இலங்கேசுவரன் 'இன்று ஒன்று சீதை மங்கலமிழப்பாள்; அல்லது மண்டோதரி அந்நிலை உறுவாள்' என்று வஞ்சினம் மொழிகிறுனே!

'மன்றலங் குழல் சானகி வயிறலைத்து மாழ்குதல்
அன்றெனில் மயன் மகள் அஃதுறுதல்'

இங்கே காமம் ஏது? அதுதான் கொஞ்சம் கொஞ்சமாய் நைய அடிக்கப் பட்டுவிட்டதே!

புறச்சிறையிலிருந்து வேறு யாராவது விடுதலை தந்திட முடியும். இதயமாம் சிறையிலிருந்த சீதை பற்றின நினைப்பு யாரால் நீக்க முடியும்? இராமபாணம் அதைச் செய்யத் தேடிற்றும். சீதையினைப் பற்றிய நினைப்பு இருக்கிறதா என்று துருவிப் பார்த்ததாம்; இல்லை என்றபின் புறம் போந்ததாம். என்ன அழகிய கற்பனை! இராவணனின் நெஞ்சு நேர்பவளாகிய கற்பரசி மண்டோதரி வாயால் இதைச் சொல்ல வைத்தது அருமையல்லவா? இந்த ஒப்பாரிப் பாடல் மூன்று பேருக்குப் பெருமை சேர்த்தது.

ஒன்று : சீதை பற்றிய காம நினைப்பு தசமுகன் நெஞ்சில் இல்லை என்றதால் தேவியின் பெருமை காக்கப் பெற்றது.

இரண்டு : தசமுகன் காம நினைப்பின்றித் தூய வீர நெஞ்சுடன் தூய வீரனாகப் போரிட்டு மாண்டது அவனுக்கும் பெருமை.

மூன்று : இராமனாகிய அரசுருக் கொண்ட வேதியன் தூய வீரனையே கொன்றான், காமுகனையல்ல—என்பது அவனுக்கும் பெருமை.

இன்னும் சிலர் 'கற்புடைப் பெண்டிர் பிறர் நெஞ்சு புகார்' என்ற மணிமேகலை அடியைக் குறிப்பிட்டு அதன்படி சீதை இல்லை. தசமுகன் நெஞ்சில் புகுந்ததால் கற்பில் குறைபாடுளது என்பர். துளசிதாசர் இந்தச் சீதையே மாயாசீதை; மான் பிடிக்கச் சொல்லி இராமனை அனுப்பிய தும் உண்மைச் சீதை அக்னியில் மறைந்து, மாயா சீதைதான் வெளியே நின்றாள். உண்மைச் சீதையைத் தசமுகன் எடுத்துச் செல்ல முடியுமா? பின்னால் அக்னிப் பிரவேசத்தின் போது மாயா சீதை தீக்குள் சென்று தேவி சீதை வெளியே வந்தாள் என்று அமைப்பார். கம்பன் காவிய அமைப்புப் படியே பார்க்கலாமே. சீதை என்ற அணங்கினைப் பார்த்தோ அல்லது அவளது படத்தைப் பார்த்தோ, சிலையைப் பார்த்தோ காமம் கொண்டானா அரக்கன்? வார்த்தைக் கோலம் காட்டினாளே வஞ்ச மகள் சூர்ப்பணகை, அப்போதே 'எயிலுடை இலங்கை நாதன்' இதயச் சிறையில் கொண்டதற்கு யார் பொறுப்பாளி? காணுமலே, கேட்ட மாத்திரத்திலே கொண்ட நினைப்புக்குத் தேவி பொறுப்பா? விதியது வலி, மேலுளவு விளைவு, பதியுறு கேடு வந்து பயந்த தன்மை எல்லாம் தசமுகனைக் காமம் கொள்ள வைத்தன. ஆனால் தூய வீரனாக, சீதை பற்றிய காம நினைப்பின்றி இறந்தான் என்று மறவாமல் கம்பன் அமைத்து, இதயச் சிறையில் சீதை இல்லை என்று இராம பாணம் விடுதலை செய்ய அந்த விடுதலைப் பிரகடனத்தை மண்டோதரி சொல்ல அமைத்த திறம் உணர்ந்து பெருமைப் படத்தக்கது.

# 9. அவதார மூர்த்தியின் நாடகம்

சீதையை ஸ்ரீராமன் தீக்குளிக்கச் சொன்னது சரியா? என்று கேட்கிறார்கள். இந்தக் காட்சியும் காவிய நாடகத்திற்கு ஒரு சிறப்பான சான்றாகக் கருதத்தக்கது.

இராவண வதத்திற்குப் பின் இராமன் சீதையை அழைத்து வர அநுமனை அனுப்புகிறான். அநுமன் வணங்கிப் பிராட்டிக்கு அந்த சோபனச் செய்தியை தெரிவிக்கின்றான்.

'ஏழை, சோபனம்! ஏந்திழை, சோபனம்!
வாழி, சோபனம்! மங்கல சோபனம்!
ஆழி ஆன அரக்கனை ஆரியச்
சூழியானை துகைத்தது, சோபனம்' (மீட்சிப் படலம் 16)

ஒரு மகா சமுத்திரம் போலக் காணப்பட்ட அரக்கனை இராமன் என்ற யானை துவைத்துவிட்டது! 'இப்போது சொல்ல வந்த சோபனச் செய்தி இது' என்கிறான்.

இது கேட்ட சீதையின் நிலையைப் பல பாடல்கள் அழகாகச் சித்திரிக்கின்றன. இதோ அவற்றுள் ஒன்று:—

மேக்கு நீங்கிய வெள்ள உவகையால்
ஏக்கமுற்று, "ஒன்று இயம்புவது யாது?" என
நோக்கி நோக்கி, அரிது என நொந்துளேன்;
பாக்கியம் பெரும் பித்தும் பயக்குமோ?

(மீட்சிப் படலம் 26)

உவகை அலையெழுந்து பொங்குகிறது. உடனே ஏக்கமும் ஏற்படுகிறது. ஏதாவது சொல்ல வேணுமே என்று நினைக்கிறாள்; ஆனால் ஒன்றும் சொல்ல முடியவில்லை.

பெரும் பாக்கியத்தினுலும் பைத்தியம் ஏற்படும் போலும்! சீதை ஆனந்தத்தால் பரவச நிலையடைகிருள்.

பின்னர் ஒரு வகையாக நிதானித்துக் கொண்டு 'உனக்கு நான் என்ன கைம்மாறு செய்யப் போகிறேன்?' என்கிருள் பிராட்டி. அனுமன் அதற்கு 'நீ எனக்கு அளிக்கும் வரமெல்லாம் இராமனிடம் உன்னைச் சேர்ப்பதுதான்; அதற்கு மேல் என்ன பாக்கியம் இருக்கிறது' என்கிருன்.

அநுமன் பிராட்டிக்குத் தொந்தரவு கொடுத்த அரக்கியரைத் தக்கவாறு தண்டிப்பேன் என்று கொதித்து எழுந்ததும், அந்த அரக்கியர்கள் சீதையைச் சரணடைகிருர்கள். அவர்களுக்குப் பரிவு காட்டி, 'இராவணன் கட்டளைக்கு அடிபணிந்து தானே அவ்வாறு செய்தார்கள்' என்று அவர்களை மன்னித்து விடுமாறு வேண்டுகிருள்.

அப்பொழுது விபிஷணன் அங்கு வந்து சீதையைக் கோலம் புனைந்து வருமாறு வேண்டுகிருன். அதற்கு சீதை இப்போதுள்ள நிலையில் வருவதே சரியானது என்கிருள். உடனே இது இராமன் கட்டளை என விபிஷணன் கூறச் சீதை கோலம் புனைந்து புறப்படுகிருள். (தவக்கோலத்தினை அவன் காண நோற்றிலன்!)

கற்புக்கரசியான சீதையை இராமன் அமைதியாக நோக்குகிருன் ஒரு கணம்.

கற்பினுக்கு அரசினைப் பெண்மைக் காப்பினை,
பொற்பினுக்கு அழகினை, புகழின் வாழ்க்கையை,
தற்பிரிந்து அருள் புரிதருமம் போலியை,
அற்பின் அத்தலைவனும் அமைய நோக்கினுன்.

(மீட்சிப் படலம் 60)

அடுத்த கணமே சீறிப் பின் வருமாறு கொடிய சொற்களைச் சொல்கிருன்.

'ஊண்திறம் உவந்தனை; ஒழுக்கம் பாழ்பட,
மாண்டிலை முறைதிறம்பு அரக்கன் மாநகர்
ஆண்டு உறைந்து அடங்கினை; அச்சம் தீர்ந்து, இவண்
மீண்டது என்நினைவு? "எனை விரும்பும்" என்பதோ?

(மீட்சிப் படலம் 62)

ஒழுக்கம் பாழாகும்படி ஊன் உணவை விரும்பினாய், நீ மாண்டாய் இல்லை, அறநெறி தவறி அரக்கனுடைய இந்த நகரிலே அவனுக்கு அடங்கி வாழ்ந்தாய், பயம் இல்லாமல் இங்கே திரும்பி வந்தது (என்ன நினைப்புடன்) நான் விரும்புவேன் என்ற நினைப்பிலோ?

கடல் தாண்டி வந்து இந்த அரக்கர் படைகளை வேரொடு அழித்தது உன்னை மீட்டுக் கொள்ளும் பொருட்டு அல்ல; உலகம் சொல்லும் பழிச் சொல்லிலிருந்து என்னை மீட்டுக் கொள்ளும் பொருட்டேதான்.

மாமிசங்களை அமிர்தத்தைக் காட்டிலும் இனிமையானவை என்று புசித்தாய். மது பானமும் செய்தாய். நீ பெருந்தன்மையில் இருந்து நீங்கி விட்டாய்.

பெண்மையும், பெருந்தன்மையும், நல்குடிப் பிறப்பும், கற்பு என்ற சக்தியும், நல்லொழுக்கமும், தெளிந்த அறிவும், சிறப்பும், உண்மையும் உன்னைப் போல் ஒருத்தி தோன்றியதால், ஞானியான ஜனகனின் புகழிலே மடிந்து போயின போலும்.

நல்ல குலத்தில் தோன்றிய பெண்கள் தங்கள் ஐம்புலன்களையும் அடக்கி, ஒழுக்கத்தை உயிர் நிலையாகப் பற்றிக் கொண்டு, நங்கையர் மனத்தவம் என்பதை நிலை நாட்டுவர். இடையிலே ஒரு பழி ஏற்பட்டால் தம்மை உயிரோடு ஒழிப்பார்கள்.

உன்னுடைய ஒழுக்கச் செய்தி என் உணர்ச்சிகளை அழித்துவிட்டது. இதற்கு மேல் நான் என்ன சொல்ல

இருக்கிறது. இப்படியெல்லாம் சொல்லும் இராமபிரானை தெய்வீக அறிவுள்ளவன் என்கிறான் கவிஞன்.

நெருப்பைக் கக்கும் வாக்கியங்களை அள்ளிக் கொட்டுகிறான், கருணைச் செல்வன்.

முனைவரும், அமரரும், மற்றும் முற்றிய
நினைவுஅரு மகளிரும், நிருதர் என்று உளார்
எனைவரும், வானரத்து எவரும், வேறு உளார்
அனைவரும், வாய்திறந்து' அரற்றினர் அரோ.
(மீட்சிப் படலம் 69)

முனைவர் என்றால் எல்லோருக்கும் முன்னே நிற்கும் தலைவர், அவர்கள் முனிவர்களாகவும் இருக்கலாம்.

இராமபிரானின் சொற்களைக் கேட்ட முனைவரும் தேவர்களும், நினைவுக்கும் எட்டாத கற்புடைய பெண்களும், அரக்கர் எனப்படுவர் அனைவரும், வானர வகுப்பினரும், மற்றுமுள்ள எல்லோரும் வாய்விட்டுக் கதறினர்.

பிராட்டி இரத்தக் கண்ணீர் வடிக்கிறாள். புண்ணிலே கோலிட்டுப் பெருந்துன்பம் ஏற்படுத்தியது போல, உள்ளத்து உணர்வும் இல்லாமல் பெருமூச்சு விடுகிறாள்.

அனுமன் என்னிடம் இப்போதே இராமபிரானிடம் போய்ச் சேர வேண்டும் என்றானே, அவன் என்னுடைய சோர்ந்த நிலையை எடுத்துரைக்கவில்லையோ? அவன் தூதுவன் இல்லையா?

உத்தமனாகிய நீ என் நிலைமை உணர்ந்து கொள்ளாமையால் என் தவம், நலம், கற்பு, இத்தனை காலம் அனுபவித்த துன்பம் எல்லாம் நான் பைத்தியம் என ஆகி வீணாகப் போய் விட்டன.

மும்மூர்த்திகளும் உள்ளங்கை நெல்லிக்கனி போல அனைத்தும் நோக்கினும் அவர்கள் மங்கையர் மனநிலையை உணரவல்லரோ?

எனவே இனி நான் என்னுடைய குற்றம் இலாத கற்புத்தவத்தினை யாருக்கு எப்படி எடுத்துக் காட்டுவேன்? இத்தகைய சூழ்நிலையில் எனக்குச் சாவைத் தவிரச் சிறந்தது ஒன்றும் இல்லை. உன் பணியும் என் தலை விதியும் அதுதான் என்று, இளைய பெருமாளை அழைத்து 'தீ மூட்டச்' சொல்லு கிருள். "இடுதி தீ."

[இளவலின் மனம் நோகும்படி சுடச்சுட வார்த்தைகளைக் கொட்டி அண்ணனைத் தேடி மாய மான் பின்னே போகச் செய்தாள் அல்லவா? அதற்கு இயற்கை விதிக்கும் பிராய சித்தம் இதுபோலும்.] இராமன் கண்ணால் காட்ட, இலட்சு மணன் கண்ணீர் பெருகி வரும் முகத்தோடு அவ்விடத்திலே நெருப்பு அமைத்தான்.

[இந்த நிலையில் இராமபிரான் சீதையைத் தடுக்கவில்லை. மௌனமாக ஒப்புதல் அளித்ததாகவே கொள்ளவேண்டும். சீதாபிராட்டியின் கற்பு நிலையை உலகம் உணரச் செய்ய வேண்டுமல்லவா] சீதாபிராட்டி தீயினை வலம் வருகிருள். இதைக் கண்டு உலகில் உயிர்களெல்லாம் ஓலமிடு கின்றன. 'ஐயா! இது சரியான செயலன்று' என சொல்லின.

நான்முகன் முதலானவர் நடுங்குகிருர்கள். பூமியைத் தாங்கும் ஆதிசேஷன் படம் குறைய, உலகம் எல்லாம் விஷம் பரந்துள்ளது என வெதும்புகிறது. சந்திர சூரியர்கள் இடம் மாறித் தத்தளிக்க, கடல்கள் ஏங்குகின்றன.

' மனத்திஞல், வாக்கிஞல, மறு உற்றேன் எனின்,
சினத்திஞல் சுருதியால், தீச்செல்வா!' என்ருள்;
புனத்துழாய்க் கணவற்கும் வணக்கம் போக்கிஞள்'

(மீட்சி 84)

குளிர்ந்த நீரிடையே செந்தாமரைப் பூங் கோயிலுக்குத் திரும்புவது போல் தீயிடைப் பாய்கிருள்.

இவளுடைய கற்புத்தீயிஞல் தீயும் அணைந்து போகிறது.

தீக்குளித்த நங்கையைத் தன் செங்கையால் ஏந்தி எழுகிறான் தீக்கடவுள். அப்போதும் பிராட்டி சூடியிருந்த மலர்களில் தேனும் வண்டும் இருந்தன. மலர்கள் நீரினில் தோய்த்து எடுத்ததுபோலவும் இருந்தனவாம்.

திரிந்த உலகமும் செவ்வையாகத் தன் பணியைத் தொடரலாயிற்று. இந்தக் காட்சியைக் கண்டு சீதைக்குப் பரிந்து நின்றவர்கள் எல்லாம் பயம் தவிர்ந்து நின்றனர். அருந்ததி முதலான பெண்கள் ஆனந்தக் கூத்தாடுகிறார்கள்.

'கனிந்து உயர்கற்பு எனும் கடவுள்-தீயினால்,
நினைந்திலை, என்வலி நீக்கினாய்' என,
அறிந்தனை அங்கி, நீ அயர்வு இல் என்னையும்
முனிந்தனை ஆம். என முறையிட்டான் அரோ'

(மீட்சி 89)

"இராமா! உனக்கு என்மீது கோபம் என்ன?" இப்படி அக்கினிதேவன் முறையிட்டதற்கு மறுமொழி சொல்கிறான் இராமன்; 'யார் நீ? நெருப்பிலிருந்து தோன்றிய, நீ என்ன சொல்லுகிறாய்? இந்தப் புன்மை நிறைந்தவளைச் சுடாமல் போற்றுகின்றாயே; யார் சொல்லி நீ இப்படிச் சொல்லு கிறாய்' என்கிறான்.

'நான் நெருப்புத் தெய்வம். என்னை இந்த அன்னையின் கற்புத்தீ சுட, அதைப் பொறுக்க முடியாமல் இங்கு அணுகு கின்றேன். என் உருவத்தின் இயற்கையை நோக்கிய பின்னும் சந்தேகிக்கிறாயோ? எல்லோருக்கும் சான்றாக நிற்கும் நீ இப்படிச் செய்யலாமா?'

என்னுடைய உண்மையான சொற்களைக் கேட்ட பிராட்டியை அழைத்துக் கொள்ளவில்லை, பொய்யில்லாத அநுமன் வார்த்தையையும் கேட்க மறுத்தனையே? அறத்தினை மறந்தாயோ?

இவள் கோபித்தால் மழை பெய்யுமா, பூமி பிளந்து போகாதா? அறநெறியில் செல்லுமா, உலகம் பிழைத்

திருக்குமா? இவள் சபித்தால் பிரம்மனும் மாய்ந்து போவான். இப்படிப்பட்டவளை நீ மாசு கூறுவது தவறு என அக்கினிதேவன் சீதாபிராட்டியை இராமனிடம் ஒப்படைக்கிறுன்.

அழிப்பு இல சான்றுநீ, உலகுக்கு; ஆதலால்
இழிப்பு இல சொல்லி, நீஇவளை, ''யாதும் ஓர்
பழிப்பு இலள்'' என்றனை பழியும் இன்று; இனிக்
கழிப்பிலள்? என்றனன்—கருணை உள்ளத்தான்.

(மீட்சி 97)

'நீ உலகத்திற்கு அழிவில்லாத சான்ருக நிற்பவன். நீயே இவளை இழிவில்லாதவள், யாதொரு பழிப்பும் இல்லாதவள் என்று கூறுகின்ருய். எனவே இனிமேல் இவளுக்குத் துளியும் பழிப்பில்லை' என இராமன் சீதாபிராட்டியை ஏற்றுக் கொள்கிருன்.

இராமன் தன்னை .யாரென்று உலகத்திற்கு உணர்த்தும் காலம் வந்துவிட்டதெனத் தேவர்கள் சொல்ல நான்முகன், அதை உணர்த்த இராமனிடம் வருகின்ருன்.

' மன்னர் தொல் குலத்து அவதரித்தனை; ஒரு மனிதன்
என்ன உன்னலை உன்னை, நீ; இராம! கேள் இதனை;
சொன்ன நான் மறைத் துணிவினில் துணிந்த மெய்த்துணிவு
நின் இலாது இல்லை; நின்னின் வேறு உளது இலை—
நெடியோய்''

(மீட்சி 99)

என இராமனின் அவதார ரகசியத்தை வெளிப்படுத்து கிருன்.

'நீ ஆதி மூர்த்தி; சீதை உலகங்களின் தாய். எனவே நீ இவளைத் துறக்கமுடியாது. இவள் தவறு செய்தாள் என்று சொல்லுவதால் இதனைத் தாங்காது உலகத்து உயிர்கள் மாண்டு போகும். இவளுக்கு இழிநிலை ஏற்பட்டதாகக் கருதிய மனநிலையை முற்றும் மறந்துவிடு' என்கிருன்.

பின்னர் சிவபெருமான், 'உன்னைப் பிரிந்த துயரத்தினால் உயிர் துறந்த தசரத சக்கரவர்த்தியைக் கண்டு அவனுடைய துயரத்தை நீக்குவாய்' என்கிறான்.

தசரதன் இராமனை மார்புறத் தழுவிக் கொள்ளுகிறான். அன்று கைகேயி கொண்ட, வரம் என்ற வேலாயுதம் இன்று வரை என் நெஞ்சிலே நின்றது. அது நான் இறந்ததும் நீங்கின பாடில்லை. இன்று உன்னைத் தழுவிக் கொண்டதால் காந்தம் இரும்பை இழுப்பது போன்று அந்த வேலாயுதம் நீங்கியது.

தேவர்களும் முனிவர்களும் என்னைத் தொழுகின்ற காட்சியை நீ பார்க்கின்றாயல்லவா? இத்தகைய பாக்கிய மெல்லாம் உன்னைப் பெற்றதால் அல்லவா கிடைத்தது என்கிறான்.

பிறகு தசரதன் சீதையை அணுகி கருணையால் தழுவிப் பின்னும் சொல்லுகின்றான். ''நங்கை! மற்று நின் கற்பினை உலகுக்கு நாட்ட, அங்கி புக்கிடு'' என்று உணர்த்திய அது மனத்து அடையேல்'' என்றும்,

''பொன்னைத் தீயிடைப்பெய்தல் அப்பொன்னுடைத்
தூய்மை—
தன்னைக் காட்டுதற்கு'' என்பது மனக்கொளல் தகுதி;
உன்னைக்காட்டினன், ''கற்பினுக்கு அரசி'' என்று, உலகில்
பின்னைக் காட்டுவது அரியது''

(மீட்சி 122)

நங்கையே! உன்னைத் தீயினுள் மூழ்கச் சொன்னதற்காக கோபிக்காதே. அது உன் கற்பினை உலகுக்குக் காட்டத் தான். பொன்னைத் தீயிலிடுவது அப்பொன்னை மாற்று உயர்ந்ததென்று காட்டுவதற்குத்தானே என்பதை மனத்தில் கொள்ளுவதே தகுதியாகும்.

"சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம்,
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு"

என்பது தமிழ்ப் பொதுமறையல்லவா?

இராமனுடைய சுடு சொற்களைக் கேட்ட சீதாபிராட்டி தன் கற்பினை மெய்ப்பிக்க தானே தீயிடைப்புக நினைக்கிருள். இராமனுடைய குறிப்பும் அதுதானே.

இதை மறந்து மன்றங்களில் விவாதிப்போர் ஏதோ புதிதாகக் கண்டுபிடித்ததுபோல் இராமன் சீதையைத் தீ குளிக்கச் சொன்னதாக வாதிக்கிருர்கள்.

இவர்களுடைய குற்றச்சாட்டுகளுக்கெல்லாம் தக்க விடை தசரதன் (பிதுர்லோகத்திலிருந்து வந்த) பேருரையில் கிடைக்கிறது.

இனி, காப்பிய ரீதியாக இதற்குக் கம்பன் ஏதாவது காரணம் காட்டாது இருப்பானு? இராமனைக் கருணைவள்ளல் என்று கம்பன் சொல்வது தவரு? இப்படி ஏசிப்பேசிச் சீதையைத் தீக்குளிக்க வைத்த இராமன் பெருமைக் குரியவனு? என்பர் சிலர். இராமன் அன்பற்றவனு? கருணையற்றவனு?

கன்னி மாடத்திலே கண்டு, கண்ணிணை ஒன்றையொன்று உண்ணக் காதல் கொண்ட அன்பன் அல்லவா? திருமண நாளிலே இந்த இப்பிறவிக் கிரு மாதரைச் சிந்தையாலும் தொடேன் என்று திருவரம் தந்த தலைவன் அல்லவா? காட்டிற்கு வந்தால் அன்னை ஜானகியின் அந்தளிர்ப்பாதம் நோகுமே என்று கவன்ற காதலன் அல்லவா? காட்டு வாழ்வையும் கவின்மிகு சுவர்க்கபோகம்போல் ஆக்கிய கழிபெருங் கருணையாளன் அல்லவா? சீலம் இன்னதென்று அருந்ததிக்கு அருளிய திருவே என்று சீதையை விளித்தவன் அல்லவா? தேவியின் பிரிவால் சிந்தை கலங்கிச் செய்கை மறந்து புலம்

பியவன் அல்லவா? அவன் சீதையைப் பார்த்துக் கடுஞ்சொல் பேசினன்; அவள் தீயில் விழுமளவும் பார்த்திருந்தான் என்ருல் அதற்கு ஏதாவது காரணமின்றிப் போகுமா?

1. அகலிகை உடலால் தவறிழைத்தும் அவளை 'நெஞ்சினல் பிழைப்பாள்' என்று விசுவாமித்திர முனிவர் கூற இராமனும் அதை ஒப்புக்கொண்ட மாதிரி— கௌதமரிடம் அகலிகையைச் சேர்ப்பித்தான் அல்லவா? அப்படிப் பட்டவர் உடலாலும், மனத்தினுலும் மறுவற்ற கற்புத் தெய்வத்தை ஏசலாமா?

2. மாற்ருன் ஒருவனுக்கு மன அமைதி தர இராமன் அவ்வாறு சொல்வது அழகு. ஆனல், தன்மனைவி என்று வரும்போது "அவள் தூயவள்" என்று, தான் சொன்னல் போதாது. உலகம் ஒப்பும் வகையில் அவள் தூய்மை நிரூபிக்கப்படல் வேண்டும் என்பது இராமனின் உள்ளக் கிடக்கை.

3. சாதாரண நிலையில் சராசரி மனிதனின் நிலை வேறு; நாடாளும் தலைவனின் நிலை வேறு. நாடாளும் தலைவனின் மனைவி சந்தேகங்களுக்கு அப்பாற்பட்டவளாக இருக்க வேண்டும். எனவே, உலகாளும் தசரதகுமாரனுடன் அரியணையில் வீற்றிருக்கவேண்டிய தேவியின் தூய்மை உலகவர் முன் நிரூபிக்கப்பட வேண்டும்.

4. அரசுநீதியிலே இராமன் தலைசிறந்தவன். உற்ருர் உறவினர் என்று பாராமல் நீதி செலுத்துவதில் நிகரற்றவன் இராஜாராமன். இளைய பெருமாளை ஏசி அனுப்பிய பிராட்டி. அதற்குரிய தண்டனையை அனுபவித்தேயாக வேண்டும் என்று சொல்லால் சுடுகிருன் போலும்!

இலக்குவனைச் சீதை ஏசியது இராமனுக்குத் தெரியுமா? எப்படித் தெரிய முடியும்? இலக்குவன் சொன்னனு? என்று சிலர் கேட்கக் கூடும். தன் எதிரே வந்த இலக்குவன் உள்ளத்து உளைச்சலை இராமன் புரிந்துகொண்டு, குறிப்

புணர்ந்து, ''வந்தாய் திறத்தில் உளதன்று குற்றம்'' என்று ஒரே வரியில் சமாதானம் சொல்லி விட்டான். காரணம் புரிந்ததால், அதற்குத் தீர்ப்பளிக்கவே சீதையை இவ்வாறு ஏசினுன் எனலாம்.

மாரீசனின் மாயக்குரல் கேட்டுக் கலங்கிப் பதறுகிருள் பிராட்டி. இளேய பெருமாளோ, ''கார் எனக்கரிய அக்கமலக் கண்ணனே யார் எனக் கருதி இடரில் ஆழ்கின்றீர்?'' என்று சமாதானம் கூறுகிருன்.

''என்றவன் இயம்பலும் எடுத்த சீற்றத்தள்
கொன்றன இன்னலள் கொதிக்கும் உள்ளத்தள்
நின்றநின் நிலேயிது நெறியிற்று அன்றுஎனு
வன்தறு கண்ணினள் வலிந்து கூறுவாள்''

(இராவணன் சூழ்ச்சிப் படலம் 12)

''நீ இன்று இங்கு நிற்பது சரியில்லே; ஒழுங்கு இல்லே,'' என்று பேசினுளே, எப்படிப் பேசினுளாம்—வலிந்து பேசினுளாம். கணவனுக்கு ஆபத்து என்று கற்பனே செய்தாலே கதறிப் புலம்பித் துடிப்பது கற்புடைப் பெண்ணின் இயல்பு ஆகவே அதுதான் பெண்மைக்கு ஏற்றம் தரும். ஆனுல் இளேயவனேப் பார்த்து ஏசியது இயல்பா என்ருல் அது ''வலிந்து'' பேசியது என்ருர் கம்பர். (அவதார நாடகத்திற்காக, ஐயப்பட முடியாத இளவலேயே ஐயுற்ற மாதிரிப் பேசினுள் பிராட்டி.)

''ஒருபகல் பழகினவர் கூட உயிரை ஈவார்களே. பெரு மகன் உலேவுறு பெற்றி கேட்டும் நீ வெருவலே''—என்று சீறியவள் ''என் அயல் நிற்றியோ! இளேய ஒருநீ!'' என்றும் கூசாமல் ஏசுகிருள். (ஒரு நீ—நீ ஒருத்தன் அடா.) ''ஏகாது நிற்றி எனில் யான் நெருப்பிடை வீழ்வன்'' என்று காட்டுத் தீயை நோக்கி ஓடுகிருள். இத்தகைய கொடுமை பிராட்டிக்கு இயல்பானதன்று. அதனுல் தான் வலிந்து கூறிய மாற்றத்தை நினேத்து மறுகுகின்ருள்.

"என்னை நாயகன் இளவலை எண்ணலா;வினையேன்
சொன்ன வாசகம் கேட்டு அறிவிலள் என்னத்துறந்தானே?"

"வஞ்சனை மானின்பின் மன்னைப் போக்கி என்
மஞ்சனை வைதுபின் வழிக் கொள்வாய் என
நஞ்சனை யான் அகம் புகுந்தநான்"

(உருக்காட்டு படலம் 17)

என்று கழிவிரக்கம் கொண்டு புலம்பினாள் தேவி.

இந்த ஏக்கம் தீரவேண்டுமானால் தேவிக்கு ஏதாவது தண்டனை தந்தேயாக வேண்டும். கற்புத் தூய்மையுடைய பேராண்மையாளன் இலக்குவனின் கற்பை ஐயுற்ற உன்னை நானே ஏசுகிறேன்—என்று ஏசினான் இராமன். எரியில் விழுவதாக இளையவனிடம் சொன்னாளே! அந்த எரியை இளையபெருமாளே வளர்த்துத் தரட்டும் என்று நீதி காட்டுகிறான் சாகுத்தன்.

5. சீதைக்குத் தன் நிலைமீது தனக்கே வெறுப்பும் அவநம்பிக்கையும் வந்ததைக் காண்கிறோம்.

"கற்புடை மடந்தையர் கதையில் தான் உள்ளோர்
இற்பிரிந்து உய்ந்தவர் என்னின் யாவரே!"

(உருக்காட்டு—13)

"நிறையிரும் பல்பகல் நீள் நகர்ச்
சிறையிருந் தேனை அப்புனிதன் தீண்டுமோ?"

(உருக்காட்டு—11)

"பிறன்மனை எய்திய பெண்ணைப் பேணுதல்
திறன் அல தென்றுயிர்க்கு இறைவன் தீர்ந்தனன்
புறன் அலர் அவனுறப் போது போக்கியான்
அறன் அலது ஆற்றுவேன் என்கொண்டு ஆற்றுகேன்"

(உருக்காட்டு—14)

''துன்புஅழி பெரும்புகழ்க் குலத்துள் தோன்றினேன்
என்பழி துடைப்பவர் என்னின் யாவரே!''

(உருக்காட்டு—16)

''கருந்தனி முகிலினைப் பிரிந்து கள்வர் ஊர்
இருந்தவள் இவள்என ஏச நிற்பனோ?''

(உருக்காட்—19)

''அற்புதன் அரக்கர்தம் வருக்கம் ஆசஅற
விற்பணி கொண்டருஞ் சிறை மீட்ட நாள்
இற்புகத் தக்கலை என்னில் யானுடைக்
கற்பினை எப்பரிசு இழைத்துக் காட்டுகேன்?''

(உருக்காட்டு—20)

இந்தப் பாடல்கள் தேவியின் மன உளைச்சலை நன்கு சித்த ரிப்பன. தேவி நிலையில் எந்தக் கற்பரசி இற் பிரிந்திருந்தா லும் இதே ஏக்கம் உள்ளத்தில் எதிரொலிக்கத்தான் செய்யும். அவளது ஆத்ம திருப்திக்காகவேனும் அவளைத் தூயவள் என்று உலகம் காணச் செய்யவேண்டும் என்பது இராமனின் கொள்கை. தன் பழி துடைக்கத் தானே முன் வந்து தீயில் விழத் துடிக்கின்றாள் தேவி. காகுத்த வேடம் காட்டி வந்த கருணை முகிலுக்குத் தெரியாதா—சீதையின் கற்புத் தூய்மை எரியும் கனலை எரிக்கும் என்பதும், எரியும் அங்கியைக் குளிரச் செய்யும் என்பதும் புரியாதா? எல்லாம் தெரிந்தும் நடிக்கிறதுதான் அழகு!

தன் மனைவிக்கும் தம்பிக்குமாயினும் நீதி செலுத்தி விட்ட திருப்தி இளையபெருமாளை ஏசியதற்குத் தண்டனை பெற்று, தன் கற்பையும் உலகமும் தேவரும் ஒருமிக்க உணர்ந்து கொள்ளும் திருப்தி, இவை எல்லாம் கிடைக்கவே இந்த நாடகத்தை நடத்துகிறான் அவதார மூர்த்தி. தீக் குளிக்க அவனாகக் கட்டளையிடவில்லை. பிராட்டி வாயினாலே 'இளையோய், இடுதி தீ!' என்று கேட்க வைத்து—கண்ணாக சாடைகாட்டி இலக்குவனைத் தீ மூட்டித் தர வைக்கிறான்.

பின்னால் யாராவது இராமன் 'கொடுமைக்காரன்' என்று பேசக்கூடாது என்பதற்காகவே,

"கற்பினுக் கரசினைப் பெண்மைக் காப்பினை
பொற்பினுக் கழகினைப் புகழின் சேக்கையைத்
தற்பிரிந் தருள்புரி தருமம் போலியை
அற்பின் அத்தலைவனும் அமைய நோக்கினான்

(மீட்சி—60)

(அற்பின்—அன்பின்—அன்பினால், அன்போடு—
அமைய—பொருந்தி, பொருள் பொதிந்து)

இதுதான் கம்ப சித்திரம் என்பது. அமைய நோக்கி, அன்போடு நோக்கி, 'உன்பழி துடைத்து, உன்புகழ் காக்க இது நடக்கிறது' என்று பொருள் கொள்ளச் செய்தான் எனலாம்.

தசரதனும், மூவராம் தேவரும் வந்து பாராட்டிப் பேசப் பொன்னின்—மாற்றை உயர்த்திக் காண்பித்துப் பலரது மன உளைச்சலைத் தீர்த்த நாடகம் இது. அவதார மூர்த்தி அர்த்தமின்றிச் செய்த கொடுமையன்று.

# 10. "இன்னல்செய் இராவணன் இழைத்த தீமை"

ஆனந்த விகடன் பத்திரிகையில் நான் இலக்கிய ஆசிரியனாக இருந்தபோது இராவண காவியம் என்னும் நூலொன்று திறனாய்வுக்கு வந்தது. ஆசிரியர் அரிச்சந்திர புராணம் என்ற சிறு நூலின் செய்யுள் நிலையைப் பின்பற்றித் தம் புதுமைக் காவியத்தை எழுதியிருந்தார். தம்மை, குழந்தைவேலர் என்ற பெயரால் அறிமுகம் செய்து கொண்ட இவர் இராவண பக்தர்களில் ஒருவர். ஸ்ரீராமன் வடநாட்டான் என்றும் திரு இராவணனார் தென்னாட்டினர் என்றும் அந்த இளம் பண்டிதர் தெரிவித்தார்.

ஆனந்த விகடன் விமர்சனம் ஒரே வாக்கியத்தில் முடிந்தது. 'குழந்தைதானே, வளர இடமுண்டு' என்ற இரத்தினச் சுருக்கமான வாக்கியந்தான் அது.

இத்தகைய இளம் பண்டிதர்கள் இந்நாட்டுக்கு ஒரு புதுமையல்லர். பொதுவாக, இராவணன் சென்ற வழி சரியானதுதான், தவறானதன்று என்னும் கொள்கை உடையவர்கள் சிலர் இருக்கின்றனர். அதனால் இவர்கள் இராவணன் வழியைப் பின்பற்றுகிறவர்கள்.

ஆனால் கம்பன், இராவணன் வழியை 'வழியலா வழி' என்கிறான். இராவணன் தவறுகளுக்கெல்லாம் காரணம் அவன் வழியலா வழியில் சென்றதுதான்.

இராவணன்மீது குற்றப் பத்திரிகை வாசித்த இலட்சுமணன் சொல்லுகிறான்.

தேசியைச் சிறையில் வைத்தான்; தேவரை இடுக்கண் செய்தான்,
பூசுரர்க்கு அலக்கண் ஈந்தான்; மன்னுயிர் புடைத்துத்தின்ருன்;
ஆசையின் அளவும், எல்லா உலகமும் தானே ஆள்வான்;
வாசவன் திருவும் கொண்டான்; வழிஅலா வழிமேல் செல்வான்.

1. இராவணன் செய்த தவறுகளில் நிகரற்ற தனிப் பெருந்தவறு சீதையை வஞ்சித்துச் சிறைப் பிடித்தது.

2. வெகு காலமாக தேவர்களுக்குத் துன்பம் விளைவித்தான்.

3. சாதுக்களான அந்தணர்களுக்குத் தீங்கு செய்தான்.

4. உயிர்களைக் கொன்று தின்று வந்தான்.

5. இவன் ஆசைக்கு வரம்பேயில்லை.

6. எல்லா உலகங்களையும் தானே ஏகசக்கராதிபதியாகவும், சர்வாதிகாரியாகவும் ஆண்டு வந்தான்.

7. இந்திரனுடைய செல்வங்களையும் அபகரித்துக் கொண்டான்.

இவனுடைய பஞ்ச சேனுதிபதிகளோ [படைத்தலைவர் ஐவரும்] வழியலா வழியில் ஓடினுர்கள். இவர்கள் கொடுமைக்கு அனுமன் ஒரு முடிவு கட்டுகிருன். அப்பொழுது இவர்களுக்குச் சரம சுலோகம் எழுதி வாசித்தது போல் கம்பன் ஒரு பாட்டு அமைத்திருக்கிருன்:

''வஞ்சமும் களவும் வெ:.கி, வழிஅலா வழிமேல் ஓடி,
நஞ்சினும் கொடியர் ஆகி நவை செயற்கு உரிய நீரார்,
வெஞ்சின அரக்கர் ஐவர்; ஒருவனே,- வெல்லப்பட்டார்
அஞ்சு எனும் புலன்கள் ஒத்தார்; அனுமனும், நல்அறிவை
ஒத்தான்.'

இவர்கள் இராஜ தந்திரம் என்பது வஞ்சனைதான். திக்விஜயம் செய்து நாடு பிடித்தது களவுதான். இராவணன்

வழிஅலா வழிமேல் சென்ருன் என்ருல், இவர்களோ ஓடிக் கொண்டிருந்தார்கள். எனவே இவர்கள் படுகுழியில் இராவணனுக்கு முந்தியே விழுந்து விடுகிருர்கள்.

சிறந்த இராவண பக்தர்களான பஞ்ச சேனுதிபதிகளை கம்பராமயணம், மேலும்,

'பால் நிறத்து அந்தணன் பணியன் ஆகி, நின்
கோல் நினைத்திலன்' என; உலகம் கூறலும்,
நீல் நிறத்து இராவணன் முனிவு நீக்குவான்,
காலனைக் காலினில், கையில், கட்டினர்.,

(பஞ்ச சேனுபதிகள்—22)

அந்தணர்களின் மூலப் புருஷனுன பிரம்மதேவன் பால் போன்ற வெண்ணிற மேனியன். அவனது கட்டளைகளுக்கு இணங்கி எமதர்மன் உயிர்களைக் கொண்டு போகிருன் என்பது ஐதிகம். அவன் இராவணனுக்குப் பயந்திருந்த போதிலும் தன் கடமையினைத் தவருமல் செய்து வந்தான்.

இராவணனுடைய ஒற்றர்கள் (மூன்று உலகங்களிலும் சஞ்சரிப்பவர்கள்) இராவணனிடம் வந்து, ''காலன் உன் அதிகாரத்தை ஒப்புக் கொள்ளவில்லை என்று தோன்றுகிறது. இல்லாவிட்டால் அரக்கர்கள் சாவார்களா?'' என்கிருர்களாம். இதையெல்லாம் பஞ்ச சேனுபதிகள் கேள்விப் பட்டார்கள். உடனே இது மெய்யா பொய்யா என்பதைத் தெரிந்து கொள்ளாமல் காலனுடைய உலகத்திற்கு ஓடிப் போய் எமனுடைய காலினையும், கைகளையும் கட்டிப் போடுகிருர்கள். ஏன் முதலில் காலினைக் கட்டுகிருர்கள் என்ருல் காலன் என்ற பெயரிலிருந்து பளிச்சென்று தோன்றிய ஞானேதயம்தான்!

இவ்வாறு இவர்கள் செய்ததை இராவணன் கேள்விப் படலாமல்லவா? அதற்குச் சமாதானமாக இவர்கள் 'அவன் (பிரம்மா) தோல் வெளுப்பாம், உன் தோல் கறுப்பாம்' என்று சொல்லுகிருர்கள்.

இவர்களே இப்படியென்றால் இவர்கள் தலைவன் எப்படியிருப்பான்? இவர்கள் செயல் இராவணனின் அதிகாரம் பலம் எவ்வளவு தூரம் பரவியிருக்கிறது என்பதைத் தெளிவாகக் காட்டுகிறது.

இனி இராவணன் மேலுள்ள குற்றச்சாட்டுகளை ஆதாரத்துடன் தொடர்ந்து காண்போம்.

## 1. வேதவதியும் இராவணனும்

வேதவதி இராவணனுக்குச் சாபம் கொடுத்தவள். முதலில் வேதவதியின் பெயரைச் சொல்லாமலே அவளைத் தீயினில் குளித்த தெய்வக் கற்பினள் என்று சுட்டிக் காட்டுகிறான். இது விபிஷணன் வாக்காக வருகிறது.

''தீயிடைக் குளித்த அத் தெய்வக் கற்பினாள்
வாயிடை மொழிந்த சொல் மறுக்க வல்லமோ?
''நோய் உனக்கு யான்'' என நுவன்றுளாள் அவள்;
ஆயவள் சீதை, பண்டு அமுதின் தோன்றினாள்''

அவளுடைய வாய்மொழியைப் புறக்கணிக்க முடியுமா, 'நோய் உனக்கு நான்' என்றாள் அவள். அவளே இன்று 'பாற்கடலில் அமிழ்துடன் பிறந்த மகாலட்சுமியின் அம்சமான சீதா பிராட்டி! எனவே அவளை விட்டுவிட வேண்டும்' என இராவணனுக்கு வீடணன் எச்சரிக்கின்றான்.

மேலும்,

''மீனுடை நெடுங்கடல் இலங்கை வேந்தன்முன்
தானுடை நெடுந்தவம் தளர்ந்து சாய்வது, ஓர்
மானுட மடந்தையால்'' என்னும் வாய்மொழி
தேனுடை அலங்கலாய்!—இன்று தீர்ந்ததோ?''

(இரா. மந்திரப்படலம்—77)

இலங்கை வேந்தனின் பெருந்தவம் தளர்ந்து சாய்வது ஒரு மானிடப் பெண்ணால்'என்ற வாய்மொழி இன்று பலித்து விட்டதோ என்பது இப்பாடலின் பொருள். மானுடமடந்தை யால் என்பது சீதாபிராட்டியைக் குறிப்பிடுகிறது.

இந்தச் சாபத்தைக் கொடுத்தது வேதவதி.

பின்னர் இராவணன் வதைப்படலத்தில் வேதவதியின் பெயரைக் குறிப்பிட்டு விபிஷணன் புலம்புகிறான்.

''அன்று எரியில் விழுவேத வதி இவள்காண்;
உலகுக்கு ஓர் அன்னை'' என்று,
குன்று அனைய நெடுங்தோளாய்! கூறினேன்;
அது மனத்துள் கொள்ளாதே போய்,
உன்றனது குலம் அடங்க, உருத்து அமரில்
படக்கண்டும், உறவு ஆகாதே
பொன்றினையே! இராகவன் தன்புயவலியை
இன்று அறிந்து, போயினையோ!

(இராவ. வதை 220)

இவ்வாறு நான் கூறியதைக் கேட்காமல் இராமன் அம்புக்கு இன்று இரையாகி விட்டாயே என்று புலம்பு கிறான். இங்கு வேதவதியின் பெயரைக் குறிப்பிடுகிறான்.

இப்பாட்டில் வரும் வேதவதி கதையின் விவரம் வருமாறு;

வேதவதி ஒரு பெண் ரிஷி. மற்றப் பெண்களைப் போல பிறந்தவளல்லள். ஒரு மகரிஷி ஒருவர் வேதகானம் செய்து கொண்டிருந்தபோது அந்த ஒலியே ஒரு பெண்ணுருக் கொண்டது. விண்ணிலும் மண்ணிலும் உள்ள பேரரசர்கள் இவளைப் பாணிக்கிரகணம் செய்து கொள்ள வந்தார்கள்; இவள் மறுத்துவிட்டாள்.

ஓர் அரக்கன் அந்த மகரிஷியைக் கொன்று விட்டான். வேதவதி தந்தை யிழந்து அனாதையானாள். இவள் ஒரு

காட்டில் தவம் செய்து கொண்டிருந்தபொழுது இராவணன் கண்டு காம வெறி கொண்டு இவளை அபகரிக்க முயன்ருன். அவள் இராவணனை நோக்கி உன் அழிவுக்கு நானே காரணமாவேன்' என்று 'சாபம் கொடுத்துவிட்டுத் தீக் குளித்தாள். பின்னர் அவளே சீதையாக கொழுமுகத்தில் தோன்றுகிருள்.

இராவணனுடைய பெருந் தவறுகளில் ஒன்று வேத வதியைக் கெடுக்க முயன்றது.

இந்திரனுடைய செல்வங்களை யெல்லாம் அபகரித்து அவனைச் சிறையிலிட்டான். மூன்று லோகங்களையும் அடிமைப்படுத்தி ஆண்டு வருகிருன். தேவர்களுக்குச் சொல்ல வொண்ணுத துயரத்தினை அளித்து வருகிருன். கயிலையங்கிரியையே தன்னை அப்பால் செல்லவிடாமல் தடுக்கிறது என அதைப் பெயர்த்து எடுக்க முயன்றவன் மற்றவர்களுக்கு எவ்வளவு தீவினை செய்திருப்பான்?

இவனுடைய குற்றங்களிலெல்லாம் சிகரமாகக் காண் பது சீதையை வஞ்சித்து அபகரித்தது. இதைத்தான் இலட்சுமணன் கூட முதல் குற்றச்சாட்டாக 'தேசியை சிறையில் வைத்தான்' என்கிருன்.

சீதையைக் கவர்ந்து வருவதற்கு மாரீசனைப் பயன் படுத்திக் கொள்ளலாம் எனக் கருதி அவன் தனியாக இருந்த இருப்பிடத்திற்கு வருகிருன்.

இராவணனைக் கண்ட மாரீசன், நெஞ்சு பதற வந்த காரியத்தை வினவுகிருன்.

சீதையை அபகரிக்க உன் உதவி வேண்டி வந்தேன் என்றுரைத்த இராவணனுக்கு, 'மாரீசன் தனக்குள்ளிருந்த' இராம பயத்தை வெளிக் காட்டாமல் அவனுக்கு நல்லறிவு புகட்டுகிருன்.

'அந்தரம் உற்ருன், அகலிகை பொற்பால் அழிவுற்ருன்,
இந்திரன் ஒப்பார் எத்தனையோர் தாம் இழிவுற்ருர்;
செந்திரு ஒப்பார் எத்தனையோர் நின்திரு உண்பார்;
மந்திரம் அற்ருர் உற்றது உரைத்தாய்; மதி அற்ருய்

(மாரீச வதை—12)

சொர்க்கவாசியான தேவேந்திரன் அகலிகை அழகைக் காதலித்துக் கௌதமரால் சபிக்கப்பட்டு அழிவடைந்தான். அப்படிப்பட்ட தேவேந்திரனை ஒத்தவர்கள் இன்னும் எத்தனையோ பேர் இதுபோல் இழிவினையடைந்தார்கள். இலட்சுமியைப் போல் அழகு வாய்ந்த எத்தனையோ பெண்கள் உன் செல்வத்தை அனுபவித்துக் கொண்டு இருக்கிருர்கள். அப்படியிருக்க நீ சரியான மந்திராலோசனை தெரிந்தவர்களின் புத்திமதியைக் கேட்காமல் மதியீனத்தால் இவ்வாறு உனக்குத் தோன்றியதைச் சொல்லுகிருய். மேலும் விராதன் கதியை மறந்து விட்டாயோ என்று தொடர்கின்ருன்.

''வெய்யோர் யாரே, வீர விராதன் துணை வெய்யோர்?
ஐயோ! போனுன், அம்பொடும், உம்பர்க்கு அவன்என்ருல்
உய்வார் யாரே நம்மில் எனக்கொண்டு, உணர்தொறும்
நையா நின்றேன்; நீ இது உரைத்து நலிவாயோ''

(மாரீச வதை—15)

விராதன் முடிவைக் கேள்விப்பட்டதும் அய்யோ பாவம் என்று ஒரு சொட்டுக் கண்ணீர் விடுகிருன். அவனுல் இராமனுக்கு அம்பு ஒன்றுதான் நஷ்டம். விராதன் கதி இதுவென்ருல் நம்மவரில் யார் பிழைத்திருக்கப் போகிருர்களோ என்று நெஞ்சு நைந்து என்னைப் படாதபாடுபடுத்து கிறது. நீ இப்படிச் சொல்லி துன்பத்துக்கு ஆளாவாயோ? என் தம்பி சுபாகுவுக்கும் என் அன்னை தாடகைக்கும் சாவு ஏற்படும்படி அம்பு போட்ட வில்வீரனுன இராமனுக்கும், அவனுக்குத் துணையாக வந்திருக்கும் அவன் தம்பிக்கும்

என் ஆண்மை தோற்றுத் தளர்ந்து போனேன். என் நெஞ்சு இராமனை நினைத்துக் கவலைப்பட்ட வண்ணமாய் இருக்கிறது. இப்படிச் சொல்லிக் கொண்டே, போலி வேதாந்தம் பேசிப் புத்திசாலியான மருமகனைச் சரிப்படுத்தி விடலாமா என்று பார்க்கிறான்.

"நின்றும், சென்றும், வாழ்வன யாவும் நிலையாவால்;
பொன்றும்" என்னும் மெய்ம்மை உணர்ந்தாய்; புலைஆடற்கு
ஒன்றும் உன்னாய்; என்உரை கொள்ளாய்; உயர் செல்வத்து,
என்றும், என்றும், வைகுதி; ஐயா இனி என்றான்.

நிற்கும் தாவரங்களும், செல்லும் விலங்கினங்களும் நிலைத்திருப்பன அல்ல. அவைகளுக்கெல்லாம் அழிவு நிச்சயம் என்பது உனக்குத் தெரியாததா என்ன, இழிவு செயல்கள் ஒன்றையும் நினைக்காதே, என் வார்த்தையைக் கேட்பாய், உயர் செல்வத்தில் என்றென்றும் வாழ்க என்று வாழ்த்துகிறான்.

உடனே இராவணன் பெருங்கோபத்துடன், 'சிவபெருமான் வசிக்கும் கயிலைமலையினையே ஒரு கையால் எடுத்த என்னைக் கேவலம் ஒரு மனிதனுக்குத் தாழ்வாகப் பேசுகின்றாயே, என் அருமைத் தங்கையின் மூக்கை அரிந்தவர்களைப் புகழ்ந்து பேசுகின்ற உன்னுடைய பிழையைப் பொறுத்துக் கொள்கிறேன்' என்கிறான்.

இது கேட்ட மாரீசன் இராவணனை உய்விக்க எண்ணி மேலும் அறிவுரை கூறுகிறான்.

தன்னை முனிவுற்ற தறுகண் தகவிலோனை,
பின்னை முனிவுற்றிடும் எனத் தவிர்தல் பேணான்,
'உன்னை முனிவுற்று உன் குலத்தை முனிவுற்றாய்;
என்னை முனிவுற்றிலை; இது என்?' என இசைத்தான்.

நீ எனக்கு மட்டும் அழிவினைத் தேடித் தரவில்லை; உனக்கும் உன் குலத்திற்கும் சேர்த்துத்தான் தேடிக் கொள்கிறாய்.

யாதும் அறியாய்; உரைகொளாய்; இகல்இராமன்
கோதை புனையாமுன், உயிர் கொள்ளைபடும் அன்றே;
பேதை மதியால், ''இஃது ஓர் பெண் உருவம்'' என்றாய்;
சீதை உருவோ; நிருதர் தீவினை அது அன்றோ?

(மாரீச வதை—23)

சீதையைப் பெண் உருவம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறாய், 'இல்லை; அது அரக்கர் தீவினைப் பயன், நஞ்சை உண்பவர்களை இது நல்லது என உற்சாகப்படுத்த எனக்குத் தெரியாது' நீ திருந்திவிடு என இவ்வாறு புத்தி புகட்டுகிறான் மாரீசன்.

உடனே இராவணன்,

'மறுத்தனை எனப் பெறினும் நின்னை வடிவாளால்
ஒறுத்து மனம் உற்றது முடிப்பேன்; ஒழிகல்லேன்'

'நீ மறுத்தால் உன்னைக் கொன்றுவிட்டு அப்பால் என் காரியத்தை முடித்துக் கொள்வேன்' என்கிறான்.

மாரீசன் இதற்குப் பயந்து இராவணனால் சாவதைவிட இராமன் அம்பால் அழிவதே மேல் என்று எண்ணமிட்டவனாய் இராவணனுக்கு உடன்படுகிறான்.

இவ்வாறு தன்னுடைய ஆசை வெறிக்கு இராமயாணத்தால் ஏற்கனவே அடிபட்டு திருந்திய மாரீசனை முதல் பலியாக்குகிறான்.

சீதையைக் கவர்ந்து வர ஓர் சதித் திட்டம்:

இராவணன் மாரீசனோடு சமாதானமாய்ப் பேசுகிறான். மாமா, மன்மத பாணத்தால் துளைக்கப்பட்டுச் சாவதைவிட இராமன் அம்பால் சாவதே எனக்குப் புகழ் என்கிறான்.

இவனே புத்திசாலியாகத் திட்டமிடக் கூடியவன்; அப்படியிருந்தும், ''நான் என்ன செய்ய வேண்டும்'' எனக்

கேட்கிறான். அதற்கு இராவணன் நீ பொன் மானாகப் போய் பொன் போன்ற சீதையை மயங்கச் செய்ய வேண்டும் என்கிறான்.

சீதை பொன்மானைக் கண்டு ஆசைப்பட்டு அதைப் பிடித்துத் தரும்படி இராமனை வேண்டுகிறாள்.

இராமன் இலட்சுமணன் செய்த எச்சரிக்கையை மீறி மானைப் பிடித்து வரச் சொல்லுகிறான். நெடுந்தூரம் போன பின் இது மாயமான் என்பது தெளிவாகிறது. உடனே தன் அம்புக்கு அதனை இரையாக்குகிறான். மாரீசன் சாகும்போது சீதாதேவியின் பெயரையும், இலட்சுமணன் பெயரையும் சொல்லிக் கூப்பிடுகிறான்.

இது கேட்ட சீதை இலட்சுமணனை ஏசி இராமனுக்குத் துணையாக அனுப்பி விடுகிறாள்.

இலட்சுமணன் பர்ணசாலையைவிட்டு நீங்கியதும், இராவணன் முக்கோல் என்ற திரிதண்டம் தரித்து வயது முதிர்ந்த சந்நியாசியாக வேடம் பூண்டு சீதை முன் தோன்றுகிறான்.

சீதை துறவியை எதிர்கொண்டு உபசரிக்கிறாள். அவளைக் கண்ணுற்றதும் இராவணன் ஏங்கிப் போகிறான்.

கொடுந் தொழில் புரியும் அரக்கனைக் கண்டதும் சுற்றுப்புறங்கள் எவ்வாறு மாறுபட்டன என்பதைக் கம்பன் அழகாக விளக்குகின்றான்.

'நடுங்கின, மலைகளும் மரனும்; நா அவிந்து
அடங்கின பறவையும்; விலங்கும் அஞ்சின;
படம் குறைந்து ஒதுங்கின பாம்பும்;—பாதகக்
கடுந்தொழில் அரக்கனைக் காணும் தண்ணினே'

(இரா. சூழ்ச்சி—35)

இந்தப் பாட்டு உலக மகாகவி மில்டன் வாக்கை நினைவூட்டுகிறது.

சீதா பிராட்டி கவடில்லாத குழந்தை உள்ளத்தோடு "தேவரீர் யார்?" என்றதும், "நான் புதியவன், இந்த இடத்தைப் பற்றி அறியாதவன்" என்று பதில் சொல்லு கிருன்.

உடனே சீதை, "நான் தசரத சக்கரவர்த்தியின் புதல்வ ஞன (சக்கரவர்த்தித் திருமகனின்) வாழ்க்கைத் துணைவி, என் கணவர் தாயான கைகேயியின் சொல்லைச் சிரமேற் கொண்டு தம்பி இலட்சுமணனேடு இந்த இடத்தில் வசிக் கிருர்" என்கிருள்.

"நான் கேள்விப்பட்டிருக்கிறேன், பார்த்ததில்லை. அயோத்திக்கு ஒரு தடவை வந்திருக்கிறேன். இந்தக் காட்டிலே பொழுது போக்கும் நீர் யாவர் மகள்?" எனக் கேட்கிருன்.

"உம்மைப் போன்ற பெரியவர்களைத் தெய்வமாக மதிக்கும் சனக மகாராஜாவின் மகள். என் பெயர் சானகி. பின்னர் நீர் எங்கிருந்து வருகிறீர்?" என வினவு கிருள்.

"நான் இலங்கையிலிருந்து வருகிறேன்" எனச் சொல்லி விட்டு இலங்கையின் செல்வம், வளம், அழகு முதலியவற்றை வருணிக்கிருன்.

இந்திரனுக்கு 'இந்திரன், சித்திரத்தில் எழுதவொண் ணுத சுந்தரன், நான்முகன் மரபினன், மாமறைச் சுருதி பயிலும் நாவினன், கயிலையங்கிரியை வேரொடு பறிக்கும் ஆற்றல் உடையவன், எட்டு திசைகளிலும் உள்ள யானை களின் கொம்புகளை முறித்துப் பொடித்தவன், தேவர்களை தன் ஆட்சிக்கு உட்படுத்தி வைத்திருப்பவன், உலகத்திலுள்ள பொருள் அனைத்தும் நிறைந்திருக்கும் இலங்கை மாநகரினைத் தன்னுடைமையாகக் கொண்டவன், வரத்தால் முடிவு இல்லாத வாழ்க்கையினைப் பெற்றிருப்பவன், சங்கரனர்

கொடுத்த வாளினைக் கைக் கொண்டவன், மேன்மையான குணவான், விரிந்த கல்விக் கேள்விகளை உடையவன், செம்மையோன், மன்மதன் திகைக்கும் அழகுடையவன், உலகிலுள்ள அழகியர் எத்தனையோ பேர் அவனை நினைத்து உருகிக் கொண்டிருக்க, இவன் தன் மனத்திற்கு இசைந்த மாதைத் தேடிக் கொண்டிருக்கிறான் என இலங்கேஸ்வரன் பிரளாபங்களை விவரிக்கிறான்.

இத்தகைய பெருமையுடைய இலங்கையில் நான் சில தினங்கள் தங்கியிருந்தேன். பிரிய மனமில்லாமல் திரும்பி னேன் என்கிறான்.

உடனே சீதை "வேதத்தையும், வேதியர் அருளையும் விரும்பும் நீர் மன்னுயிர் தின்னும் பாதக அரக்கர்களின் நகரில் தங்குவதற்குக் காரணம் என்ன? வனத்திலே தவசி களோடு வசிக்காமல், புண்ய நதி தீரங்களில் உள்ள நகரங் களிலும் தங்காமல், அறநெறியையே நினைக்காத இனத்த வரிடையே ஏன் தங்கினீர்?" என்கிறாள்.

அதற்குச் சந்நியாசி, "அரக்கர்கள் தேவர்களைக் காட்டிலும் கொடியவர்கள் இல்லை" என்றதும், "அப்படி யானால் தீயவரைப் புகழ்வோர் நல்லவர் அல்லர்" என் கிறாள்.

மாய வல்லரக்கர்கள் வேண்டும் உருவம் எடுக்கக் கூடியவர்கள் என்பதை இவள் உணரவில்லை. எனவே வேறொன்றை எண்ணி இவள் நம்மைச் சந்தேகிக்கிறாள் என அவள் மனம் திரும்பும்படி மேலும் பேசுகின்றான்.

"வல்லவர்கள் தங்கள் இயற்கை நெறியில்தான் இருப் பார்கள். வேறு என்ன நெறியிருக்கிறது அவர்களுக்கு?" என்றதும், பயந்துதான் இவ்வாறு சந்நியாசி பேசுகிறான் என நினைத்து சீதா பிராட்டி, "அரக்கர்கள் பூண்டோடு அழியும் நாள் விரைவில் வந்துவிடும் பயப்படாதீர்!" என்கிறாள்.

மானிடர் அரக்கர்களை வெல்வார்கள் என்பது யானை இனத்தை இள முயல்கள் கொல்லுவதைப் போலவும், சிங்கக் கூட்டத்தை மான் கொன்றுவிடும் என்பது போலவுந்தான் என இவ்வாறு சந்நியாசி சொல்லவும், விராதனும், கரன் முதலானோர்களும் அழிந்தார்களே அந்தச் சண்டை ஒன்றை யும் நீர் கேட்டதில்லை போலும் என, மேலும்,

வாள் அரி வள்ளல்; சொன்ன மான் கணம் நிருதரானோர்!
கேளொடு மடியுமாறும், வானவர் கிளருமாறும்,
நாளையே காண்டிர் அன்றே; நவை இலிர், உணர்கிலீரோ?
'மீள அருந்தருமம் தன்னை வெல்லுமோ பாவம்?'

இவ்வாறு சொல்கிறாள்.

இது கேட்ட இராவண சந்நியாசி தன் மானமே போய் விட்டது எனச் சீறியவண்ணம், "யார் எனக் கருதிச் சொன்னாய்? இராவணற்கு அரிது என்?" என்று கோபா வேசத்துடன் பேசவே அவன் மாயவேடமும் கலைந்தது.

'இவன் உண்மையான துறவியில்லையே இவன் யாரோ?' என்று தெரியாமல் எமனைக் கண்ட உயிர் போல் என் செய் வது என்று நடுங்கிக்கொண்டு நிற்கிறாள்.

'மண்ணில் வாழும் புழுவைப்போன்ற மானிடர் வலியவர் என்று சொன்ன நீ பெண்ணானதால் பிழைத்துப் போகிறாய். உன்னைப் பிசைந்து தின்ன எண்ணுகிறேன். ஆனால் நீ உயிரிழந்தால் நானும் உன் நினைவால் உயிரிழந்து விடுவேன். நீ பயப்படாதே அன்னமே! இதற்கு முன் எவரையும் கும் பிட்டு அறியாத என் பத்து கிரீடங்களாலும் உன்னைத் தாங்கு வேன். உனக்கு அரம்பையர் முதலான பெண்களை அடிமை யாகக் குற்றேவல் புரியும்படி செய்வேன். பதினாலு உலகங் களையும் ஆளும் என்னுடைய செல்வத்தை நீ அனுபவிப்பாய்' என்கிறான்.

[பிறர் மனைவி என்பதை கருதாது தன்னுடைய பெருமை களைக் கூறி அவளைப் பகட்டி மயக்கப் பார்க்கிறான்.]

இது கேட்ட சீதை வீராவேசத்துடன் 'ஒழுக்கம் நோக்காமல் வேள்வித்தீயில் தேவர்களுக்கு அர்ப்பணம் செய்யும் அவியுணவை நாய் விரும்பினாற்போல என்ன சொன்னாய் அரக்கனே, நான் என் உயிரை இழந்தாலும் நல்குடிப் பிறப்பை இழப்பேனா என்ன? இராமபாணம் உன் உயிரைக் குடிப்பதற்கு வருமுன் உன்னைக் காப்பாற்றிக் கொள்ள ஓடிப் போய்விடு' என்கிறாள்.

'உன் கணவன் அம்பு என் மார்பில் பாய்வதற்கு வந்தால் அது குன்றைத் தகர்ப்பதற்கு எய்த மலர்க்கணையைப் போல் ஆகிவிடும்! என் ஆசை நோய் அகத்திலே பொங்க வருந்தும் எனக்கு உயிர்ப்பிச்சை கொடுத்து, தேவ மகளிர்க்கெல்லாம் எட்டாத பதவியில் வீற்றிருப்பாய்' என்று தலைவணங்கிப் பித்தன் போல் பிதற்றுகிறான்.

இவ்வாறு இராவணன் தலைவணங்கியதும் "இறைவா! இளையோய்!" என ஆவி கலங்கியவளாய் ஏங்குகிறாள்.

அப்போது அக்கொடியவன் இவளைத் தொடாமலேயே பர்ணசாலையோடு பெயர்த்துத் தன் தேர்மீது வைத்துக் கொண்டு வான் வழியாகப் புறப்படுகிறான்.

சீதை நெருப்பில் விழுந்த பூங்கொடி போல் துடித்தும் புரள்கிறாள்.

மலையே! மரனே! மயிலே! குயிலே!
கலையே! பிணையே! களிறே! பிடியே!
நிலையா உயிரே? நிலைநேடினிர் போய்,
உலையா வலியாருழை நீர் உறையீர்!

(இரா. சூழ்ச்சி 75)

மலை, மரம், மயில், குயில்முதலானவற்றையெல்லாம் பார்த்து நீங்கள் என் நிலையை ஆற்றல் மிகுந்த என் கணவரிடம் தெரிவியுங்கள் என்றும்,

கோதாவரியே! குளிர்வாய், குழைவாய்!
மாதா அனையாய்! மனனே தெளிவாய்;
ஓதாது உணர்வாருழை, ஓடினை போய்,
நீதான் வினையேன் நிலை சொல்லலையோ

(இரா. சூழ்ச்சி 78)

இழே கோதாவரி ஆற்றைப் பார்த்ததும் நீயாவது என் நிலையை ஓதாது உணர்ந்து கொள்ளக்கூடிய என் கணவரிடம் சொல்வாயோ என்றும்,

மலை ஊற்றுகளே! குகைகளில் வாழும் சிங்கங்களே! இந்த இராவணனுடைய இருபது கைகளும் பத்து தலைகளும் மண்ணில் சிதறுவதைக் கண்டு சிரிப்பீர்கள் என்று இவ்வாறு தனக்கு முன் தோன்றியவைகளையெல்லாம் கூறிக் கதறுகிறாள்.

இவள் கதறலையும் புலம்பலையும் கேட்டுச் சற்றும் இறங்காதவனாய் அவளைப் பரிகசிக்கிறான்.

"பொய்மானை அனுப்பி உனக்குக் கூற்றுவனாக அமைந்த என் கணவரை அப்புறப்படுத்தி என்னைத் தனிமை செய்து கவர்ந்து வந்து விட்டாய். அவரைப் போரிட்டு உன்னால் வெல்ல முடியுமானால் உன் தேரை நிறுத்து. கரன் முதலான உன் அரக்கர் கூட்டத்தை அழித்ததையும், உன் தங்கையை அங்கபங்கம் செய்ததையும் கேள்விப்பட்டவுடனே நீ போருக்கல்லவா வந்திருக்கவேண்டும். இப்படித் திருட்டுத்தனமாய்க் கவர்ந்து செல்வது அவர் மீதுள்ள அச்சந்தான்!" என்று இடித்துரைக்கிறாள்.

அதற்கு அவனோ இழிவான மனிதரோடு நான் போரிட்டேன் என்றால், கைலயங்கிரியைக் குலுக்கி எடுத்த என் தோளுக்குப் பழிதரும்; எனவே வஞ்சனைதான் சாலச் சிறந்தது என்கிறான்.

"குலப் பகைவர்களான மனிதர்களிடம் போரிடுவது குற்றம் என்றால் அவர்களோடு வாளெடுத்துச் சண்டை

செய்வது நாணம் என்றால், கற்புடைய மகளிரைக் கவர்ந்து செல்வதுதான் வீரமோ, இரக்கமில்லாத அரக்கர்களுக்கு?'' என்கிறாள்.

மாரீசனைப் பலி கொடுத்தான்; பிறகு சீதையை வஞ்சிக்கிறான்; அடுத்து தர்மத்தைக் காக்க வந்த சடாயுவைக் குற்றுயிராக்கி வீழ்த்துகிறான். தன் ஆசையை முன்னிட்டு, பலிக்கு மேல் பலி கொடுத்துக் கொண்டே போகிறான்.

'எங்கடா போவது? நில்லு, நில்லு' என்று சொல்லிக் கொண்டே சடாயு வருகிறான்.

உத்தமன் தேவியை, உலகொடு ஓங்குதேர்
வைத்தனை ஏகுவது எங்கு? வானினோடு
இத்தனை திசையையும் மறைப்பேன், ஈண்டு, என
பத்திரச் சிறைகளை விரிக்கும் பண்பினான்:

(சடாயு உயிர்நீத்த 5)

உத்தமன் தேவியைத் தேரில் வைத்துக் கொண்டு எழுவது எங்கே? நீ செல்லும் திசையை மறைப்பேன் என்று வந்தவன் சீதாபிராட்டியை அஞ்சாதே எனச் சொல்லிவிட்டு இராவணனுக்குப் புத்தி சொல்லுகிறான்.

கெட்டாய் கிளையோடும்; நின் வாழ்வை எலாம்
சுட்டாய்; இது என்னை தொடங்கினை? நீ
பட்டாய் எனவே கொடு பத்தினியை
விட்டு ஏகுதியால், விளிகின்றிலையால்.

(சடாயு உயிர்நீத்த 8)

நீ சுற்றத்தாரோடு அழிவாய், உன் வாழ்வைச் சுட்டாய், இதை எதற்காகச் செய்தனை? நீ நாசமாவாய். இப்பத்தினிப் பெண்ணை விட்டுப் போய் விட்டால் நீ சாகமாட்டாய்.

பேதையே! இந்தப் பிழையைச் செய்துவிட்டாயே லோக மாதாவான சீதையை நீ யாரென்று நினைத்தாய்? உனக்கு

இனி ஆதரவாக யார் இருப்பார் என எச்சரிக்கின்றான். இராவணன் சடாயுவின் அறிவுரைகளைக் கேட்காமல், அவனுடன் யுத்தம் புரிகிறான்.

இருவரும் மும்முரமாக யுத்தம் செய்கிறார்கள்; முடிவில் இராவணன் சிவபெருமான் கொடுத்த வாளினால் சடாயுவின் சிறகுகளை வெட்டிச் சடாயுவை வீழ்த்தி விடுகிறான்.

சடாயுவினால் செய்தி ஒன்றும் வெளிப்படாது என்றே நம்புகிறான். ஆனால் சடாயுவோ குற்றுயிராய்க் கிடந்த நிலையிலும் இராமனிடம் முக்கியமான செய்திகளைச் சொல்லி விட்டுத் தான் மாண்டு போகிறான்.

இராவணன் பிராட்டியைத் தொட அஞ்சியவனாய் அசோக வனத்தில் சிறைவைக்கிறான்.

''வஞ்சியை அரக்கனும் வல்லை கொண்டுபோய்,
செஞ்செவே திருஉருத் தீண்ட அஞ்சுவான்,
நஞ்சு இயல் அரக்கியர் நடுவண், ஆயிடை,
சிஞ்சுப வனத்திடைச் சிறை வைத்தான் அரோ.''

(சடாயு 59)

(ஒழுக்கத்தினால் அன்று; சாபத்துக்குப் பயந்துதான்.)

இது நிற்க, பிராட்டியைத் தேடி அனுமன் அசோக வனத்துக்கு வருகிறான். அச்சமயம் இராவணனும் சீதையிருக்கும் அப் பூஞ்சோலைக்கு வருகிறான். அனுமன் மரக் கிளையில் மறைந்திருந்து நடப்பதைக் கவனிக்கிறான்.

அரக்கன் எவ்வளவு ஆடம்பரமாய் வருகிறான் பாருங்கள்.

சிகர வண்குடுமி நெடு வரை எவையும்
ஒரு வழித் திரண்டன சிவண,
மகரிகை வயிர குண்டலம் அலம்பும்
திண்திறல் தோள் புடை வயங்க,

சகர நீர் வேலே தழுவிய கதிரின்,
தலேதொறும் தலேதொறும் தயங்கும்
வகைய பல் மகுடம் இளவெயில் எறிப்ப,
கங்குலும் பகல்பட, வந்தான்.

(காட்சிப்படலம் 78

மலேகள் எல்லாம் ஒரிடத்திற்குத் திரண்டு வந்தது போன்ற தோற்றம் ஏற்படுகின்றது. அவனுடைய உருண்டு திரண்ட தோள்களே மகரகுண்டலங்கள் தொடுகின்றன. கடலில் சூரியோதயமானதுபோல் பத்துத் தலேகளிலும் உள்ள பொன் மகுடங்கள் இளவெயில் என ஒளிவீசுகின்றன, இரவையும் பகலாக்கும்படி.

சீதை இருக்கும் இடம் வந்ததும் ஏதோ ஒரு புனித பூமியில் அடியெடுத்து வைப்பதுபோல பாதரட்சைகளேக் கழற்றி வைத்துவிட்டு வருகிருன். அந்தப் பாதரட்சைகளே திலோத்தமை தலேமேல் தாங்கி வருகிருள்.

பிராட்டியின் இருப்பிடத்தை அறிந்திருந்தும் அதை அறியாது புதிதாய் தேடுகிறவன் போல் அங்கும் இங்கும் பார்த்துக் கொண்டே திகைப்புற்றவனுய் வந்து சேர்கின்ருன்.

இப்போது இங்கே மூவர் மனநிலேயையும் ஒரு சிறு பாட்டில் படம் பிடித்துக் காட்டுகின்ருன் கவி. அதாவது பிராட்டி, அனுமன், இராவணன் ஆகிய மூவர் மனநிலே கஃளயும் பார்க்கிருேம்!

கூசி ஆவி குலேவுறு வாளேயும்,
ஆசையால் உயிர்ஆசு அழிவாளேயும்,
காசு இல்கண் இணே சான்று எனக் கண்டனன்
ஊசல் ஆடிஉளேயும் உளத்தினுன்.

(காட்சி 99)

சீதை கூசிக் குலேந்து போன வண்ணம் காணப்படு கின்ருள். இராவணனே ஆசையால் நிலே தடுமாறிய

வனுய்த் தத்தளிக்கிருன். அனுமன் உள்ளமோ இனி என்னு குமோ என்று உளந்து ஊஞ்சலாடுகிறது நம்பிக்கைக்கும் அவ நம்பிக்கைக்கும் இடையே. இந்த நிலையில் தன் குற்ற மற்ற இரண்டு கண்களேயே சான்ருக அனுமன் இக்காட்சி யைக் காண்கிருனும்.

இவ்வளவு ஆடம்பரமாய் இராவணன் வந்தபோதிலும் சீதை தமுன் பணிந்தே பேசுகிருன்.

'அவ்விடத்து அருகுஎய்தி, அரக்கன்தான்,
எவ் இடத்து எனக்கு இன் அருள் ஈவது?
நொவ் இடைக்குயிலே! நுவல்க' என்றனன்,
வெவ் விடத்தை அமிழ்து என வேண்டுவான்'

(காட்சி 101)

அரக்கன் காம வெறியில் பேசும் வார்த்தைகள் எல்லாம் நாராசம் காய்ச்சி நடுச்செவியில் ஊற்றியதுபோல் இருந் தாலும் சீதை அவற்றைச் செவியில் வாங்கிக்கொள்ளாமலே இராவணனேத் துரும்பாக மதித்து அனல்கக்கும் வார்த்தை களேச் சொல்லுகிருள்.

இராமபாணம் மகாமேருவையும் ஊடுருவிச் செல்லும், விண்ணேயும் பிளந்து செல்லும், பதினுலு உலகங்களேயும் முடித்துவிடும் ஆற்றலும் உடையது. இத்தன்மை அறிந்து இருந்தும் அறிவில்லாமல் தகாத வார்த்தைகளேச் சொல்லு கிருய், அந்த பாணங்கள் வந்தால் உன் தலே பத்தும் உதிர்ந்து போகும் என்றும்,

பத்துஉள தலேயும், தோளும் பலப்பல பகழி தூவி,
வித்தக வில்லினுற்கு, திருவிளேயாடற்கு ஏற்ற
சித்திர இலக்கம் ஆகும்; அல்லது, செடுவில் ஏற்கும்
சத்தியை போலும்?—மேல்நாள், சடாயுவால் தரையில்
வீழ்ந்தாய்!

(காட்சி 119)

அம்பு போடும் வித்தையில் பழகுவோர் ஒரு சித்திர இலட்சியம் வைத்துக்கொண்டு பலப்பல அம்புகளை எய்வார்கள். அதுபோல இராமபிரானும் உன் பத்துத் தலைகளையும் கொய்து விடுவான். இது அவனுக்கு விளையாட்டாகவே தோன்றுமாம். அவ்வளவு எளிதாக உன் தலைகளை அறுத்துத் தள்ளிவிடுவான் என்பது குறிப்பு. சடாயுவால் தோற்கடிக்கப்பட்டு இராவணன் தரையில் விழுந்ததை நேரில் பார்த்தவளாதலால் அதையே எச்சரிக்கையாக நினைவூட்டுகிறாள்.

இப்படியெல்லாம் சொன்னதும் காமத்தையும் வென்று விட்டது இராவணன் சீற்றம். ஆனால் மறுகணமே சீற்றமும் காமமும் சரிசமமாகப் போரிடுகின்றன. கடைசியாக சீற்றத்தையும் வென்றுவிடுகிறது காமவெறி. சீதையின் பேச்சுக்கு ஏதேதோ சமாதானம் சொல்லுகின்றான். இரண்டு மாதத் தவணை கொடுக்கின்றான்.

பின்னர் அரக்கியர்களை நோக்கி இவளை எப்படியாவது வசப்படுத்திக் கொண்டபின் என்னிடம் வந்து தெரிவிக்க வேண்டும். இல்லாவிட்டால் நான் உங்களுக்கு நஞ்சாகிவிடுவேன் என்று சொல்லிவிட்டுப் போய்விடுகிறான்.

அனுமன் பிராட்டியின் சங்கடமான நிலையைத் தெரிந்து கொண்டதும் இராமநாமம் சொல்லி, தன்னை யாரென்று வெளியிட்டு அவளுக்கு ஆறுதல் சொல்லித் தேற்றுகிறான். அதன்பின் பிராட்டியிடம் கணையாழியைக் கொடுத்துச் சூடா மணியை அவளிடமிருந்து அடையாளமாகப் பெற்றுக் கொள்கிறான். பிறகு அசோக வனத்தை அழித்து ஜய கோஷம் செய்கிறான். இந்த ஓசை சிவதனுசை முறித்த ஓசைபோல் முழங்கி இராவணனுடைய இருபது செவிகளிலும் விழுந்து அவன் தலைகளையும் ஆட்டிவிடுகிறதாம்.

இராவணன் சம்புமாலியையும், சேனைத் தலைவர்கள் ஐவரையும், அப்பால் அட்சகுமாரனையும் அனுப்பிப் பலி கொடுக்கிறான்.

இறுதியில் இந்திரசித்து நாகபாசத்தால் அனுமனைக் கட்டிக்கொண்டு இராவணன் முன் இவன் வீரன் என்று அறிமுகப்படுத்துகிறான்.

அனுமன் தன்னை இராம தூதன் என்று அறிமுகப்படுத்திக்கொண்டதும் அப்படியானால் நீ ஏன் அசோகவனத்தை அழித்து அட்சகுமாரன் முதலானோரைக் கொன்றாய்? எனக் கேட்கிறான்.

பின்னர் இவனைக் கொல்லுங்கள் என்கிறான். உடனே நில்லுங்கள் எனத் தடுக்கிறான் வீடணன். தூதுவரைக் கொல்லுவது அடாத செயல் என்று அவனைத் தடுத்து தருமத்தினை எடுத்துரைக்கிறான்.

'கொல்மின்' என்றனன்! கொல்லியர் சேர்தலும்,
'நில்மின்' என்றனன், வீடணன் நீதியான்'

விபிஷணன் இராவணனைக் கைகூப்பி வணங்கி நீதி அறிந்தவனே உன் கோபம் முறையானது அன்று. நீ வேதங்களையெல்லாம் அறிந்தவன். மாதரைக் கொன்ற அரக்கர்களைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால் எந்த அரசராவது தூதுவரைக் கொன்றதாகக் கேள்விப் பட்டிருக்கிறோமா என்றும், தனது தங்கைக்கு நடந்த நிலையினைச் சுட்டிக் காட்டுகிறான்.

'இளையவள் தன்னைக் கொல்லாது, இருசெவி மூக்கொடு ஈர்ந்து,
''விளைவு உரை'' என்று விட்டார், வீரர் ஆய்! மெய்ம்மை ஓர்வார்;
களைதியேல் ஆவி, நம்பால் இவன் வந்து கண்ணின்கண்ட
அளவு உரையாமல் செய்தி ஆதி' என்று, அமையச் சொன்னான்!'

நமது தங்கையை மூக்கரிந்தவர்கள் அவளைக் கொல்லவில்லை. நடந்தவைகளைச் சொல்லு என்று அனுப்பிவிட்

டார்கள். அவர்கள் சத்திய வீரர்கள். அவர்கள் செய்த மாதிரி நாமும் நம்முடைய ஆற்றலைச் சொல்லும்படி இவனை உயிரோடு விடுவதே சரியாகும் என்கிறான்.

இராவணனும் இதை ஒப்புக்கொண்டு நல்லது உரைத்தாய் தம்பி என்று விபிஷணனைப் பாராட்டிய வண்ணம் 'அனுமன் வாலில் தீயிட்டு அதைப் பொசுக்கி அவனை அனுப்பிவிடுங்கள்' எனக் கட்டளையிடுகிறான்.

அனுமன் தன்வாலில் இட்ட தீயால் நகரையே கொளுத்துகிறான். அப்போது இராவணன் அந்தரத்திலே தங்கியிருக்கும்படி ஆயிற்று. அனுமன் கொளுத்தினாலும் நமக்கு அடிமையான தீக்கடவுளுக்குப் புத்தி எங்கே போயிற்று என்பது அவன் மனநிலை. இந்த மனநிலையோடுதான்,

'உண்ட நெருப்பைக்
கண்டனர் பற்றிக்
கொண்டு அணைக' என்றான்
அண்டரை வென்றான்.

(இலங்கை எரியூட்டு படலம் 47)

அனைத்துத் தேவர்களையும் தன் ஆணையால் ஆட்டிப் படைத்தான் என்பது தெரியவருகிறது. தேவர்கள் இவனை அஞ்சிப் பிடரியில் கால்பட ஓடினார்களாம்.

இதில் 'அண்டரை வென்றான் என்பது அந்தக்காலம் அது போய் விட்டது' என்பது குறிப்பு.

இந்த ஊர் தேடு படலத்திலே (சுந்தரகாண்டம்) 'இராவணன் பல மாதர்களைச் சிறைப்படுத்தி வைத்திருந்தான்' என்ற குற்றச்சாட்டிற்குரிய ஆதாரமும் உள்ளது.

இம்மாதர்கள் அவனை உள்ளபடி நேசித்ததாகவும், அந்த நேசத்திற்கு உரியவனாய் அவன் நடந்து கொள்ளவில்லை என்பதாகவும் நிரூபிக்கச் சான்றுகள் உள்ளது.

இராவணனுடைய அடிமை மாதர்களில் சிலர் இவனையே நினைத்துக் கொண்டு சித்திரங்கள் போல் அசைவற்றிருந்தார்களாம். இவனுடைய கடாட்சம் கிடைக்கவில்லையே என அழுது கொண்டிருப்பதால் என்ன பயன் என்று இவனை சித்திரத்திலாவது வரைந்து பார்த்துக்கொண்டிருக்கலாம் என எண்ணுகிறார்களாம் சிலர்.

'பாதகன் வீரத்தோள்களின் வீக்கம் நினைந்து உயிர்
சோரச் சோரத் துளங்குகின்றார் சிலர்'

அவன் தோளிலே துயில முடியவில்லையே என யாழினை மீட்டிப் பொழுது போக்குகிறார்களாம் சிலர்.

மண்டோதரியைக் கண்டதும் அனுமன் இவள் சீதை என மயங்குகிறான். பிறகு தன்னையே கடிந்து கொள்வான் போல் இராமனைக் காதலிக்கும் பெண் மன்மதனைக் கண்ட போதிலும் மயங்க மாட்டாளே; எனவே இவள் சீதையல்லள் என முடிவு கட்டுகிறான். மண்டோதரிக்கு அரம்பை,மேனகை, திலோத்தமை, உருப்பசி முதலானவர்கள் பணிபுரிந்தனர் என்பதும் குறிப்பிடப் பட்டுள்ளது.

சுந்தர காண்டத்தில் காணும் இந்த விவரங்களிலிருந்து இராவணன் எத்தனைப் பெண்களை அபகரித்துத் தன்னுடையவர்களாக்கி வைத்திருந்தான் என்பது தெரிகிறது.

மண்டோதரி தலைசிறந்த கற்பினள் ஆயினும் ஆற்றல் சால் பெண்மைக்கு இவளை உதாரணமாகக் காட்டமுடியாது; ஏனென்றால் இவளுக்கு இராவணனை திருத்தக்கூடிய ஆற்றல் இல்லை. அவனைத் தனக்குரிய இலட்சிய நாயகனாகவே மதித்திருந்தாள்; அவ்வளவுதான். அவனோ இவளைச் சிறிதளவும் லட்சியம் செய்யாமல் தன் இச்சைகளைக் கட்டுப்படுத்த முடியாமல் மனம்போன போக்குப்படி நடந்து கொண்டான்.

இராவணன் காம வெறி கொண்டிருந்தவனேயொழிய உண்மையான அகக்காதல் உடையவனல்லன். இராவணன்

மீதுள்ள குற்றச்சாட்டுகள் சுந்தர காண்டத்தில் அநுமன் காண்பதாக வரும் விவரங்களிலிருந்து உறுதிப்படுகின்றன.

யுத்த காண்டத்தில் உள்ள மந்திராலோசனை படலத்தை நோக்குபவர்கள் அயோத்தியா காண்டத்தில் வரும் தசரதன் மந்திராலோசனை படலத்தோடு ஒப்பு நோக்குவது சரியே.

தசரதன் மந்திராலோசனை நடத்துவதும் இராவணன் மந்திராலோசனை நடத்துவதும் முற்றும் அடிப்படையிலே முரண்படுகின்றன.

தசரதன் சிற்றரசர்களையும், நிர்வாக அதிகாரிகளையும், சுற்றத்தார்களையும் தன் ஆலோசனை சபையில் இடம் பெறுவதற்குரியர் அல்லர் என்று அவர்களைப் பரிவோடு நீக்குகிறான்.

ஆனால் இராவணனின் மந்திராலோசனையில் கலந்து கொள்பவர்களோ படைத்தலைவர் சுற்றத்தினர் முதலானோர்களே.

இந்தச் சபையில் நல்ல புத்தி சொன்ன விபிஷணனை இகழ்ந்து அச்சமுள்ளவன் என்றும், தேசத்துரோகி என்றும் குற்றம் சாட்டிக் கொன்று விடுவேன் என்று துரத்தி விடுகின்றான். (இதை ஏற்கனவே நாம் விபிஷணன் சரணாகதியில் கண்டுள்ளோம்.)

மகோதரனின் துர்ஆலோசனைப்படி, மாலியவானின் அனுபவத்தில் பழுத்த அறிவுரைகளை அறவே புறக்கணித்துத் தன் தோல்வியின் பயனாகச் சிறிதும் திருந்தாமல் வெறிச் செயல்களிலேயே மேலும் மேலும் ஈடுபடுகிறான்.

ஆள் மாருட்டம் :

ஆள் மாருட்டம் இன்றும் கடுந்தண்டனைக்குரிய ஒரு பெரிய குற்றமாகும்.

இத்தவறை இராவணன் புரிந்தாக மாய சனகப் படலம் தெரிவிக்கின்றது.

கும்பகர்ணன் வீர தர்ம உணர்ச்சியுடன் போர்க்களத்தில்விளைத்த அரும்பெரும் செயல்களைக் கவிஞன் 'பேரெழில் ஆண்மை' என்று குறிப்பிடுகின்ருன். கும்பகர்ணன் பார்ப்பதற்கு அழகுள்ளவன் இல்லை. ஆனல் அவனுடைய சாகசச் செயல்களே பேரழகு வாய்ந்த ஆண்மைச் செயல்கள் என்பது கவியுள்ளம். இதற்கு நேர் எதிர்மாருக உள்ளது இராவணன் செய்த சிறுமைத் தொழில்.

இராவணன் மகோதரனிடம் எப்படியாவது சீதையின் மனத்தை மாற்ற வேண்டும். நீயே இதற்கு ஒரு வழி செய்வாயாக என்கிருன்.

அதற்கு மகோதரன் அப்படியே செய்வேன். சனகனே வந்து உன்னை அடையும்படி தன் மகளுக்குப் புத்தி சொல்வாள் என்கிருன். அதெப்படி அவ்வளவு எளிதாக முடியுமா என்று இராவணனும் திகைத்துப் போகிருன். உடனே மகோதரன் நம்முடைய மருத்தனுக்கு வேடம் புனைந்தால் காரியம் சித்தியாகிவிடும் என்கிருன்.

உடனே இராவணன் மகிழ்ந்து அப்படியே செய்வாய் எனச் சொல்லிவிட்டுச் சீதையின் இருப்பிடம் வருகின்ருன். காமாந்தகாரத்தினல் நெஞ்சிலே தோன்றியதையெல்லாம் சொல்லத் தொடங்குகின்ருன்,

வஞ்சனேன் எனக்குநானே மாதர் வடிவு கொண்ட
நஞ்சுதோய் அமுதம் உண்பான் நச்சினேன்; நாளும்தேய்ந்த
நெஞ்சு நேரான; உம்மை நினைப்பு விட்டு, ஆவி நீக்க
அஞ்சினேன்; அடியனேன் நும் அடைக்கலம், அமுதின்
வந்தீர்!

(மாயா சனகப்படலம். 10)

நான் உன்னை வஞ்சித்து விட்டதாக மனப்பால் குடித்தேன். ஆனால் உன்னை என் நெஞ்சுச் சிறையில் வைத்துக் கொண்டது எனக்கே ஆபத்தாகி விட்டது. [பெண் வடிவு நஞ்சு என்று குறிப்பிட விரும்பியவன், விஷம் கலந்து படைத்திருக்கும் அழகிய உணவு என்றே குறிப்பிடுகிறான்] நஞ்சு தோய் அமுதம் என்பது தெரிந்திருந்தும் அதை உண்ணும் ஆசை மேலிடுகிறது பெரும் பசியுடையவனைப் போல. இத்தகைய ஆசையுடன் நாள்களைக் கழித்து வருவதால் என் மனமும், நெஞ்சும் தேய்ந்ததுதான் பலன். ஏன் இந்தக் கஷ்டம் மறந்து விடலாமே என்று சொன்னால் உம்மை எப்படித்தான் மறப்பதோ தெரியவில்லை. 'என்னை நினைப்பானேன்' என்பீர் ஆயின், கண்ணுக்கு நேராக உட்கார்ந்திருந்தால் கண்களை மூடிக்கொள்ளலாம், ஆனால் அகக் கண்ணுக்கு நேரே அல்லவா அமர்ந்திருக்கிறீர். உம்முடைய நினைப்பை விடுவது என்றால் எனக்கு ஆவியை விடுவது போலத்தான். சாவைக்குறித்துச் சற்றும் அஞ்சாத எனக்கும் இப்போது அச்சம் உண்டாகிறது. ஆவிநீக்க அச்சம் கிடையாது. ஆனால் ஆவி போனால் உம்முடைய நினைப்பும் போய்விடுமே என்ற பயந்தான். ஆதலால் அடியேன் நும் அடைக்கலம்' என்று சரணடைகின்றேன்,

என சாஷ்டங்கமாகத் தண்டனிட்டு, பாதகாணிக்கையாக வைப்பது போல் பத்து கிரீடங்களும் நிலத்தின்மீது படுமாறு விழுந்து வணங்குகின்றான்.

இது கண்ட சீதை 'போர்க்களத்தில்' நீ ஸ்ரீராமனைப் பார்க்கவில்லை போலும்! பார்த்திருந்தால் இவ்வாறெல்லாம் பேசமாட்டாய்.

'வாசவன், மலரின் மேலான், மழுவலான் மைந்தன்,
மற்றுஅக்
கேசவன் சிறுவர் என்ற இத் தன்மையோர் தம்மைக்
கேளாய்

'பூசலின் எதிர்ந்தேன்' என்ருய்; போர்க்களம் புக்கபோது,
என்
ஆசையின் கனியைக் கண்ணின் கண்டிலை போலும், அஞ்சி'
(மாயா சனக–21)

என்று சொல்லி விட்டு "நான் விரதமிருந்து கஷ்டப்பட்டதெல்லாம் என் புண்ணிய மூர்த்தியாகிய ஸ்ரீராமனைக் காண்பதற்குத்தான்' என்கிருள். இவ்வாறு சொல்லிக்கொண்டிருக்கும் போதே மாயாசனகன் அங்கு வருகின்ருன்.

சீதை மாயாசனகனைத் தன் தந்தையான சனக மகாராஜா என்றே மயங்குகிருள். ஆனல் அந்தச் சனகன் வாய்திறந்து இராவணனுக்கு இணங்கி விடுமாறு புத்தி சொல்லி வற்புறுத்தியதும்,

இப்படிச் சொல்கிறவன் என் தந்தையாக இருக்க முடியாது. (உண்மையாகவே அத்தந்தை இப்படிச் சொன்ஞல் அவன் என் தந்தையல்லன் என்று துறந்து விடுவேன் என்பதே இப்பாடலின் குறிப்பு)

ஆயிர நாமத்து ஆழி அரியினுக்கு அடிமை செய்வேன்—
நாயினை நோக்குவேனே, நாண் துறந்து, ஆவிநச்சி?
(மாயா சனக—57)

இராமபிரானுக்கு அடிமை வேலைகளைச் செய்வேனே தவிர இந்த நாய் போன்றவனுக்கு; உயிரே போஞலும், நாணத்தைத் துறந்து உடன்பட மாட்டேன் என்கிருள்.

இது கேட்ட இராவணன் சினந்து வாள் கொண்டு சனகன் உயிர் வாங்குவேன் என வாளை உருவுகிருன்.

சீதை என்னையும் கொன்று விடு என்கிருள்.

இந்தச் சமயத்தில் மகோதரன் குறுக்கிட்டு இந்தச் சனகன் உனக்காக வேண்டியதைத் தவிர வேறு என்ன பிழை

செய்தான்? இவனைக் கொன்றால் அவள் துயரம் அதிகரிக்கும்; எனவே அவள் உன் வசப்படுவது சாத்தியமாகுமா என்று தடுக்கிறான்.

இவ்விதமாக இந்த நாடகம் முடிவு பெறுகின்றது.

இவ்வாறு தன்னுடைய ஆசையை நிறைவேற்றிக் கொள்வதற்காகவே இராவணன், நல்லறிவு சொன்ன கும்பகருணன், தன் மகன் இந்திரசித்து, மற்றும் எல்லோரையும் பலி கொடுக்கிறான்.

கடைசியாகத் தானும் தன் உயிரைக் கொடுத்துப் பழி கொள்கிறான். இராவணன் இறந்து கிடக்கும் காட்சியைக் கண்ட விபிஷணன் அவனை குறித்துப் பலவாறு புலம்புகிறான்.

உண்ணுதே உயிர் உண்ணுது ஒடு நஞ்சு;
சனகி எனும் பெரு நஞ்சு உன்னைக்
கண்ணாலே நோக்கவே, போக்கியதே
உயிர்; நீயும் களப் பட்டாயே!

(இராவணன் வதை. 218)

உயிரைக் கொல்லும் நஞ்சு சானகி என்று எச்சரித்தேன்; நீ கேட்கவில்லை.

ஒருவனைக் காதலித்து அவனுக்கே உரியவளாகிவிட்ட குலமகள்மீதுள்ள பேய் ஆசையைத் தவிர்ப்பாய், இதுபெரும் பழியினைத் தேடிக்கொடுக்கும் என்றேன். அதைக்கேட்காமல் அநியாயமாய் அழிந்து போனாயே!

அன்று தீக்குளித்த தெய்வக் கற்பினளாகிய வேதவதி வேறு யாருமில்லை, லோகமாதாவான சீதைதான் என்று உறுதியாகக் கூறினேன், நீ அதை அறிந்து கொள்ளாமல் இராமனால் அழிந்தாயே! இராமன் உலகநாதனாய் இருக்க ''நரன்கொலாம் உலகநாதன்'' என்று நீ சிரித்தாய். சூர்ப்பணகையின் கணவனை திக்விஜய காலத்தில் கொன்று

விட்டதற்காக அவள் பழி வாங்கி விட்டாளே என்கிருன். சூர்ப்பணகையைப் "பல்லாலே இதழ் அதுக்கும் கொடும் பாவி" என்று குறிப்பிடுகின்ருன்.

இராவணன் குலத்தை மூல நாசம் செய்த சூர்ப் பணகையை (பல்லாலே ·இதழ் அதுக்கும்) கொடும்பாவி என்று திட்டுகிருன்.

[இதிலிருந்து இராவணன் மற்ெருரு குற்றத்திற்குரிய சான்று கிடைக்கிறது. விபிஷணன் "கொல்லாத மைத்துன னைக் கொன்ருய்" என்கிருன். அதாவது சூர்ப்பணகையின் கணவனைக் கொன்ருய். அதனல்தான் அவள் உன்னை இவ் வாறு பழிவாங்கி விட்டாள் என்கிருன்.]

தீமைக்கே அர்ப்பணிக்கப்பட்ட இராவணன் பராக் கிரமம் அல்வழியை விட்டு நல்வழியைப் பிடித்து இருக்கு மானல் உலகத்திற்கு எவ்வளவு நன்மை ஏற்பட்டிருக்கும் என்ற கருத்தை உட்கொண்டு விபிஷணன் நீ போர் மகளைத் தழுவினய். (யுத்தத்தில் மகாசூரன் என்பது குறிப்பு) புகழ்மகளைத் தழுவினய். அவர்கள் பொருமைப்படும்படி திருமகளான சீதாபிராட்டி மீது ஆசைகொண்டு பழி சுமந்து பைத்தியக்காரனைப் போல் பார்மகளைத் தழுவுகிருயோ! என்று இராவணன் பிரதாபங்களைக் கூறிப் புலம்புகிருன்.

அளவிலாத ஆசையால் அழிந்த இராவணனுக்கு மண்ணைத் தழுவும் பாக்கியந்தான் கிடைத்தது! அவனது தீமைகளை அவன் தானே அறுவடை செய்ய வேண்டும்!

# 11. எல்லாம் அறுபதினாயிரம்!

தசரதச் சக்கரவர்த்தி அறுபதினாயிரம் ஆண்டுகள் ஆட்சி செய்ததாக கம்பராமாயணம் தெரிவிக்கின்றதே அது எப்படிப் பொருந்தும் என்பது யாரும் கேட்கக் கூடியதுதான்.

அறுபதினாயிரம் என்பதற்கு வேறு விசித்திரமான பொருள்களும் பண்டிதர்கள் கூறுவதுண்டு. இது சரியன்று; அறு+பதினாயிரம்=பதினாயிரத்தில் பாதி ஐயாயிரம் என்பர்.

''வெய்யவன் குலமுதல் வேந்தர், மேலவர்,
செய்கையின் ஒரு முறை திறம்பல் இன்றியே,
வையம் என்புயத்திடை, நுங்கள் மாட்சியால்,
ஐ—இரண்டு ஆயிரத்து ஆறு தாங்கினேன்''

என்ற பாட்டிலிருந்து சக்கரவர்த்தி அறுபதினாயிரம் ஆண்டுகள் ஆட்சி செலுத்தி வந்தான் என்பதுபுலப்படுகிறது. எனினும் இதைக் கதைப் போக்கிலிருந்து மிகப் பல ஆண்டு களாக ஆட்சி செலுத்தி வந்தான் என்றே நாம் கொள்ள வேண்டும். உயர்வு நவிற்சியே தவிர உண்மை எனலாகாது. தசரதனுக்கு அறுபதினாயிரம் மனைவியர் இருந்தார்கள் எனப் புராண ரீதியில் மக்கள் நம்புகிறார்களே தவிர, கம்ப ராமாயணத்தில் இதற்குத் துளிகூட ஆதாரம் கிடையாது.

''அறுபதினாயிரர் எனினும், ஆண் தகைக்கு
உறுதியில் ஒன்று இவர்க்கு உணர்வு என்று உன்னல ஆம்
பெறல் அருஞ்சூழ்ச்சியர்; திருவின் வெட்பினர்;—
மறி திரைக் கடல் என வந்து சுற்றினர்''

(மந்திரப் படலம் 10)

இப்பாட்டில் அறுபதினாயிரம் மந்திரப் பிரதிநிதிகள் என்று கவி கூறியுள்ளதிலிருந்து இது ஒரு ஜனப்பிரதிநிதி சபையாகவே கருதப்பட வேண்டும் என்பது குறிப்பு.

இதிகாசம் எனும்போது அதில் சில இயற்கை மீறிய நிகழ்ச்சிகளும் உயர்வு நவிற்சிகளும் இருப்பது ஒருவகை அழகு! இது தர்க்க ரீதியாக எடுத்து ஆராயத்தக்க ஒரு பெரிய செய்தியன்று!

## 12. ஓங்கி உலகளந்த உத்தமன்

பண்டிதர் உலகைக் கலக்கி வரும் ஒரு முக்கியமான பிரச்சினையை எழுப்பிச் சற்று ஆராயலாம்.

மாவலியின் கதையை எடுத்துக் கொள்வோம். இக் கதை பாலகாண்டத்தில் விசுவாமித்திரனின் கூற்ருக வருகிறது.

இவ்வுலகம் அஞ்சும்படியான ஆற்றலினை உடையவன் மாவலி. அவன் இவ்வுலகத்தோடு வானுலகத்தையும் அபகரித்துக் கொண்டதாய் விசுவாமித்திரன் கூறுகின்ருன்.

தான் கொள்ளையடித்த செல்வங்களையெல்லாம் தான மாக அந்தணர்களுக்கு வாரி வழங்குகின்ருன். இதை தீச் செயல் என்று தேவர்கள் கருதி இந்தத் தீமையைத் தடுத்து நிறுத்த வேண்டும் என திருமாலை வேண்டிக் கொள்ள திருமாலும் அதற்கு உடன்படுகிருன்.

''தீயவன் வெந்தொழில் தீர்'' என்பது அவர்கள் வேண்டு கோள்.

காசிப முனிவருக்கு ஒரு அருமையான பிள்ளையாகத் திருமால் அவதரிக்கின்ருன். இதுதான் வாமன அவதாரம்.

'நீல நிறத்து நெடுந்தகை வந்து,ஓர்
ஆல் அமர் வித்தின் அருங்குறள் ஆனன்'

என்று இவ்வவதாரத்தினை கவி வசீகரமாகக் குறிப்பிடு கின்ருன். 'மாணிக்குறளன்' என்பார் ஆழ்வார்.

மூன்று வடமாகிய பூணூல் அணிந்து முஞ்சம் என்னும் புல்லால் ஆகிய அரைஞாண் பூண்டு, வித்தை கற்கும்

நாவொடு, அக்கினி கோத்திரம் செய்யும் கையுமாய் வருகிற வாமனனை 'அற்புதன்' என்று கவிஞன் குறிப்பிடுகின்றான்.

அற்புதனாகிய இறைவனை அறிவோரும் அற்புதர்களாகி விடுகிறார்களாம். இத்தகைய அற்புதர்கள் திருமாலின் ஞான வடிவை அதாவது வித்தில் அடங்கும் ஆலமரம் போன்ற சொருபத்தை அறிந்து கொள்வார்களாம்.

இப்படிப்பட்ட வாமனன் வந்ததும் உலகெல்லாம் வென்ற மாவலி எதிர் கொண்டு வந்து உபசரிக்கின்றான்.

> "நின்தனின் அந்தணர் இல்லை; நிறைந்தோய்!
> என்தனின் உயர்ந்தவர் யார் உளர்?"
>
> (வேள்விப்படலம்—22)

உன்னைக் காட்டிலும் உயர்ந்த அந்தணன் இல்லை என்று உபசரிப்பதோடு நில்லாமல் என்னைக் காட்டிலும் உயர்ந்து போனவர்களும் இல்லை என்கிறான், ஆணவத்திமிருடன்.

அதற்கு வாமனன் மாவலிக்கு முகஸ்துதியாக, "விரும்பினவர்களின் விருப்பத்திற்கு மேல்பட வாரிவீசும் வள்ளலே! உன்னிடம் வரும் யாசகர்கள் எல்லாம் மாட்சிமை உடையவராகின்றனர். கரவாது உவந்து ஈயும் உன்னிடம் ஏற்பதும் ஏர் உடைத்து அல்லவா?"

மாவலி, "அந்தணனே! உனக்கு என்ன தேவை" என்று இறுமாப்புடன் வினவ வாமனன் மூவடி மண்தான் எனக்கு வேண்டும்; அதை முடியுமானால் அருள்வாய் என்கிறான்.

அதைத் தந்தேன் என்று சொன்னதும் அசுரகுருவான சுக்கிராச்சாரியார் தடுக்கிறார். "இது வஞ்சகம். அண்டமெல்லாம் உண்ட திருமால்தான் குள்ளனாய் வந்திருக்கிறான்" என எச்சரிக்கிறார்.

என்னுடைய ஒரு கைக்குக் கீழே திருமாலின் இருகை விரிகின்றதென்றால் இதைவிட எனக்கு வேறு என்ன

பாக்கியம் உண்டு என்று ஈவது விலக்குகின்ற சுக்கிராச்சாரியாரைக் கண்டித்து ''அறிவு இல்லாமல் பேசுகின்றீர்! வள்ளல்கள் உயிரையும் கொடுத்து யாசகர்களை ஆதரிப்பார்கள்; கொள்ளுவது தீது கொடுப்பது நன்று இதுவே என் சித்தாந்தம்'' என்கிறான்.

''மாய்ந்தவர் மாய்ந்தவர் அல்லர்கள்' மாயாது
ஏந்திய கைகொடு இரந்தவர்;—எந்தாய்!
வீந்தவர் என்பவர்; வீந்தவரேனும்,
ஈந்தவர் அல்லது இடுந்தவர் யாரே?

(வேள்விப்படலம்—29)

இறந்தவர்களெல்லாம் இறந்தவரல்லர். சாக மாட்டாடாமல், பிச்சைக்குக் கையேந்தி நிற்பவரே இறந்தவர். இறந்தவருள்ளும் இருந்தவர் ஈந்தவர்களே என்கிறான் மாவலி. எனக்குப் பகைவன் இப்போது நீர்தான் என்று குருவை நோக்கிப் பேசிய வண்ணம் கொடுப்பதைத் தடுக்கின்ற பாவியாகிய நீர், உம் சுற்றத்தார்களை உடுக்க உடையும், உண்ண உணவும் இல்லாமல் திரிய விடப் போகிறீர் என்று குருவைச் சபிப்பது போல் பேசித் தீர்க்கிறான். ''கொடியோய்'' என்கிறான்.

பிறகு, குருவைப் புறக்கணித்து வாமனனை நோக்கி, ''அடி ஒரு மூன்றும், நீ அளந்து கொள்க'' என்று மாவலி தானத்திற்கு அடையாளமாகத் தண்ணீர் வார்த்ததும், குள்ளன் தன் சிறு கைகளை அந்த நீரில் நீட்டினான், அந்த தானத்தை ஏற்றுக்கொள்ளுவதற்கு அறிகுறியாக.

குளத்திலிருந்து அப்பொழுது கொண்டு வந்திருந்த தண்ணீர் கையில் பட்டதும் பெற்றோரும் இகழ்கின்ற குள்ளன், பார்த்தவர்களெல்லாம் வெருண்டு பிரமிக்கும்படி வானளாவி வளர்ந்து நிற்கின்றான்.

'உயர்ந்தவர்க்கு உதவிய உதவி ஒப்பவே' என்பது கூர்ந்து கவனிக்கத்தக்கது.

''உதவி வரைத்தன்று உதவி; உதவி
செய்யப்பட்டார் சால்பின் வரைத்து''

என்னும் குறள் இங்கே கம்பன் வாக்கில் எதிரொலிக்கிறது.

உதவி என்பதற்கு அதைச் செய்த அளவுக்குத்தான் மதிப்பு என்பதில்லை; அந்த உதவியைப் பெற்றுக் கொண்டவர்களின் பண்பாட்டின் உயர்வே உதவியின் பெருமையாகும்!

வாமனன் திரிவிக்கிரமனாக வளர்ந்ததற்கு உவமானமாக உயர்ந்தவர்க்கு உதவிய உதவி ஒப்பவே என்பது கொடுக்கப்பட்டிருக்கிறது.

நின்றதால் பூமியை நிரப்பி அப்பால் செல்ல இடமின்றி இருக்க, வான வெளியில் சென்ற திருவடி அண்ட வெளியிலே போதுமான இடமின்றி மீள்கிறதாம். இந்த நிலையில் மூன்றாவது அடிக்கு இடமெங்கே? எனவே வாமனனுக்கு மாவலி வாக்களித்தபடி மூவடி மண் கொடுக்க இயலவில்லை.

மூன்று உலகங்களும் தேவேந்திரனுக்கு உரியது என்று மாவலி அபகரித்துக் கொண்ட உலகங்களைக் கொடுத்து விட்டுத் திருமால்தான் பாற்கடலில் பள்ளி கொள்ள போய் விடுகிறான். உலகெல்லாம் இப்படிக் கடந்த இரண்டு திருவடிகளையும் திருமகளான மகாலெட்சுமி, இந்தக் கால்கள் நெகிழ்ந்தனவோ என்று நோவு போக்குமாறு பிடிக்கிறாளாம். இவள் கைப் பட்டவுடன் கால்கள் சிவந்து காட்டுகின்றனவாம்.

மாவலி சம்பந்தட்ட வரை அவன் செருக்கழித்து உள்ளபடி திருமாலின் பரம பக்தருள் ஒருவனாக ஆகிவிட்டான் என்பது கதையின் பொருளும் பயனுமாகும்.

இப்படி மாவலியை இறைவன் ஆட்கொண்டான் என்பதை உணராமல் அவன் ஏமாற்றப் பட்டான் என்று

அநுதாபப்படுவது போல் இளம் பண்டிதர்கள் பேசுவது கம்பன் கதைப் போக்கினையும் பாடல்களையும் உள்ளவாறு உணர்ந்து கொள்ளவில்லை என்பதைத்தான் புலப்படுத்துகிறது.

இப்படிப்பட்ட மாவலி கதையின் முடிவில் இன்னும் ஒரு கருத்து விளங்குகிறது எனக்கு. திருமகள் இல்லாமல் நிகழுகிறது வாமன அவதாரம். எனவே திருமாலின் சத்தியே அருளைக் காட்டிலும் அதிக அளவில் புலனாகிறது.

வாமன அவதாரத்தை அடுத்து வருவது இராமாவதாரம். இங்கே ஆற்றலும், அருளும் போட்டியிட்டு மக்களை ஆட்கொள்ளுகின்றன.

வாமன அவதாரத்தில் பிரிந்திருக்கிற திருமகளே இராமாவதாரத்தில் சீதாபிராட்டியாகத் தோன்றி இராமாயணத்தை சீதையின் பெருங் கதையாக ஆக்கி விடுகிறாள் என்பது பிரசித்தம். தான் திட்டப்பட்டாலும், இகழப்பட்டாலும் தேவர் வாழ, அறம் வாழ உரியது செய்யவேண்டுமென்று வந்த வாமனனை "ஓங்கி உலகளந்த உத்தமன்" என்று புகழ்ந்தாள் ஆண்டாள். தான் சிறுமைப் பட்டாவது பிறரை வாழ வைப்பவன் உத்தமனே!

★

wrapper printed by:
prabhu printing house. madras-600017.